IslamHouse.com
مركز أصول
Osoul Center
www.osoulcenter.com
Rabwah

தமிழ
Tamil
تاميلي

# பெண்கள் முகம் மறைப்பது வணக்கமா? வழக்கமா?

## ஐயங்களும் தெளிவுகளும்

ஆக்கம்
கலாநிதி. ரிஷாத் முஹம்மத் ஸலீம்

# هل النقاب
# عبادة أم عادة؟

## (شبهات وردود)

المؤلف

د. رشاد محمد سليم

Tamil

தமிழ்

تاميلي

بسم الله الرحمن الرحيم

அளவற்ற அருளாளனும்
நிகரற்ற அன்புடையோனுமாகிய
அல்லாஹ்வின் பெயரால்...

مركز أصول
Osoul Center
www.osoulcenter.com

உஸூல் நிறுவனம்

இந்நூலின் மூலப்பிரதி உஸூல் நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டதாகும். இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்துப் படங்களினதும் உரிமை இந்நிறுவனத்தையே சாரும். இதில் எவ்வித மாற்றங்களும் செய்யாமலும், வெளியீட்டாளரின் பெயரைக் (உஸூல் நிறுவனம்) குறிப்படும் நிபந்தனையுடனும் இதனை அச்சிட்டு வெளியிட எமது நிறுவனம் அனைத்து முஸ்லிம்களுக்கும் அனுமதியளிக்கின்றது. அச்சிடும் போது இந்நிறுவனத்தின் அச்சுத் தரங்களைக் கடைபிடிக்குமாறும் நிறுவனம் வேண்டிக் கொள்கின்றது.

+966 504 442 532
+966 11 445 4900
+966 11 497 0126
P.O.BOX 29465 Riyadh 11457
osoul@rabwah.com
www.osoulcenter.com

# உள்ளடக்கம்

| | |
|---|---|
| அணிந்துரை | 09 |
| முன்னுரை | 13 |
| 1. நான்கு அடிப்படைகள் முதலாவது அடிப்படை: | 17 |
| விதியும் விதிவிலக்கும் இரண்டாவது அடிப்படை: | 17 |
| இபாதத், ஆதாத் - இரண்டிற்குமுள்ள வேறுபாடுகள் மூன்றாவது அடிப்படை: | 18 |
| முகம் மூடும் சட்டம் வணக்கமாக்கப்பட்ட ஆண்டு நான்காவது அடிப்படை: | 19 |
| முகம் திறக்க அனுமதிக்கப்பட்ட பெண்கள் | 20 |
| 2. நிகாப் எனும் முகத்தை மறைக்கும் ஆடை இஸ்லாத்தில் உண்டா? | 23 |
| 3. கறுப்பு நிற ஆடை அணியலாமா? | 27 |
| 4. முகம் மூடுவதற்குரிய ஆதாரங்கள் | 29 |
| முதலாவதாக, குர்ஆனிலிருந்து ஆதாரங்கள் | 29 |
| இரண்டாவதாக, ஹதீஸிலிருந்து ஆதாரங்கள் | 35 |
| மூன்றாவதாக, பகுத்தறிவு ரீதியான ஆதாரங்கள் | 39 |
| 5. சந்தேகங்களும் விளக்கமும் | 41 |
| 6, ஹிஷாப் எனும் சட்டம் நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்களுக்கு மாத்திரமா | 67 |
| 7, தவறாக புரியப்பட்ட ஸூரா அஹ்சாபின் 59-ம் வசனமும் அதற்கான தெளிவும் | 77 |

| | |
|---|---|
| 8, முகத்தை மூடுவது ஹராம் என முதலில் கூறியவர்கள் | *85* |
| 9, முகம் மூடுவதின் சட்டம் | *87* |
| 10, முகம் மூடும் கலாச்சாரம் சவூதி அரேபிய இறக்குமதியா? | *89* |
| 11, ஹிஷாபுக்கு எதிரான கோஷம் எப்போது, எங்கே ஆரம்பமானது | *91* |
| 12, நான்கு மத்கப்களின் கருத்துக்கள் | *93* |
| முக்கியக் குறிப்புகள் | *99* |
| முடிவுரை | *101* |
| உதவிய நூல்கள் | *103* |

# அணிந்துரை

எல்லாப் புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே! ஸலவாத்தும் ஸலாமும் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர் மற்றும் தோழர்கள் மீதும் உண்டாகட்டுமாக!

இஸ்லாம் உறுதியான கொள்கையும், ஒழுக்க விழுமியங்களும், உயர்ந்த பண்பாடுகளும் மிக்க ஒரு சமுதாயத்தை உருவாக்கவே விரும்புகிறது. இந்த இலக்கை அடைவதற்குத் தேவையான அனைத்து அம்சங்களையும் மிகத் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளது. இந்தவகையில் ஆண்களுக்கும் பெண்களுக்குமான ஆடை அணிகலன்களை அவர்களுக்குரிய உடல் அமைப்பையும் உணர்வுகளையும் கருத்திற்கொண்டு வரையறை செய்துள்ளது.

ஒரு பெண் பேணவேண்டிய ஆடை முறையில், அவள் தனது முகத்தை மூடுவது என்பது கட்டாயமானதா அல்லது அவள் விரும்பினால் திறக்க அனுமதி உள்ளதா என்ற வாதப்பிரதிவாதம் இஸ்லாமிய அறிஞர்கள் மத்தியில் நீண்டகாலமாக இருந்து வருகிறது.

ஆனால் அண்மைக்காலமாக எகிப்து போன்ற ஒரு சில நாடுகளில் உள்ள பகுத்தறிவுவாத சிந்தனையாளர்கள் சிலர் பெண் முகத்தை மூடுவது ஒரு பாவமான காரியம் என எழுதவும் பேசவும் ஆரம்பித்தனர். இந்தக் கருத்துத் தமிழ் உலகிலுள்ள பகுத்தறிவுவாதிகளிடமும் செல்வாக்குச் செலுத்த ஆரம்பித்துள்ளது. பெண்கள் முகத்தை மூடக் கூடாது. அது ஹராம். முகத்தை மூடும் பெண்கள் மறைமுகமாக நபி (ஸல்) அவர்களின் மனைவியரின் அந்தஸ்த்தை அடைய முயற்சிக்கின்றனர் என்ற பிரச்சாரத்தில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். இந்தக் கருத்து ஆபத்தானது. முஸ்லிம் சமுதாயத்திலுள்ள எந்தவொரு அறிஞராலும் முன்வைக்கப்படாத ஒரு வழிகெட்ட கருத்தே இது.

இக்கருத்தின் வழிகெட்ட தன்மையை தெளிவுபடுத்தும் நோக்கில் என் பாசத்திற்குரிய நண்பர் அஷ்ஷெய்க் கலாநிதி ரிஷாத் அவர்கள், பெண்கள் முகம் மறைப்பது வணக்கமா வழக்கமா? என்ற இந்த ஆய்வு நூலை எழுதியுள்ளார். இஸ்லாமிய ஆய்வு மரபைப் பேணி இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. பெண்கள் முகத்தை மூடுவது இஸ்லாத்தில் உள்ள ஓர் அம்சம் என்பதை அல்குர்ஆன், ஆதாரபூர்வமான சுன்னா ஆதாரங்களுடனும் மற்றும் ஆரம்பகால இஸ்லாமிய அறிஞர்களின் கூற்றுகள் மூலமும் மிக அழகிய முறையில் நிறுவியுள்ளார்.

அத்துடன் முகம் மூடுவது கூடாது. அது ஹராம் என்ற வழிகெட்ட கருத்தை முன்வைப்போர் எடுத்து வைக்கும் ஆதாரங்களுக்கான மறுப்புகளையும் அறிவுபூர்வமாக முன்வைத்துள்ளார்.

இது காலத்திற்குத் தேவையான அருமையான ஒரு நூல். அல்லாஹ் நூலாசிரியரின் முயற்சிகளைப் பொருந்திக் கொள்ள வேண்டும்.

அஷ்ஷெய்க் ரிஷாத் அவர்கள் தனது கலாநிதிப் பட்டப்படிப்பின் இறுதிக்கட்ட வேலைப்பழுக்களுக்கு மத்தியில் எழுதிய இந்நூலை சகலரும் வாசித்துப் பயன்பெற வேண்டும்.

நூலாசிரியர் இவ்வாறான ஆய்வு நூல்களை தமிழுலகிற்கு இன்னும் தர வேண்டும். அதற்கு அல்லாஹ் தவ்ஃபீக் செய்வானாக!

**கலாநிதி எம்.எல். முபாரக் மதனி**

பணிப்பாளர், தாருல் ஹுதா அரபு இஸ்லாமியக்

கற்கைகள் மகளிர் கல்லூரி, மருதமுனை.

*2019-04-02*

# المقدمة

إن الحمد للـه، نحمده، ونستعينه، ونستغفره، ونعوذ بالـله من شرور أنفسنا، وسيئات أعمالنا، من يهده الـله فلا مضلَّ له، ومن يُضلل فلا هادي له، وأشهد أن لا إلٰه إلا الـله وحده لا شريك له، وأشهد أن محمداً عبده ورسوله، صلى الـله عليه، وعلى آله، وأصحابه، ومن تبعهم بإحسان إلى يوم الدين، وسلّم تسليماً كثيراً. أما بعد:

فبتوفيق من الله سبحانه وتعالى قمت بتأليف كُتيّب صغير باللغة التاملية وسميته: (( هل النقاب عبادة أم عادة؟))، ومن أهم أسباب اختياري لهذا الموضوع هو الرد على فئة تأثرت بأفكار منحرفة وهي تدعي لنفسها اتباع الكتاب والسنة. منها: الحكم بتحريم ستر الوجه، وأنه عمل يسبب دخول النار، وأنه خاص بأزواج النبي صلى الله عليه وسلم، مما أدى ذلك إلى إحداث ضجة في مجتمع الناطقين بالتاميلية.

وبناء على طلب جمع غفير من الإخوة والأخوات لمواجهة هذا الرأي تصدّيت لحماية المسلمين الناطقين بالتاميلية من آرائهم الجريئة الغريبة الحمقاء، وذلك بعد قراءة عدد من الكتب في هذا الموضوع.

ختاما: فإني أتوجه بخالص الشكر والتقدير بعد شكر الله العلي القدير لكل من بذل جهدا أو أعان برأي، أو فكرة، وأخص بالشكر والتقدير منتدى الخير للتربية والتعليم لقبولهم نشر الكتاب وإخراجه في هذه الحلة القشيبة.

المؤلف



# முன்னுரை

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயர் கொண்டு ஆரம்பம் செய்கின்றேன்.

சாந்தியும் சமாதானமும் சத்தியத் தூதர் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் அடியொற்றி வாழ்ந்த தோழர்கள் மற்றும் நல்லடியார்கள் மீதும் உண்டாவதாக!

மனிதனின் வாழ்விலே ஆடை இன்றியமையாத ஒன்றாகும். எனவே, உலகத்தில் வாழக்கூடிய மனிதர்கள் அனைவருக்கும் குளிர் காலமாக இருந்தாலும், சூடு காலமாக இருந்தாலும் தங்களது உடலை மறைக்க வேண்டுமென்பதில் எவ்வித கருத்து வேறுபாடும் கிடையாது. ஆனால், உடலின் எப்பகுதியை மறைக்க வேண்டும் என்பதில்தான் கருத்து வேறுபாடு உள்ளது. அதே நேரத்தில் ஒரு மனிதன் தனிமையில் இருக்கின்ற போது கூட, தனது உடலை மறைத்துக் கொண்டுதான் இருக்கின்றான். ஆதம் (அலை), ஹவ்வா ஆகிய இருவரும் சுவர்க்கத்தில் தனிமையில், வேறு எந்த மனிதர்கள் இருக்காத நிலையிலும் கூட அவர்கள் தங்களின் உடம்பை மறைத்துக் கொண்டார்கள். இதனை அல்லாஹுத்தஆலா தனது திருமறையில் குறிப்பிடுகிறான்:

“ஆதமுடைய சந்ததியினரே! ஷைத்தான், உங்கள் பெற்றோர் இருவருடைய வெட்கத்தலங்களை அவர்களுக்குக் காட்டுவதற்காக அவர்கள் இருவருடைய ஆடையை அவர்களை விட்டும் களைந்து, அவர்களைச் சுவர்க்கத்திலிருந்து வெளியேற்றியது போல் உங்களையும் (ஏமாற்றி) குழப்பத்தில் ஆக்கிவிட வேண்டாம். நிச்சயமாக அவனும் அவனது பட்டாளமும் நீங்கள் அவர்களைப் பார்க்காத போதிலும் அவர்கள் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். நம்பிக்கை கொள்ளாதவர்களுக்கு நிச்சயமாக நாம் ஷைத்தான்களை நண்பர்களாக ஆக்கியுள்ளோம்”.
(அல்அஃராஃப் - 27)

எனவே, இப்லீசும் அவனது சந்ததியினரும் ஆதம் (அலை) மற்றும் அவர்களது சந்ததியினரின் வெட்கத்தலங்கள் வெளிப்பட வேண்டுமென்று ஆசை வைத்திருக்கின்றார்கள். அது மட்டுமல்ல அவர்களது கவர்ச்சியான பகுதிகளை வெளிக்காட்டி அவர்களை பாவத்தில் இட்டுச் செல்ல வேண்டுமென்பதே இப்லீசுடைய நோக்கமாக இருக்கின்றது என அல்லாஹ் மேற்கண்ட வசனத்தில் சொல்லிக் காட்டுகின்றான்.

அந்த அடிப்படையில்தான் இன்றைய காலகட்டத்தில் பெண்கள் முகத்தை மறைக்க வேண்டுமா, இல்லையா என்ற கருத்து வேறுபாடு தமிழுலகம் உட்பட முழு உலகிலும் காணப்படுகிறது.

சிலர் இது வாஜிப் என்பதாகவும், மற்றும் சிலர் சுன்னத் என்பதாகவும் கூறிவருகின்றனர். இவ்விரண்டு கருத்துக்களும் இஸ்லாமிய சட்டக்கலையில் காலாகாலமாக இருந்து வந்தாலும் நவீன காலத்தில் சில தவறான கருத்துக்கள் தோன்றியுள்ளன.

சிலர் முகம் மூடுவது ஹராம் தண்டனைக்குரிய குற்றம், அது நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்களுக்கு மட்டும் சொந்தமான சட்டம் என்கின்றனர்.

மற்றொரு சாரார் முகம் மூடுவது பிற்போக்குவாதம், பாலைவன அரேபிய கலாச்சாரம், அது நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்களுக்கு மட்டும் சொந்தமான சட்டம் என்கின்றனர்.

மற்றொரு சாரார் இது ஒரு வணக்கமல்ல. விரும்பியவர்கள் செய்யலாம். செய்யாமலும் இருக்கலாம். செய்பவர்களுக்கு மேலதிகமான சிறப்பேதும் இல்லை என்கின்றனர்.

எனவே, அது பற்றிய விளக்கம் வேண்டுமென்று பலர் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே, அல்லாஹ்வின் பேருதவியால், “முகம் மறைப்பது வணக்கமா? அல்லது வழக்கமா?” என்ற இந்நூல் ஜனனமாகியுள்ளது.

ஹிஜாப் சம்பந்தமான பல்வேறு சந்தேகங்களுக்கான தெளிவுகளையும் இந்நூல் உள்ளடக்கியுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

இந்நூலை முதற்கட்டமாக மீளாய்வு செய்து உதவிய அஷ்ஷெய்க் அஹ்மத் (அப்பாஸி, ரியாதி, M.A KSA) அவர்களுக்கும், பல்வேறு அறிவியல் தகவல்களையும் மீளாய்வு செய்து உதவிய அஷ்ஷெய்க்

அப்துல்லாஹ் முஹம்மது உவைஸ் (மீஸானி, ரியாதி, Ph.D Reading) அவர்களுக்கும், இந்நூலை செம்மையாக்கம் செய்து, வடிவமைத்து உதவிய குகைவாசிகள் பதிப்பகத்துக்கும், அணிந்துரை வழங்கிய அஷ்ஷெய்க் கலாநிதி முபாரக் மதனி அவர்களுக்கும், இப்புத்தகத்தை அச்சிட்டு வெளியிடும் 'கல்வி மேம்பாட்டிற்கான அல்ஹைர் நிறுவனத்திற்கும்' மேலும் கணிணியில் அச்சுக் கோர்வை செய்து உதவிய எனது அன்பு மனைவி "உம்மு ஹுதைஃபா" அவர்களுக்கும் இந்நூலை எழுதுவதற்கு உதவியாக இருந்த அனைவருக்கும், நல்ல பல ஆலோசனைகளை வழங்கியவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனிதன் என்ற அடிப்படையில் தவறுகள் இடம்பெற்றிருக்கலாம். அல்லாஹ் மட்டும்தான் முழுமையானவன், குறைகள் இல்லாதவன். சுட்டிக்காட்டப்படும் தவறுகளை மனமுவந்து ஏற்றுக்கொள்வதற்குத் தயாராகவுள்ளதுடன் எதிர்வரும் பதிப்புக்களில் அவைகள் கவனத்தில்கொள்ளப்படும் என்பதையும் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது இச்சிறிய சேவையை வல்லவன் அல்லாஹ் பொருந்திக் கொள்வதுடன், இதை மக்களுக்கு பயன் அளிக்கக் கூடியதாகவும் ஆக்கி வைப்பானாக!

**ரிஷாத் முஹம்மத் சலீம்**

ஆசிரியர்



# நான்கு அடிப்படைகள்....

முதலில் நாம் முக்கியமான நான்கு அடிப்படைகளை தெரிந்துகொள்ள வேண்டும். அவற்றுடன் ஹிஜாப் சம்பந்தமான ஆதாரங்களை உரசிப் பார்த்தால், அது சம்பந்தமான தெளிவான ஒரு முடிவுக்கு இலகுவாக வரலாம்.

*அவை:*

## முதலாவது அடிப்படை

### விதியும் விதிவிலக்கும்

ஒரு முஃமினைப் பொருத்தவரை அல்லாஹ்வும் அவனது தூதர் (ஸல்) அவர்களும் ஒரு செய்தியைச் சொன்னால், அதனை மறுக்காமல் ஏற்றுக்கொள்வது ஒரு வணக்கமாகும். அது சாத்தியமானதா அல்லது அசாத்தியமானதா என்பதையெல்லாம் ஒரு விசுவாசி சிந்திக்கக் கூடாது. அதே போன்று எமது வாழ்வில் அதனை நடைமுறைபடுத்தக் கூடிய சூழல் இல்லாவிடில் நாம் அதை மறுப்பது அல்லது அதற்கு வேறு காரணங்கள் கூறி மக்களைத் திசை திருப்புவது போன்ற பண்புகள் ஒரு விசுவாசியிடம் இருக்கவே கூடாது. அல்குர்ஆனில் சொல்லப்பட்ட சட்ட திட்டங்கள் அனைத்தையும் அந்நிய நாடுகளில் வாழக்கூடிய மக்கள் நடைமுறைப்படுத்துவது சில சந்தர்ப்பங்களில் சிரமமாக இருக்கும். அப்படியான சூழலில் குறித்த விடயத்தை நாம் நடைமுறைப்படுத்தாவிட்டாலும் நம்மீது குற்மில்லை என்பதை பின்வரும் அல்குர்ஆன் வசனம் தெளிவுபடுத்துகிறது,

“எந்த ஓர் ஆத்மாவையும் அதன் சக்திக்கு மேல் அல்லாஹ் சிரமப்படுத்தமாட்டான்...”. *(அல்பகரா – 286).*

உதாரணத்திற்கு அல்லாஹ் தனது திருமறையில், திருடியவர்களின் கையை வெட்ட வேண்டும், அச்சட்டத்தை நடைமுறைப்படுத்தாதோர் காஃபிர்கள், நிராகரிப்பாளர்கள் என்று கூறுகின்றான். ஆனால்,

இலங்கை மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் வாழக்கூடியவர்கள் அச்சட்டத்தை நிலை நாட்டுவதில்லை. எனவே, அல்லாஹ் கூறிய பிரகாரம் அவர்கள் கா∴பிர்களாக, நிராகரிப்பாளர்களாக மாறிவிடவில்லை. காரணம் எங்களுக்கு அதனை நிறைவேற்றக்கூடிய அதிகாரம், சக்தி, ஆற்றல் கிடையாது. அல்லாஹ் அதற்காக வேண்டி மறுமையில் எங்களைத் தண்டிக்கமாட்டான்.

## இரண்டாவது அடிப்படை

### இபாதாத், ஆதாத் - இரண்டிற்குமுள்ள வேறுபாடுகள்

ஒரு முஸ்லிமின் நடவடிக்கைகள் இருவகைப்படும். முதலாவது “இபாதாத்” எனும் வணக்கவழிபாடுகள். அடுத்தது “ஆதாத்” எனும் வழமையான நடவடிக்கைகள். இந்த இரண்டிற்குமுள்ள வித்தியாசத்தை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் மார்க்க சட்டங்களை நாம் புரிந்து கொள்ளலாம். “இபாதாத்” என்று சொன்னால் அல்லாஹ்வும் அவனது தூதர் (ஸல்) அவர்களும் அவனை நெருங்குவதற்காக, அல்லாஹ்விடமிருந்து நற்கூலியைப் பெற்றுக் கொள்வதற்காக சொல்லித் தந்த மார்க்க சட்ட திட்டங்களாகும். எனவே, அல்லாஹ், ரசூலுடைய அனுமதியின்றி நாமாக அதில் கூட்டுவதும், குறைப்பதும் தடை, ஹராமாகும்.

‘ஆதாத்’ பழக்கவழக்கங்கள் என்றால், உண்ணல், குடித்தல், ஆடை அணிதல், வசித்தல், வியாபாரம் போன்ற மனிதர்கள் வழக்கமாக நடைமுறையில் செய்துவருபவற்றைக் குறிக்கும். இவற்றில் தடைவிதிக்கப்படாதவற்றை விரும்பிய பிரகாரம் நாம் அனுபவிக்கலாம். உதாரணத்திற்கு ஒருவரிடம் சிறிய வாகனம் ஒன்றிருக்கும் போது இன்னொருவரிடத்தில் விலையுயர்ந்த பெரிய வாகனமொன்று இருக்கும். அதே போல் சிலரிடத்தில் சிறிய வீடுகளும் இன்னும் சிலரிடத்தில் பெரிய வீடுகளும் அவரவர் வசதிக்கேற்ப இருக்கும். இவைகளில் நாம் தடை வந்திருக்கிறதா என்று தான் பார்க்க வேண்டும்.

மேற்கூறிய அடிப்படையில், நமது தலைப்பான “முகம் மறைத்தல்” என்பது, ஆடை அணிதல் எனும் பழக்கவழக்கம் (ஆதாத்) பிரிவுக்குட்பட்டதே. அதில் குறித்த ஒரு முறையை தடை செய்யும் அதிகாரம் யாருக்கும் இல்லை. ஆனால், அல்லாஹ்வும் அவனது

தூதர் (ஸல்) அவர்களும் ஆடை சம்பந்தமாக பிறப்பித்த கட்டளைகள் வாஜிப் அல்லது சுன்னத் என்ற தகுதியைப் பெற்றுவிடும். முகம் மூடுதல் சம்பந்தமாக அல்லாஹ்வும் அவனது தூதரும் என்ன கூறியுள்ளனர்? என்பதை நாம் பின்னால் பார்ப்போம்.

## மூன்றாவது அடிப்படை

### முகம் மூடும் சட்டம் வணக்கமாக்கப்பட்ட ஆண்டு

அல்குர்ஆனை ஒரு நூலாக அப்படியே கொண்டு வந்து நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்படவில்லை. சுமார் 23 ஆண்டுகளாக சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்பவே இறக்கியருளப்பட்டது. எனவே, முந்தி இறங்கிய வசனங்கள், பிந்தி இறங்கிய வசனங்கள் என்றெல்லாம் இருக்கின்றன. முன்பு விதியாக்கப்பட்ட ஒரு சட்டம் பின்பு மாற்றப்பட்டால் முன்பு சொல்லப்பட்டது காலாவதியாகி விடும்.

உதாரணத்திற்கு மதுபானம் ஆரம்பத்தில் அனுமதிக்கப்பட்டிருந்து பின்பு அது தடை செய்யப்பட்டது. எவரேனும் ஒருவர் முன்னைய காலத்தில் நடந்த ஒன்றை வைத்து இதோ இந்த சஹாபி மதுபானம் அருந்தியுள்ளார். எனவே, இது மதுபானம் அருந்துவதற்கு ஆதாரம் என்று சொன்னால் அவரை நாம் புத்திசாலியென சொல்ல மாட்டோம்.

அதே போன்றுதான் பெண்கள் முகம் மூடுவதிலும் இரண்டு கட்டங்கள் உள்ளன. ஆரம்ப காலத்தில் முகம் திறந்துதான் இருந்தார்கள். பின்புதான் முகத்தை மூடவேண்டும் என்ற சட்டம் ஹிஜ்ரி ஐந்தாம் ஆண்டு மார்க்கமாக்கப்பட்டது. அதற்கு முன்பு நடந்த நிகழ்வுகளை முகம் திறப்பதற்கு ஆதாரமாகக் கொள்வது மார்க்க அடிப்படை சட்டங்கள் தெரியாதவர்களின் குழப்பங்கள் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

இதற்கான ஆதாரம், நபி (ஸல்) அவர்கள், ஸைனப்(ரழி) அவர்களைத் திருமணம் முடித்தபோது அவர்களது வயது 35ஆக இருந்தது. அந்த சந்தர்ப்பத்தில்தான் இந்த ஹிஜாபுடைய சட்டம் இறங்குகிறது.

இதனை வைத்து எப்படி நாம் ஹிஜ்ரி ஐந்து என்று சொல்வதென்ற சந்தேகத்திற்கான பதிலைப் பார்ப்போம்.

ஸைனப் (ரழி) அவர்கள், நபியவர்களைத் திருமணம் செய்த பின் சுமார் 15 வருடங்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். காரணம் ஸைனப்

(ரழி) அவர்கள், ஹிஜ்ரி இருபதிலும், நபியவர்கள் ஹிஜ்ரி பத்திலும் மரணிக்கின்றார்கள். இதில் நபியவர்களின் மரணத்திற்கு பின்பு பத்து வருடங்களும், அவர்களின் வாழ்க்கை துணைவியாக 5 வருடங்களும் வாழ்ந்துள்ளார்கள் என்பதன் மூலம் ஹிஜ்ரி 5-ல் திருமணம் முடித்துள்ளார்கள் என்பது தெளிவாகின்றது. இந்த செய்திகள் அனைத்தும் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, ஹிஜ்ரி 5-ம் ஆண்டுதான் முகம் மூட வேண்டும் என்ற சட்டம் மார்க்கமாக, இபாதத்தாக மாறுகிறது.

## நான்காவது அடிப்படை

### முகம் திறக்க அனுமதிக்கப்பட்ட பெண்கள்

பெண்களை நாம் பல வகையினராக வகைப்படுத்தலாம்.

முதலாவது

வயதின் அடிப்படையில்,

1 - சிறுமிகள்

2 - யுவதிகள்

3 - வயோதிகப் பெண்கள்

என, மூன்று பிரிவினராக வகுக்கலாம்.

இரண்டாவது

சுதந்திரத்தின் அடிப்படையில்,

1. சுதந்திரப் பெண்கள், 2. அடிமைப் பெண்கள் என இரு வகையினராகப் பிரிக்கலாம்.

மூன்றாவது

மார்க்க ரீதியாக,

1. முஸ்லிமான பெண்கள், 2. காஃபிரான பெண்கள் என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

இந்த வேறுபாடுகளை சரியாகப் புரிந்துகொள்ளாதவர்கள், ஒரு சாராருக்கு சொல்லப்பட்ட சட்டத்தை எல்லோருக்கும் பொதுவாக்கிவிடுவார்கள். அதன் விளைவு குழப்பமாகத் தான் மாறும்.

அடிமைப் பெண்கள், காஃபிரான பெண்கள், மேலும் வயோதிகப் பெண்கள் ஆகியோரின் சட்டங்களை எல்லோருக்குமாக பொதுவாக சொல்லப்படும் போது, மார்க்கத்தில் குழப்பமே ஏற்படும். மேற்கூறப்பட்ட மூன்று வகையினருக்கு முகம் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை விளங்கினால் முகம் திறந்து வந்ததாக சொல்லப்படும் செய்திகளைப் புரிந்து கொள்வது எளிதாகிவிடும்.

மேற்கூறப்பட்ட இந்த நான்கு விஷயங்களையும் மனதில் ஆழப் பதிந்து கொண்டால், முகம் திறப்பதற்கு முன்வைக்கப்படும் ஆதாரங்களை அலசி ஆராய்ந்து பார்க்கலாம்.

அது மட்டுமல்லாமல் முகம் திறந்ததாக இடம்பெறும் நிகழ்வுகள் உண்மையிலேயே ஹிஜாப் கடமையாக்கப்படுவதற்கு முன்னர் உள்ளவைகளா? அல்லது பின்னர் உள்ளவைகளா? என்பதைச் சிந்திப்பதும் சரியான முடிவை மேற்கொள்வதற்குத் துணை நிற்கும்.



# நிகாப் எனும் முகத்தை மறைக்கும் ஆடை இஸ்லாத்தில் உண்டா

சிலருக்கு முகமூடி என்றொரு ஆடை இஸ்லாத்தில் இருக்கிறதா? ஏன் இதனை சிலர் ஹராமென்று கூறுகின்றனர்? என்ற சந்தேகம் எழுகின்றது.

உண்மையிலேயே முகமூடி என்றொரு ஆடைமுறை இஸ்லாத்தில் உள்ளது என்பதை பின்வரும் இரு ஆதாரங்களும் நிரூபிக்கின்றன.

## முதலாவது ஆதாரம்

ஆயிஷா (ரழி) அவர்கள் பனூல் முஸ்தலக் எனும் யுத்தத்திற்கு நபி (ஸல்) அவர்களுடன் சென்றார்கள். இது ஹிஜ்ரி 6ம் ஆண்டு நடைபெற்றது. அப்போது ஃபர்தாவின் சட்டம் கடமையாக்கப்பட்டிருந்தது. இச்சம்பவத்தில் ஆயிஷா ரழி அவர்கள் தாம் தொலைத்த ஒரு மாலையைத் தேடச்சென்றுவிட்டு திரும்பி வந்து பார்த்தபோது படையினர் அவர்களை விட்டுவிட்டுச் சென்றிருந்தனர். அவர்கள் தன்னைத் தேடி திரும்பி வருவார்கள் என்ற எண்ணத்தில் அந்த இடத்திலேயே காத்துக்கொண்டிருந்தார்கள். ஆயிஷா (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்: “நான் தங்கியிருந்த இடத்திற்கு அருகில் ஸப்வான் இப்னு முஅத்தல் என்ற நபித்தோழர் காலையில் வந்தார். அவர் (அங்கே) தூங்கிக் கொண்டிருந்த ஓர் கருப்பு உருவத்தைப் பார்த்தார். பர்தாவுடைய சட்டம் அருளப்படுவதற்கு முன்னர் அவர் என்னைப் பார்த்திருந்தார். எனவே, என்னைப் பார்த்ததும் அவர் அடையாளம் புரிந்து கொண்டார். அவர், என்னை அறிந்துகொண்டு, ‘இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன் - நாம் அல்லாஹ்விற்கே உரியவர்கள் மேலும், நாம் அவனிடமே திரும்பிச் செல்லவிருக்கிறோம்’ என்று கூறும் சப்தத்தைக் கேட்டு நான் கண் விழித்தேன். உடனே என்னுடைய ஜில்பாபினால் என் முகத்தை மறைத்துக் கொண்டேன்.” எனச் சொல்கிறார்கள். *(நூல்: புகாரி 4141.)*

இந்த ஹதீஸில் ஆயிஷா (ரழி) அவர்கள் “உடனே என்னுடைய ஜில்பாபினால் என் முகத்தை மறைத்துக் கொண்டேன்.” எனக் கூறுவது, நபியவர்களின் காலத்தில் முகத்தை மூடி ஆடை அணிந்திருக்கிறார்கள் என்பதற்கான ஆதாரமாகும்.

## இரண்டாவது ஆதாரம்

புகாரியில் பதிவாகியிருக்கும் இன்னொரு ஹதீஸ் பின்வருமாறு:

இப்னு உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள்:

“நபி அவர்களே! இஹ்ராம் அணிந்திருக்கும் போது எந்த ஆடைகளை நாங்கள் அணிய வேண்டுமென்று நீங்கள் கட்டளையிடுகிறீர்கள்? என்று ஒருவர் எழுந்து கேட்டதற்கு நபி(ஸல்) அவர்கள், நீங்கள் சட்டைகளையும், கால் சட்டைகளையும், தலைப்பாகைகளையும், தொப்பிகளையும் அணியாதீர்கள்! ஒருவரிடம் செருப்புகள் இல்லையென்றால், அவர் காலுறைகளை (அவற்றின் மேலிருந்து) கரண்டைக்குக் கீழுள்ள பகுதிவரை கத்தரித்துக்கொள்ளட்டும்! குங்குமப் பூச்சாயம், வர்ஸ் எனும் செடியின் சாயம் தோய்ந்த எதனையும் அணியாதீர்கள்! இஹ்ராம் அணிந்த பெண் நிகாப் எனும் முகத்திரை அணியக் கூடாது. மேலும், அவள் கையுறைகளையும் அணியக் கூடாது!” என்று பதிலளித்தார்கள். (நூல்: புகாரி – 1838)

இந்த ஹதீஸில், ஹஜ் மற்றும் உம்ராவின் போது தடுக்கப்பட்ட சில காரியங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் ஒன்றுதான், பெண்களாக இருந்தால் கண்களைத் திறந்த முகமூடி மற்றும் கையுறைகள் அணியக் கூடாது என்பதாகும். எனவே அப்படி அணியக் கூடிய பெண்கள் இருந்திருக்கிறார்கள், அப்படிப்பட்ட ஓர் ஆடை அக்காலத்தில் இருந்திருக்கின்றது. அதனால் தான் நபியவர்கள் இஹ்ராம் நிலையின் போது அதனைத் தடுத்துள்ளார்கள்.

இதற்கு சிலர், இஹ்ராம் அல்லாத நிலையிலும் தடை; அந்த தடையை உறுதிப்படுத்துவதற்காகவே நபியவர்கள் அவ்வாறு கூறியதாகக் கூறுகிறார்கள்.

இது தவறான வாதமாகும். ஏனெனில் ஆண்களுக்கு நபி (ஸல்) அவர்கள், சட்டைகளையும், கால் சட்டைகளையும், தலைப் பாகைகளையும், தொப்பி போன்ற ஆடைகளையும் அணிவதை

தடை செய்தார்கள். இவை அணிவது இஹ்ராமிற்கு முன்னால் ஹராமாக இருக்கவில்லை. மாறாக ஹலாலாக இருந்த ஒன்றைத்தான் நபியவர்கள் இஹ்ராமிற்கு நிய்யத் வைத்தவருக்கு கூடாது என்று சொன்னார்கள். அது போன்றே கண்ணை மட்டும் திறந்து முகமூடி அணிந்திருக்கிறார்கள், அப்படியொரு ஆடை அக்காலத்தில் இருந்திருக்கிறது என்பதற்கு மேற்கூறப்பட்ட இரண்டு செய்திகளும் தெளிவான ஆதாரங்களாகும்.



# கறுப்பு நிற ஆடை அணியலாமா?

சிலருக்கு பெண்கள் கறுப்பு நிறத்தில் அணிவதைக் கூட தாங்க முடியவில்லை. கறுப்பு நிறம் மூலமாக நோய்கள் வருவதாகவும் இன்னும் சில காரணங்களையும் அதற்குக் கூறுகின்றனர்.

இக்கறுப்பு நிற ஆடை சஹாபிப் பெண்கள் மத்தியில் அணியப்பட்டிருக்கின்றது என்பதற்கு பின்வரும் இரு ஆதாரங்களைக் குறிப்பிடலாம்.

## முதலாவது ஆதாரம்

மேலே குறிப்பிடப்பட்ட ஹதீஸில் ஆயிஷா (ரழி) அவர்கள், தன்னை ஸப்வான் (ரழி) அவர்கள் கண்டதைக் கூறும்போது, "கறுப்பு உருவத்தைக் கண்டார்கள்" எனக் கூறுகிறார்கள். இதற்கு இருளில் அவர்களைக் கண்டிருக்கலாம் என்றும் மறுப்புச் சொல்லமுடியாது. காரணம் அங்கு காலையில் வந்தார்கள், கறுப்பு உருவத்தைக் கண்டார்கள் என்று சொல்லப்படுகின்றது. எனவே கறுப்பு நிறத்தில் அப்படியொரு ஆடை அணிந்திருக்கிறார்கள் என்பதற்கு இது ஓர் ஆதாரம்.

## இரண்டாவது ஆதாரம்

உம்மு சலமா(ரழி) அவர்கள் கூறுகிறார்கள்: அஹ்ஸாப் அத்தியாயத்தில் "உங்களது மேலாடைகளின் ஒரு பகுதியை நீங்கள் உங்களுக்கு முன்னால் போட்டுக் கொள்ளுங்கள்" என்ற வசனம் இறங்கிய பின்பு அன்சாரிப் பெண்மணிகளின் ஆடைகளினால் அவர்களது தலைகளில் காகங்கள் இருப்பது போன்று காட்சியளித்தார்கள். (அபூதாவூத் - 4101)

இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரில் அப்துல்லாஹ் இப்னு

உஸ்மான் இப்னு ஹுஃஃதைம் என்பவர் இடம் பெறுகிறார். இவர் பலமானவரா அல்லது பலவீனமானவரா என்ற கருத்து வேறுபாடு அறிஞர்களுக்கு மத்தியில் இருக்கிறது என்ற காரணத்தினால் சிலர் இதனை ஏற்க மறுக்கலாம். அதிகமானவர்கள் இவரை நம்பகமானவர் என்று கூறுகிறார்கள். இன்னும் சிலர் பலவீனமானவர் என்று கூறுகிறார்கள். இப்படி கூறும் போது, ஹதீஸ்கலை அறிஞர்கள் இவர் ஏற்கத் தகுதியானவர் என்ற தீர்வை கூறியுள்ளார்கள். அந்த அடிப்படையில் அந்த ஹதீஸ் ஏற்றுக்கொள்ள தகுந்ததாகும். அது மட்டுமல்லாமல் அந்த சஹாபிக்கு புகாரி, முஸ்லிம் போன்ற கிரந்தங்களிலும் அறிவிப்புக்கள் இருக்கின்றன. *(பார்க்க: தஹ்தீபுல் கமால் - 15/281, தக்ரீபுத் தஹ்தீப் – 3466 )*

எனவே, கறுப்பு நிறத்திற்கும் ஆதாரம் இருக்கிறது. அத்தோடு கறுப்பு நிறத்தில்தான் அலங்காரத்தை வெளிப்படுத்த முடியாது. ஏனைய நிறங்களில் அலங்காரம் கூடுதலாக காட்சியளிக்கும் என்பதால்தான், பெண்களாவே கறுப்பு நிறத்தைத் தெரிவு செய்தார்கள். நபி (ஸல்) அவர்களின் காலத்திலும் கூட பெண்கள் கறுப்பு நிறத்தை அணிந்திருக்கிறார்கள். அதற்கு நபியவர்கள் எந்த விதமான மறுப்பையோ, வெறுப்பையோ தெரிவிக்கவில்லை. எனவே, கறுப்பு நிறத்தை அணிவதற்கும் ஆதாரம் இருக்கிறது. ஆனாலும் கறுப்பு நிறம்தான் அணிய வேண்டுமென்ற கட்டாயக்கடமை கிடையாது.

# முகம் மூடுவதற்குரிய ஆதாரங்கள்

முகம் மூடுவதற்கு குர்ஆனிலிருந்தும் ஹதீஸிலிருந்தும் பகுத்தறிவு ரீதியாகவும் பல்வேறு ஆதாரங்கள் காணப்படுகின்றன.

## முதலாவதாக, குர்ஆனிலிருந்து ஆதாரங்கள்

1 அல்லாஹுத்தஆலா தனது திருமறையில் பின்வருமாறு கூறுகிறான்:

“நம்பிக்கை கொண்டோரே! உணவுக்காக உங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டாலேயன்றி நீங்கள் நபியின் வீடுகளில் நுழைய வேண்டாம். அது தயாராவதை எதிர்பார்த்தவராக இருக்க வேண்டாம். எனினும் நீங்கள் அழைக்கப்பட்டால் அப்போது நுழையுங்கள். நீங்கள் உணவு உட்கொண்டால் கலைந்து செல்லுங்கள். பேச்சில் ஈடுபட்டுக் கொண்டிருக்காதீர்கள். நிச்சயமாக இது நபிக்கு தொல்லையளிக்கும். இதனை அவர் உங்களிடம் (கூற) வெட்கப்படுவார். அல்லாஹ் சத்தியத்தைக் கூற வெட்கப் படமாட்டான். (நபியின் மனைவியர்களான) அவர்களிடம் ஏதேனும் ஒரு பொருளை நீங்கள் கேட்பதாயின் திரைக்கு அப்பால் இருந்தே அவர்களிடம் கேளுங்கள். இது தான் உங்கள் உள்ளங்களுக்கும் அவர்களின் உள்ளங்களுக்கும் மிகத் தூய்மையானதாகும். நீங்கள் அல்லாஹ்வின் தூதருக்கு தொல்லை கொடுப்பதோ, அவருக்குப்பின் அவரது மனைவியர்களை நீங்கள் மணம் முடிப்பதோ உங்களுக்கு ஒருபோதும் ஆகுமானதல்ல. நிச்சயமாக இது அல்லாஹ்விடம் (பாவத்தால்) கடுமையானதாக இருக்கின்றது”. (அல் அஹ்ஸாப் - 53).

இதில் “திரைக்கு அப்பால் இருந்தே அவர்களிடம் கேளுங்கள்” என்ற வார்த்தை அந்நிய ஆண்களுக்கு முன்னால் பெண்கள் முகம் மூடியிருக்கவேண்டும் என்பதை தெளிவுபடுத்துகிறது.

2 அதே அத்தியாயத்தில் அல்லாஹுத்தஆலா மேலும் கூறுகிறான்:

“நபியே! உமது மனைவியருக்கும், உமது புதல்வியருக்கும், நம்பிக்கையாளர்களின் பெண்களுக்கும் அவர்கள் தமது முந்தானைகளின் ஒரு பகுதியை தங்கள் மீது தொங்க விடுமாறு கூறுவீராக! அவர்கள் அறியப்படுவதற்கும், நோவினைப்படுத்தப்படாமல் இருப்பதற்கும் இதுவே மிக நெருக்கமானதாகும். மேலும், அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாகவும், நிகரற்ற அன்புடையவனாகவும் இருக்கின்றான்”. *(அல் அஹ்ஸாப் - 59).*

ஒரு பெண் தனது ஒரு கண்ணைத் தவிர ஏனையவற்றை மறைக்க வேண்டும். என இவ்வசனத்துக்கு இப்னு அப்பாஸ் (ரழி) மற்றும் அபீததுத் சல்மானீ (தாபிஈ) ஆகியோர் விளக்கம் கூறினார்கள். இப்னு அப்பாஸின் இன்னுமொரு அறிவிப்பில் இரண்டு கண்களையும் திறந்து அணிந்துக்கொள்ளலாம் என்றும் இடம்பெற்றுள்ளது. *(பார்க்க: தஃப்ஸீருல் குர்துபீ – பாகம் 14 பக்கம் 243, அல் முஹர்ரலுல் வஜீஸ் - பாகம் 4 பக்கம் 399)*

இந்த வசனத்தில் நாம் முந்தானை என மொழிபெயர்த்துள்ள இடத்தில் ஜில்பாப் என்ற வார்த்தை இடம்பெற்றுள்ளது. ஜில்பாபின் மூலம் முகத்தையும் மறைக்கலாம் என்பதை ஆயிஷா (ரழி) அவர்களின் பின்வரும் கூற்று தெளிவுபடுத்துகிறது. ‘ஒரு பெண் தனது ஜில்பாபை தலையிலிருந்து முகத்துக்கு மேலால் தொங்கவிடுவாள்’. இச்செய்தி சுனன் சஈத் இப்ன் மன்சூர் என்ற கிரந்தத்தில் சரியான செய்தியாக பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பதை இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் தனது ஃபத்ஹுல் பாரீ என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

*(பார்க்க: பாகம் 3, பக்கம் 406)*

அதே போன்று மசாஇலுல் இமாம் அஹ்மத் என்ற நூலில் இச்செய்தி சிறிய மாற்றத்துடன் 'பெண் என்ற இடத்தில் இஹ்ராம் அணிந்த பெண்' என்று இடம்பெற்றுள்ளது. *(பார்க்க: பாகம்: 1, பக்கம் 154)*

இந்த வசனத்தில் நபிக்கு ‘கூறுவீராக!’ என்று கட்டளையாகக் கூறப்பட்டுள்ளது. நாம் ஆரம்பத்தில் ஆடையைப் பற்றி கூறும்போது இது நடைமுறை வழக்கம், தான் விரும்பிய பிரகாரம் அணிந்து கொள்ளலாம். ஆனால், அல்லாஹ்வும் அவனது தூதரும் கட்டளையிட்டால் ஒன்று வாஜிபாக இருக்கும் அல்லது அது

சுன்னத்தாக இருக்கும் என்பதாக குறிப்பிட்டிருந்தோம். எனவே இந்த வசனத்தில் கட்டளையாகக் கூறப்பட்டிருப்பதன் மூலம் இது வாஜிபாகவோ சுன்னத்தாகவோதான் இருக்கும் என்பதை புரிய முடிகிறது இதுபற்றிய கூடுதல் விளக்கம் பின்னர் தரப்பட்டுள்ளது.

3 மேலும் அல்லாஹுத்தஆலா தனது திருமறையில் திருமணத்தில் ஆசையில்லாத வயோதிகப் பெண்களைப் பற்றி பின்வருமாறு கூறுகிறான்:

“உடலுறவில் நாட்டமில்லாத, வயது முதிர்ந்த பெண்கள் அலங்காரத்தை வெளிக் காட்டாதவர்களாக தங்கள் (மேலதிக) ஆடைகளைக் களைந்திருப்பது அவர்கள் மீது குற்றமில்லை. எனினும், அவர்கள் (இதையும்) தவிர்ந்து, பேணுதலாக நடந்து கொள்வது அவர்களுக்கு மிகச் சிறந்ததாகும். அல்லாஹ் யாவற்றையும் செவியுறுபவன், நன்கறிந்தவன்”. (அந்நூர் -60).

மேற்கூறப்பட்ட வசனத்திலிருந்து வயோதிகப் பெண்களாக இருந்தால் தங்களது முகத்தை மறைக்கத் தேவையில்லை என்று அறிந்து கொள்ளலாம். இதற்கும் சிலர், இதில் முகம் என்று எங்கு கூறப்பட்டுள்ளது என்று கேட்பார்கள். ஆனால், இது நாமோ அல்லது நீங்களோ கண்டுபிடித்த ஒரு சட்டம் கிடையாது. இந்த குர்ஆன் வசனத்தை முதலில் ஏற்று நடந்தவர்கள் சஹாபாக்கள். நபியவர்களின் காலத்தில் வாழ்ந்த சஹாபிப் பெண்மணிகள் அணிந்திருந்ததைப் பார்த்துவிட்டு, கழற்றி வைப்பதற்கு அனுமதிக்கப்பட்ட ஆடை ஜில்பாப் என்பதாக தஃப்ஸீர் கலையுடன் தொடர்புடைய சஹாபாக்கள், தாபியீன்கள் உள்பட பலர் கூறியுள்ளனர்.

உதாரணமாக இப்னு அப்பாஸ், இப்னு மஸ்ஊத், இப்னு உமர், அஸ்ஸஅபீ, இப்னு ஜுபைல், அல் ஹசனுல் பஸ்ரி, முஜாஹித், இக்ரிமா, கதாதா(ரழி) இன்னும் பலரும்.

(பார்க்க: தஃப்ஸீர்அப்திர் ரஸ்ஸாக் - 263, தஃப்ஸீருத் தபரி – 17360-17363, தஃப்ஸீர் இப்னி அபீ ஹாதிம் - 2639-2642 )

மேலும், ஜில்பாப் என்பது தலையிலிருந்து முகத்திற்கு மேலால் தொங்க விடுவதாகும் என்பது ஆயிஷா (ரழி) அவர்களின் கூற்றாகும்.

இச்செய்தியில் இடம்பெறும் அனைவரும் நம்பகமானவர்கள்.

சுனன் சஈத் இப்னி மன்சூர் என்ற கிரந்தத்தில் இடம் பெற்ற இந்த

செய்தியை இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் ஃபத்ஹுல் பாரியில் பதிவு செய்துள்ளார்கள்.

முகம் மூட வேண்டுமா, இல்லையா? என்ற வசனங்களை நபி (ஸல்) அவர்களிடமிருந்து எங்களுக்கு கொண்டுவந்து தந்தவர்களே அந்த சஹாபாக்கள். அவர்கள்தான் வயோதிகப் பெண்கள் முகத்தை மூடத் தேவையில்லையென்று சொல்லுகிறார்கள். எனவே, வாலிபப் பெண்கள் முகத்தை மூட வேண்டுமென்பதற்கு மேற்கூறப்பட்ட வசனத்தில் ஆதாரமிருக்கிறது என்பது தெளிவாகிறது.

4 "(நபியே!) நம்பிக்கையாளர்களான பெண்களிடம், அவர்கள் தமது பார்வையைத் தாழ்த்திக் கொள்ளுமாறும், தமது கற்பைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும், அவர்களது அலங்காரத்தில் வெளிப்படுவதைத் தவிர வேறு எதையும் அவர்கள் வெளிப்படுத்தக் கூடாது என்றும், தமது முந்தானைகளை தமது மார்பகங்கள் மீது போட்டு கொள்ளுமாறும் (நபியே) நீர் அவர்களுக்கு கூறுவீராக!"

(அந்நூர் – 30)

மேற்கூறப்பட்ட வசனத்தில் வேண்டுமென்று அந்நிய ஆண்களுக்கு எதையும் வெளிப்படுத்தக் கூடாது. தங்களின் விருப்பமின்றி நிர்ப்பந்தமாக வெளியாகுவதைத் தவிர என்பதிலிருந்து முழுமையாக மறைக்க வேண்டுமென்பது தெளிவாகிறது.

இந்த வசனத்தில் "ஸீனத்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. "ஸீனத்" என்றால், அலங்காரம் என்பது பொருள்.

அலங்காரம் என்பது இயற்கையாக ஒருவருக்கு அமைந்துள்ள அழகைக் குறிக்கும் சொல்லல்ல. மாறாக புறச்சாதனங்களால் ஏற்படுத்தப்படுகின்ற அழகே அலங்காரம் எனப்படும்.

மறுதாணி போடுவது, உதட்டுச் சாயம் பூசுவது, நகைகளால் அலங்கரிப்பது, ஆடைகளால் அழகை அதிகரிப்பது இது போன்றவைகள் "ஸீனத்" என்ற சொல்லில் அடங்கும்.

இந்த வசனத்தில் முக்கியமான இரண்டு விடயங்களை நாம் கவனிக்க வேண்டும்.

1. இவ்வசனத்தில் அல்லாஹ் "ளஹர" என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளான். அதன் அர்த்தம் என்னவென்றால், நாட்டமின்றி தானாக வெளியாகுதல் என்பதாகும். "அள்ஹர"

என்றால் விருப்பத்துடன் வெளிப்படுத்துவதைக் குறிக்கும். "அலங்காரத்தில் வெளியே தெரிபவற்றைத் தவிர" என்ற வாக்கியம் பெண்ணின் அலங்காரத்தில் நாட்டமின்றி வெளியே தெரிபவற்றைக் குறிக்கும். முகம், கை என்பன இதில் உள்ளடங்காது. காரணம், முகம் - கை என்பது நாட்டத்துடன் வேண்டுமென்று வெளிப்படுத்தக் கூடியதாகும்.

2. அலங்காரம் என்பது புறச்சாதனங்களால் ஏற்படுத்தப்படும் அழகையே குறிக்கும் என நாம் கூறினோம். அவ்வாறிருக்க முகம், கை இரண்டையும் அலங்காரத்தில் சேர்ப்பது குர்ஆனுக்கும், அரபிகளின் மொழி வழக்கிற்கும் நேர் மாற்றமானதாகும். காரணம் அவை புறச்சாதனங்களால் ஏற்படுத்தப்பட்டவை அல்ல.

எனவே, இந்த வசனமும் முகம் மூடுவதைக் குறிக்கும் என பல அறிஞர்கள் கூறியுள்ளனர். அவர்கள்: இப்னு மஸ்ஊத் (ரழி), அந் நஃகஈ, ஹசனுல் பசரீ, அபூ இஸ்ஹாக் அஸ்ஸபீஈ, இப்னு சீரீன், அபுல் ஜவ்ஸா போன்றோர்.

(பார்க்க: தஃப்ஸீருல் குர்ஆனில் அளீம் - 3378)

முகம் திறக்க வேண்டுமென சொல்லக் கூடியவர்கள் முன் வைக்கக்கூடிய மிக முக்கியமான ஆதாரம் இவ்வசனமாகும். அதற்கான காரணம், இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் முகம், கை தவிர ஏனையவை மறைக்கப்பட வேண்டுமென விளக்கம் கொடுத்திருப்பதாகும்.

அதன் அடிப்படையில் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் மூலம், அவர்கள் கூறுவது போன்று பல அறிவிப்புக்களில் இடம் பெற்றுள்ளன.

ஆனால், அவை அனைத்துமே பலவீனமாகும். அந்த அறிவிப்புக்கள் அனைத்தையும் தஃப்ஸீருல் தபரியில் பார்க்கலாம். (பாகம்: 20, பக்கம் 335)

ஒரு வாதத்திற்கு அவர்களின் கூற்று சரியென வைத்துக் கொண்டாலும் அதன் விளக்கம் வேண்டுமென வெளிப்படுத்துவதல்ல. மாறாக, தானாக வெளிப்படுவதைக் குறிக்கும்.

இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களே ஹிஜாபுடைய வசனத்திற்கு விளக்கம் கொடுக்கின்ற போது மேற்கூறப்பட்ட கருத்திற்கு மாற்றமாக

பின்வருமாறு கூறுகிறார்கள்:

“தலைக்கு மேலால் ஜில்பாபை போட்டு முகத்தை மறைப்பதுடன் ஒரு கண்ணை மட்டும் திறப்பார்கள்”.

(பார்க்க: தஃப்ஸீருத் தபரீ 20324)

குறிப்பு:

மறைக்கத் தேவையில்லையெனக் கூறுபவர்கள், இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களின் இந்த செய்தியில் இரண்டு விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.

1. இந்த அறிவிப்பில் அலி இப்னு அபீ தல்ஹா என்பவருக்கும் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களுக்கும் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. அவ்விருவருக்கும் மத்தியில் விடுபட்டவர் முஜாஹித் (ரழி) எனக் கூறப்படுகிறது. அப்படி முஜாஹித் என நிரூபிக்கப்பட்டால் அந்த செய்தி அந்த விமர்சனத்தை விட்டும் நீங்கிவிடும்.

## பதில்:

இமாம் தஹபி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: “அலி இப்னு அபீ தல்ஹா என்பவர் முஜாஹித் மூலமாகத்தான் இப்னு அப்பாஸ்(ரழி) அவர்களின் தஃப்ஸீரை அறிவித்துள்ளார். ஆனால், முஜாஹிதைக் குறிப்பிடாமல் செய்தியைக் கூறியுள்ளார்”.

(பார்க்க: மீஸானுல் இஃதிதால் - 3134 )

அதேபோல் சுயூதி இமாம் அவர்கள் கூறுகிறார்கள்: “இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களின் வழியாக பலரின் விளக்கவுரைகள் வந்திருந்தாலும் அலி இப்னு அபீ தல்ஹா மூலம் அறிவிக்கப்படும் செய்திதான் தரமானது”.

( பார்க்க: அல் இத்கான் ஃபீ உலூமில் குர்ஆன் - 2241)

மேலும், இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் விடுபட்டவர் முஜாஹித் எனக் கூறுவதுடன் மேலதிக தகவலாக அலி இப்னு அபீ தல்ஹா உண்மையாளர் எனவும் கூறியுள்ளார்.

( பார்க்க: அல் உஜாப் ஃபீ பயானில் அஸ்பாப், பாகம்-207 )

2. அறிவிப்பாளர் வரிசையில் அபூ ஸாலிஹ் என்பவர் இடம் பெறுகிறார். அவர் பலவீனமானவர் என்பதாகும்.

## பதில்:

அவரின் பெயர் அப்துல்லாஹ் இப்னு சாலிஹ். இவரின் நிறைகுறை விசயத்தில் ஹதீஸ்கலை அறிஞர்கள் கருத்து வேற்றுமைப்பட்டுள்ளனர். எனினும் அவர் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவராக கருதப்படுகிறார். காரணம், அவரிடத்தில் ஒரு "சஹீஃபா" ஏடு இருக்கிறது. அது மிகவும் பலம் வாய்ந்தது என அஹ்மத் இப்னு ஹம்பல் கூறுவதுடன், இமாம் புகாரி அவர்களும் அதைக் கொண்டு ஆதாரம் பிடித்துள்ளார்கள்.

( பார்க்க: ஃபத்ஹுல் பாரி 438-439 )

முகம் மறைக்க வேண்டுமென்ற இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களின் கூற்றை உறுதிப்படுத்தக்கூடிய, அறிவிப்பாளர் வரிசையில் கருத்து வேறுபாடற்ற, தாபிஈன்களில் ஒருவரான அபீததுஸ்ஸல்மானி அவர்களின் கூற்றை நாம் பார்க்கலாம். அவரிடம் முஹம்மத் இப்னு சீரீன் என்பவர் 33:59 ஆவது வசனத்தில் இடம் பெற்றிருக்கும் "முக்காடுகளைத் தொங்கவிடுமாறு கூறுவீராக!" என்ற வசனத்திற்கு விளக்கம் கேட்ட போது, முகம் மற்றும் தலையை மூடி, இடது கண்ணைத் திறந்து இவ்வாறுதான் மூட வேண்டுமென செய்து காட்டியுள்ளார்.

( பார்க்க: தஃப்ஸீருத் தபரி 20/325 ]

எனவே, முகம் மற்றும் கையைத் தவிர மற்ற அனைத்தையும் மறைக்க வேண்டுமென்ற இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களின் கூற்று இரண்டு அடிப்படைகளில் தவறானது.

1.அது பற்றி அவர்கள் மூலமாக அறிவிக்கப்பட்ட செய்திகள் அனைத்தும் பலவீனமாவையாகும்.

2.இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களே அவர்களின் கூற்றுக்கு மாற்றமாக முகத்தை மறைக்க வேண்டுமென்று ஹிஜாபுடைய வசனத்திற்கு விளக்கம் கூறியுள்ளார்கள். (இது பற்றி மேலே நாம் சுட்டிக் காட்டியுள்ளோம்)

## இரண்டாவதாக,
## முகம் மூடுவதற்கு ஹதீஸிலிருந்து ஆதாரங்கள்

1 ஆயிஷா (ரழி) அறிவித்தார்: உத்பா இப்னு அபீ வக்காஸ் தன் சகோதரர் ஸஃத் இப்னு அபீ வக்காஸ் (ரழி) அவர்களிடம்

ஸம்ஆவின் அடிமைப் பெண்ணுடைய மகனை, ‘அவன் என்னுடைய மகன்’ என்று கூறி, அவனைப் பிடித்து வரும்படி உறுதிமொழி வாங்கியிருந்தார். இறைத் தூதர்(ஸல்) அவர்கள் மக்கா வெற்றியின் போது (மக்கா நகருக்கு) வந்திருந்த சமயம், ஸஃத் (ரழி) ஸம்ஆவுடைய அடிமைப் பெண்ணின் மகனைப் பிடித்துக் கொண்டு அல்லாஹ்வின் தூதரிடம் வந்தார். ஸம்ஆவின் மகன் அப்து (ரழி) அவர்களையும் தம்முடன் கொண்டு வந்தார். பிறகு ஸஃத் (ரழி), இறைத்தூதர் அவர்களே! இவன் என் சகோதரரின் மகன். என் சகோதரர் என்னிடம், இவன் தன் மகன் என்று (கூறி இவனை அழைத்து வர) உறுதி மொழி வாங்கியுள்ளார்’’ என்று கூறினார்கள்.

அப்து இப்னு ஸம்ஆ (ரழி), இறைத்தூதர் அவர்களே! இவன் என்னுடைய சகோதரன். என் தந்தை ஸம்ஆவின் அடிமைப் பெண் பெற்றெடுத்த மகன். தன் தந்தையின் படுக்கையில் (என் தந்தையின் ஆதிக்கத்தில் இவனுடைய தாய் இருந்த போது) பிறந்தவன்’’ என்று கூறினார்கள். உடனே, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஸம்ஆவின் அடிமைப் பெண்ணுடைய மகனைப் பார்த்தார்கள். அவன் மக்களில் உத்பாவிற்கு மிகவும் ஒப்பானவனாக இருந்ததைக் கண்டார்கள். (ஸம்ஆவின் மகன் அப்து(ரழி) அவர்களை நோக்கி) “அப்து இப்னு ஸம்ஆவே! அவன் உனக்கே உரியவன்’’ என்று கூறினார்கள்.

அவன் அப்துவின் தந்தை ஸம்ஆவின் படுக்கையில் பிறந்தவன் என்னும் காரணத்தால் இப்படிக் கூறினார்கள். (பிறகு) இறைத்தூதர் (தம் மனைவி சவ்தா (ரழி) அவர்களை நோக்கி,) “ஸம்ஆவின் மகள் சவ்தாவே! இவன் பார்வையில் படாத வண்ணம் நீ திரையிட்டுக் கொள்’’ என்று கூறினார்கள். தோற்றத்தில் உத்பாவுக்கு ஒப்பாக அவன் இருந்ததைக் கண்டதாலேயே நபி (ஸல்) அவர்கள் இப்படிக் கட்டளையிட்டார்கள். சவ்தா (ரழி) நபி (ஸல்) அவர்களின் மனைவியாக இருந்தார்கள்.

*(நூல்: புகாரி –2053, 2533, 2745, 4303, 6749, ,7182)*

மேற்கூறப்பட்ட ஹதீஸில் ஒரு பையன் யாருக்கு சொந்தம் என்ற பிரச்சினை வருகிறது. அப்போது நபியவர்கள் அவனின் தோற்றத்தைப் பார்த்துவிட்டு அவன் இன்னாருக்குத்தான் சொந்தமானவன் என்று தீர்ப்பு வழங்குகிறார்கள். அந்தப் பையன் சவ்தா (ரழி) அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவன். அந்த தீர்ப்பை வழங்கி விட்டு நபி (ஸல்) அவர்கள் சவ்தா (ரழி) அவர்களைப்

பார்த்து, ''சவ்தாவே! அவரிலிருந்து உன்னை மறைத்துக் கொள்'' என்று கட்டளையிடுகிறார்கள். இதற்கும் சிலர் இது சவ்தா (ரழி) அவர்களுக்கு மட்டும் சொல்லப்பட்ட சட்டம் என்று சொல்லலாம். ஆனால், இவ்வாறு சட்டங்களை நாம் பிரித்துக் கொண்டு போனால் நிறைய சட்டங்கள் தள்ளுபடியாகும்.

அடுத்து அஹ்மத் 27006, 27009, 27010, திர்மிதீ 1597, நசாஈ 4181, இப்னு மாஜாஃ 2874 போன்ற கிரந்தங்களில் பதிவாகியுள்ள ஹதீஸில், நபி (ஸல்) அவர்கள்: ''நான் ஒரு பெண்ணுக்கு சட்டம் சொல்வது நூறு பெண்களுக்கு சட்டம் சொல்வதைப் போன்றதாகும்'' எனக் கூறுகிறார்கள். எனவே, இச்சட்டத்தை நபி (ஸல்) அவர்கள் சவ்தா (ரழி) அவர்களுக்கு மட்டும் சொல்லியிருந்தால், ''சவ்தாவே! இது உனக்கு மட்டுமே சட்டமாகும்'' என்றோ அல்லது ''இது எனது மனைவிமார்களுக்கு மட்டும் உரிய சட்டமாகும்'' என்றோ சொல்லியிருக்க வேண்டும். ஏனெனில், நபி (ஸல்) அவர்கள் சில சட்டங்களை சொல்லுகின்ற போது சில சஹாபாக்களுக்கு இது உங்களுக்கு மட்டுமே சொந்தமானது எனச் சுட்டிக் காட்டியுள்ளார்கள். அப்படி குறிப்பிட்டுக் கூறும் போதுதான், மற்றவர்கள் அச்சட்டத்தை எடுக்க முடியாது. எனவே, அதில் நபியவர்கள் அவ்வாறு குறிப்பிட்டுச் சொல்லாத காரணத்தினால் அச்சட்டத்தை அனைவரும் எடுத்து நடப்பது கடமையாகும்.

இது சம்மந்தமான மேலதிகமான விளக்கம் ''முகம் மூடும் சட்டம் நபியின் மனைவிமார்களுக்கு மட்டுமா (பக்கம் 35)'' என்ற தலைப்பில் தரப்பட்டுள்ளது.

2 அஸ்மா பின்த் அபீபக்ர் (ரழி) அவர்கள், ''நாம் இஹ்ராமுடைய நிய்யத்து வைப்பதற்கு முன்னால் எங்களுடைய தலையை வாரிக்கொள்வோம். மேலும், எங்களுக்கு முன்னால் ஆண்கள் நடமாடினால் எங்களுடைய முகத்தை நாம் மூடிக்கொள்வோம்'' என்பதாகக் கூறுகிறார்கள். இந்த செய்தி இப்னு ஃகுஸைமா 2690, ஹாகிம் 1668 போன்ற நூல்களில் பதிவாகியுள்ளது.

இந்த ஹதீஸில், நபி (ஸல்) அவர்களின் மனைவியல்லாதவர்களும் முகத்தை மூடியிருக்கிறார்கள் என்பதற்கு இது தெளிவான ஆதாரமாகும்.

இந்த செய்தியின் நம்பகத்தன்மை சம்பந்தமாக எழுப்பப்படும் சில விமர்சனங்கள் சரியானவை அல்ல.

3 நபி(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: "யாராவது பெருமைக்காக கரண்டைக் காலுக்குக் கீழ் ஆடை அணிவாரெனில், அவரை அல்லாஹ் மறுமை நாளையில் பார்க்கவே மாட்டான்". இப்படி கூறியதும் உம்மு ஸலமா (ரழி) அவர்கள், "நபியவர்களே! பெண்களுடைய ஆடையின் கடைசிப் பகுதியின் நிலை என்ன?" என்று நபி (ஸல்) அவர்களிடத்தில் கேட்கிறார்கள். அப்போது நபியவர்கள், "அவர்கள் ஒரு சாண் கீழே மேலதிகமாக தொங்க விடுவார்கள்" என பதிலளித்ததும், உம்மு ஸலமா (ரழி) அவர்கள்; 'நபியவர்களே! அப்போது பெண்களின் கால் பாதம் விளங்குமே!" என மறுபடி கேட்கிறார்கள். அப்போது நபியவர்கள், "அப்படியாயின் அவர்கள் ஒரு முழம் தொங்க விடட்டும்" எனக் கூறினார்கள். நூல்: அஹ்மத் 4489, 5173, அபூதாவூத் 4085, திர்மிதீ 1731, நசாஈ 5336, இப்னுமாஜாஃ 3569, 3570. அறிவிப்பவர்: இப்னு உமர்(ரழி).

அபூதாவூத் மற்றும் இப்னு மாஜாஃவில் உம்மு ஸலமா (ரலி) கேட்ட கேள்விகள் இடம்பெறவில்லை.

இதில் சாண் என்பதோ முழம் என்பதோ இங்கு பிரச்சினை கிடையாது. கால் பாதம் கூட தெரியக்கூடாது என்பதற்காகத்தான் நபி (ஸல்) அவர்கள், அதை மறைத்துக் கொள்ளும்படி கூறுகிறார்கள். ஒரு மனிதன் இன்னொருவரைச் சந்திக்கின்ற போது, அவரது முகத்தைத்தான் முதலில் பார்ப்பார். எனவே, கால் பாதத்தையே மறைக்க வேண்டுமென்றிருந்தால் முகத்தை மறைப்பது அதைவிட அவசியம் என்பதை தெளிவாக விளங்கமுடிகிறது.

4 ஆயிஷா (ரழி) அறிவிக்கின்றார்கள்: ஆரம்ப கால முஹாஜிர் பெண்களுக்கு அல்லாஹ் கருணை புரிவானாக! (தமது முந்தானைகளை தமது மார்பகங்கள் மீது போட்டுக் கொள்ளுமாறும் நபியே நீர் அவர்களுக்குக் கூறுவீராக!) எனும் (அந்நூர்:31-வது)வசனத்தை அல்லாஹ் அருளியபோது, அவர்கள் தங்கள் கீழ்ஆடை(யில் ஒரு பகுதி)யைக்கிழித்து அதனைத் முந்தானையாக ஆக்கி (மறைத்துக் கொண்டார்கள். (புகாரி- 4758).

இதற்கு இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் தனது நூலாகிய ஃபத்ஹுல் பாரியில் (பாகம் 8 பக்கம் 490) முந்தானையால் மூடுவார்கள் என்ற

வார்த்தைக்கு 'அவர்களது முகங்களை மூடிக்கொள்வார்கள்' என விளக்கமளித்துள்ளார்கள்.

## மூன்றாவதாக, பகுத்தறிவு ரீதியான ஆதாரங்கள்

ஒரு மனிதனின் உடம்பிலிருக்கும் எல்லா உறுப்புக்களை விடவும் மிகவும் சிறப்பான உறுப்பு இந்த முகம்தான். ஒருவர் திருமணம் முடிப்பதற்காக ஒரு பெண்ணை பார்க்கச் சென்றால் அங்கு போய் அவர் பார்ப்பதே முகத்தைத்தான். இதிலிருந்து முகம்தான் ஈர்ப்புடைய ஓர் உறுப்பு என்பதை தெளிவாக விளங்க முடிகிறது. நெற்றி, புருவங்கள், மூக்கு, உதடு, பற்கள், நாடி மற்றும் இரு கன்னங்கள் அனைத்தையும் உள்ளடக்கியது தான் இந்த முகம். புலவர்கள் கூட இந்த முகத்தை பலவாறாக வர்ணித்து கவி பாடியுள்ளார்கள்.

மேலும் அல்லாஹுதஆலா தனது திருமறையில் வுழூவின் ஃபர்ளுகளை குறிப்பிடும்போது முதலாவதாக, ‘‘உங்களது முகங்களை நீங்கள் கழுவிக்கொள்ளுங்கள்’’ என்றே குறிப்பிடுகின்றான். உடம்பில் தலைதான் முதலுறுப்பாக இருந்தும் அல்லாஹ் முகத்தைத்தான் முதலில் கூறுகிறான்.

இப்போது நாம் முகத்தை திறக்கலாம் என்று அவர்கள் முன் வைக்கக்கூடிய ஆதாரங்கள் என்ன? அவைகளுக்கான பதில்கள் என்ன? என்பதைப் பார்ப்போம்.

இதற்கு முன்னால் நாம் முக்கியமான சில சட்டங்களை விளங்கி வைத்திருக்க வேண்டும். ஹிஜ்ரி 5-ஆம் ஆண்டு தான் ஹிஜாப் கடமையாக்கப்பட்டது. எனவே இதற்கு முந்திய காலகட்டங்களில் ஒருவர் மற்றவரை கண்டிருக்கலாம், பேசியிருக்கலாம். அடுத்து முகத்தை மறைத்திருக்கும் ஒரு பெண்ணின் மறைப்பு கடுமையான காற்று வீசும் நிலமையில் திறந்துவிட வாய்ப்பிருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் யாராவது காணவும் முடியும். அடுத்ததாக அடிமைப் பெண்களாக இருந்தால் அவர்கள் முகத்தை திறந்துதான் இருப்பார்கள். அதே போல் வயோதிகப் பெண்களாக இருந்தாலும் முகத்தைத் திறந்துதான் இருப்பார்கள். எனவே, ஹதீஸ்களில் திறந்த நிலமையில் ஒரு செய்தி கூறப்பட்டிருந்தால் குர்ஆன், ஹதீஸை விளங்கக்கூடிய ஒருவர் இந்த சட்டங்களில் ஏதோ ஒன்றாகத்தான் இருக்கும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில்

மதுபானம் முன்னைய கால கட்டத்தில் ஆகுமாக இருந்து பின்பு ஹராமாக்கப்பட்டது. தடை செய்யப்பட்ட பின்பு முன் நடந்த ஒன்றை வைத்துக் கொண்டு ஆதாரம் பிடிப்பது கிடையாது. அவர்கள் இதுவரை சொல்லாத, முகத்தைத் திறந்தது போல் வரக்கூடிய இன்னும் பல ஆதாரங்களுக்கும் இந்நூலில் பதில் கூறப்பட்டுள்ளது.

முகத்தைத் திறப்பதற்கு இதுவரை ஆதாரம் கூறியவர்கள் யாரும் முகத்தைத் திறந்து வந்தார்கள் என்று நேரடி ஆதாரங்கள் எதையும் முன் வைக்கவில்லை. இவ்வாறு எந்த குர்ஆன் வசனத்திலோ ஹதீஸிலோ வரவில்லை. கன்னம் தென்பட்டது, கறுத்தபெண், வெள்ளைப்பெண் இவ்வாறு மறைமுகமான வார்த்தைகளாகவே வந்துள்ளன. அதுமட்டுமல்ல நேரடி வார்த்தையாக முகத்தைத் திறந்திருக்கக் கண்டேன், முகம் திறந்து வந்தார்கள், சந்திரன் போன்ற அழகான முகம் என்று எந்த வாசகமும் இடம்பெறவில்லை.

# சந்தேகங்களும் விளக்கங்களும்

## முகத்தைத் திறக்க வேண்டுமென்று கூறக்கூடியவர்களின் ஆதாரங்களுக்கான மறுப்புகள்:

முகம் மூடுவதற்கு குர்ஆனிலிருந்தும், ஹதீஸிலிருந்தும் ஆதாரங்களை முன்வைக்கும் போது முகத்தை மூடுவதன் மூலம் சில பாதிப்புக்கள் இருக்கின்றன என, சில சந்தேகங்களைக் கிளப்புகிறார்கள். அல்லாஹ்வும் அவனது தூதர் (ஸல்) அவர்களுமே இக்கட்டளையை பிறப்பித்திருக்கின்றார்கள். அந்த சந்தேகங்களை கிளப்பக் கூடியவர்கள் முஸ்லிம்களாகவும் அல்லது காஃபிர்களாகவும் இருக்கலாம்.

இதில் காஃபிர்கள் சந்தேகங்களை கிளப்பும்போது அதை நாம் பொருட்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது. காரணம் எமது மார்க்கச் சட்டங்களை உதாசீனம் செய்ய வேண்டுமென்பதற்காக அவர்கள் இவ்வாறு செய்யலாம். எமக்கு அவர்களது சந்தேகங்களுக்கு பதில் சொல்ல வேண்டுமென்பது கட்டாயக் கடமை கிடையாது. அவர்களுக்கு பதில் சொல்லத் தெரியாது என்பதற்காக எங்களது குர்ஆன், ஹதீஸில் சொல்லப்பட்ட சட்ட திட்டங்களை எடுத்து வீசுவதும் கிடையாது. எனவே, காஃபிர்கள் இதுபற்றி ஏதும் சொல்லியிருந்தால் நாம் அதை பொருட்படுத்தத் தேவையில்லை.

அடுத்து சந்தேகம் கிளப்பக்கூடியவர் ஒரு முஸ்லிமாக இருக்கலாம். அல்லாஹ்வும் அவனது தூதர் (ஸல்) அவர்களும் சொல்லிய விசயத்தில் ஓர் முஸ்லிமுக்கு சந்தேகம் வந்துவிட்டால் அவரைத்தான் முதலில் பரிசீலனை செய்ய வேண்டும். குர்ஆன் மற்றும் ஹதீஸில் சந்தேகங்களைக் கிளப்பக்கூடியவரை நாம் ஆய்வுசெய்ய கடமைப்பட்டுள்ளோம். அவர்களது உள்ளத்தில் நோய் இருக்கிறது. இதற்குத்தான் முதலில் சிகிச்சை அளிக்கவேண்டும்.

## முதலாவது சந்தேகம்

‘நம்பிக்கையாளர்களான ஆண்களிடம், அவர்கள் தமது பார்வையைத் தாழ்த்திக் கொள்ளுமாறும், தமது கற்பைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் (நபியே) நீர் கூறுவீராக!...” (அந்நூர் - 30)

மேற்கூறப்பட்ட அல்குர்ஆன் வசனத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு, ஆண்களுக்கு அவர்களது பார்வையைத் தாழ்த்திக் கொள்ளும்படி கூறப்பட்டுள்ளது. எனவே பெண்கள் தங்கள் முகத்தை மறைத்திருந்தால், ஏன் ஆண்கள் பார்வையைத் தாழ்த்த வேண்டும் என தவறாக வாதிடுகின்றனர்.

## பதில்:

இவ்வசனத்தில் எதை விட்டும் பார்வையைத் தாழ்த்த வேண்டும் என்று குறிப்பிட்டுக் கூறப்படவில்லை. எதுவெல்லாம் தடுக்கப்பட்டுள்ளதோ, அவைகளைப் பார்ப்பதை விட்டும் நாம் தவிர்ந்து கொள்ள வேண்டும். பின்வரும் விடயங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

1. ஆண் பெண்களுடைய ‘அவ்ரத்’ எனும் மறைவிடங்களை விட்டும் பார்வையைத் தாழ்த்துவது. மாற்றுத் தரப்பினரின் வாதத்தின் படி ‘அவ்ரத்’களையும் திறக்கலாம் என்ற விபரீத கருத்து ஏற்பட்டுவிடும். பின்வரும் நபிமொழி அதனைத் தெளிவுபடுத்துகிறது. ஓர் ஆண் இன்னுமொரு ஆணுடைய மறைவிடத்தைப் பார்க்கவேண்டாம். ஒரு பெண் இன்னுமொரு பெண்ணின் மறைவிடத்தைப் பார்க்கவேண்டாம். என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஸஈத் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல்: முஸ்லிம் 338)

2. அந்நியமதப் பெண்களை விட்டும், அடிமைப் பெண்களை விட்டும் பார்வையைத் தாழ்த்திக்கொள்ள வேண்டும். ஏனெனில் அவர்கள் முகம் மூடவேண்டும் என்ற சட்டத்திலிருந்து விதிவிலக்களிக்கப்பட்டவர்கள் என்பதை நாம் ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளோம்.

3. எத்தனையோ பெண்களின் ஆடைகள் அவர்களின் நாட்டமின்றி, காற்றடிப்பதன் மூலம், கழன்று விழுவதன் மூலம் வெளியாகி சிலர் பார்க்கின்றனர். “தானாக வெளியாகுபவைகளைத் தவிர” என்ற குர்ஆன் வசனம் அதனை வலுப்படுத்துகிறது. உதாரணமாக,

ஒரு வீட்டின் பக்கத்தில் செல்லும் போது, அந்த வீட்டிலிருக்கும் பெண்களில் சிலரை திடீரென பார்க்க நேரிடலாம். அச்சமயங்களில் பார்வையைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும்.

4. நிர்ப்பந்தமான நிலையில் பார்க்க நேரிட்டால், தேவை முடிந்த பின் பார்வையைத் தாழ்த்த வேண்டும். மாறாக பார்வையை தொடரக் கூடாது. உதாரணமாக, சாட்சியத்தின்போது, வைத்தியத்தின்போது தேவையான அளவு மட்டும் பார்ப்பது. நபி (ஸல்) அவர்கள் அலி (ரழி) அவர்களைப் பார்த்து கூறினார்கள்: (பெண்களை) ஒரு முறை பார்த்தால், திரும்பவும் அடுத்த முறை பார்க்காதீர். ஏனெனில், முதல் பார்வை உனக்குரியது. அடுத்ததாக பார்ப்பது உனக்குரியதல்ல. (நூல்: அஹ்மத் 1373, அபூதாவூத் 2149, திர்மிதீ 2777)

## இரண்டாவது சந்தேகம்

“(நபியே!) நம்பிக்கையாளர்களான பெண்களிடம், அவர்கள் தமது பார்வையைத் தாழ்த்திக் கொள்ளுமாறும், தமது கற்பைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும், அவர்களது அலங்காரத்தில் வெளிப்படுவதைத் தவிர, வேறு எதையும் அவர்கள் வெளிப்படுத்தக்கூடாது என்றும், தமது முந்தானைகளை தமது மார்பகங்கள் மீது போட்டுக் கொள்ளுமாறும் நீர் அவர்களுக்குக் கூறுவீராக!” (அந்நூர் - 31)

மேற்கூறப்பட்ட வசனத்தில், “அலங்காரத்தில் வெளிப்படுவதைத் தவிர” என்ற வாசகத்திற்கு சிலர் முகமும், இரு மணிக்கட்டு வரை கையும் என்று விளக்கம் கொடுக்கிறார்கள். இவர்கள் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களின் கூற்றையே இதற்கு ஆதாரமாக முன்வைக்கிறார்கள்.

## பதில்:

1. அந்த செய்தி பைஹகீ என்ற கிரந்தத்தில் பதிவாகியுள்ளது. இதன் அறிவிப்பாளர் தொடரில் சஈத் இப்னு பஸீர் என்ற ஒருவர் இடம் பெற்றுள்ளார். இவர் மிக மிக பலவீனமானவர். எனவே இக்கருத்தை ஆதாரமாக எடுக்க முடியாது.

2. மேலும் இதன் மற்றுமோர் அறிவிப்பாளர் தொடரில் ஸுலைமான் அல் அஃமஷ் என்பவர் இடம்பெறுகிறார். அவர் தனது ஆசானிடமிருந்து

தான் நேரடியாகக் கேட்டதை உணர்த்தும் 'ஸமிஃது', 'ஹத்தஸனா', 'ஹத்தஸனீ ' போன்ற சொற்களைப் பயன்படுத்திக் கூறாமல் அவரது அறிவிப்புகள் ஏற்கப்பட மாட்டாது. ஏனெனில் இவர், அறிவிப்பாளர் தொடரில் பாதிப்பை ஏற்படுத்தும் 'தத்லீஸ்' எனும் மோசடி வகையில் பிரபலமானவர். அப்படிப்பட்டவர்கள் தாம் தமது ஆசானிடமிருந்து நேரடியாகக் கேட்டதை உணர்த்தும் சொற்களைப் பயன்படுத்திக் கூறாமல், அவர்களது அறிவிப்புகள் ஏற்கப்படமாட்டாது. இங்கு அஃமஷ் தாம் நேரடியாகக் கேட்டதை உணர்த்தாமல் 'அன்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தித்தான் அறிவித்துள்ளார். எனவே, இந்த அறிவிப்பின் இரு வழிகளும் பலவீனமானவை.

3. தாமாக வெளியாகக்கூடியது என்பதிலிருந்து நாமாக வெளிப்படுத்தக் கூடாது என்பது தெளிவாகிறது.

4. ஒரு வாதத்திற்கு முகத்தையும், கையையும் தவிர என்ற கருத்து சரியென வைத்துக்கொள்வோம். அதை ஏற்றுக் கொள்பவர்கள், பெண்கள் அவர்களது முகத்தை நன்கு அலங்கரித்துச் செல்வதை அனுமதிக்கிறார்களா? அலங்காரத்தை வெளிப்படுத்தக் கூடாது என்ற வார்த்தையில் இது நுழைந்துவிடுமென்பதை மறந்துவிட்டார்களா?

## மூன்றாவது சந்தேகம்

“இதற்குப் பின்னர், அடிமை(ப் பெண்)களைத் தவிர வேறு பெண்கள் உமக்கு (திருமணம் செய்வதற்கு) ஆகுமானவர்களல்லர். இவர்களுக்குப் பதிலாக வேறு மனைவியரை நீர் மாற்றுவதும் கூடாது. அவர்களது அழகு உம்மைக் கவர்ந்த போதிலும் சரியே! அல்லாஹ் யாவற்றையும் கண்காணிப்பவனாக இருக்கின்றான்.” (அல் அஹ்ஸாப்-52.)

மேற்கூறப்பட்ட அல்குர்ஆன் வசனத்தில் வரும் “அவர்களுடைய அழகு உம்மைக் கவர்ந்த போதிலும் சரியே...” என்ற வாசகத்திலிருந்து, முகத்தை மூடி வந்திருந்தால் எவ்வாறு அழகு கவர முடியுமென்பது மாற்றுத்தரப்பின் சந்தேகம்.

## பதில்:

இதை இரண்டு அடிப்படைகளில் ஆதாரமாக எடுக்க முடியாது.

1. பெண்களின் முகத்தைப் பார்த்துதான் அவர்களது அழகைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. இன்னொரு பெண் வர்ணிப்பதின் மூலமும் மற்ற பெண்களின் அழகை அறிந்துகொள்ள முடியும். அதற்கு, பின்வரும் ஹதீஸ் ஆதாரமாகும்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஒரு பெண் இன்னொரு பெண்ணை (வெற்றுமேனியோடு) கட்டித் தழுவிட வேண்டாம். பின்னர் அவளைப் பற்றி தன் கணவனிடம் அவளை அவன் நேரில் பார்ப்பதைப் போன்று வர்ணனை செய்ய வேண்டாம்."(அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத்(ரழி), நூல்: புகாரி: 5241)

இதனால்தான் நபி (ஸல்) அவர்கள், பெண்களைப் போன்று நடந்து கொள்ளும் அரவாணிகளை வீட்டிலிருந்து வெளியேற்றுங்கள் எனக் கூறியிருக்கிறார்கள்.

(ஒரு நாள் என் கணவர்) நபி (ஸல்) அவர்கள் என் அருகில் இருந்து கொண்டிருந்தார்கள். அங்கு எங்கள் வீட்டில் (பெண்களைப் போல் நடந்து கொள்ளும்) "அரவாணி" ஒருவனும் இருந்து கொண்டிருந்தான். அந்த "அரவாணி" என் சகோதரர் அப்துல்லாஹ் இப்னு அபீ உமைய்யாவிடம், "நாளை தாயிஃப் நகர் மீது உங்களுக்கு அல்லாஹ் வெற்றியளித்தால், ஃகைலானுடைய மகளை உனக்கு நான் அடையாளம் காட்டுகிறேன். (அவளை நீ மணந்துகொள்.) ஏனென்றால், அவள் முன்பக்கம் நாலு (சதை மடிப்புகளு)டனும் பின்பக்கம் எட்டு (சதை மடிப்புகளு)டனும் வருவாள்" என்று (அவளுடைய மேனி அழகை வர்ணித்துக்) கூறினான். இதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள், "இவன் உங்களிடம் ஒருபோதும் வரக்கூடாது" என்று கூறினார்கள். (அறிவிப்பவர்: உம்மு ஸலமா(ரழி), நூல்: புகாரி: - 5235)

மேற்கூறப்பட்ட ஹதீஸிலிருந்து, பெண்களின் அழகை இன்னொருவருக்கு வர்ணித்துக் கூறி, அவரை குழப்பத்தில் ஆழ்த்தக் கூடிய 'அரவாணிகள்' பெண்களிடத்தில் நுழைவதை நபியவர்கள் தடுத்தார்கள்.

2. பெண்களின் அழகு நபி (ஸல்) அவர்களுக்கு எடுத்துக் காண்பிக்கப்படும். காரணம், நபியவர்களை மணமுடிக்க விரும்பும் பெண்கள் தம் அழகைக் காட்டாமல் நபியவர்கள் அவர்களை விரும்ப

முடியாது. இதனை பின்வரும் ஹதீஸ் தெளிவு படுத்துகிறது.

நான் அனஸ் (ரழி) அருகில் இருந்தேன். அவருடன் அவர்களின் புதல்வியார் ஒருவரும் இருந்தார். (அப்போது), இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் தன்னை மணந்து கொள்ளுமாறு கோரியபடி ஒரு பெண் வந்து, “இறைத்தூதர் அவர்களே! (மணந்து கொள்ள) நான் தங்களுக்கு அவசியமா?” எனக் கேட்டார். அப்போது அனஸ் (ரழி) அவர்களின் புதல்வி, “என்ன வெட்கங்கெட்டத்தனம்! என்ன அசிங்கம்! என்ன அசிங்கம்!” என்று கூறினார். அனஸ் (ரழி), “அந்தப் பெண்மணி உன்னை விடச் சிறந்தவர். அந்தப் பெண் நபியவர்களை (மணந்து கொள்ள) ஆசைப்பட்டார். எனவே, தன்னை மணந்து கொள்ளுமாறு கோரினார்” என்று கூறினார்கள்.

(அறிவிப்பவர்: ஸாபித் அல் புனானி (ரஹ்), நூல்: புகாரி – 5120)

## நான்காவது சந்தேகம்

ஸாபித் அல்புனானி (ரஹ்) அவர்கள் அறிவித்தார்:

அனஸ் இப்னு மாலிக் (ரழி) அவர்கள் தம் வீட்டாரில் ஒரு பெண்மணியிடம், “இன்ன பெண்ணை உனக்குத் தெரியுமா?” என்று கேட்டார்கள். அப்பெண்மணி, ‘ஆம் (தெரியும்)’ என்று கூறினார். அனஸ் (ரழி) கூறினார்: அவள் ஒரு மண்ணறை அருகே அழுது கொண்டிருக்கும் போது, நபி (ஸல்) அவர்கள் அவளைக் கடந்துச் சென்றார்கள். அப்போது, ‘அல்லாஹ்வை அஞ்சிக்கொள்! பொறுமையாக இரு!’ என நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள். அப்பெண், ‘என்னைவிட்டு விலகிச் செல்வீராக. எனக்கு ஏற்பட்ட துயரம் உமக்கேற்பட வில்லை. (எனவேதான் இப்படி பேசுகிறீர்)’ என்று சொன்னாள். நபி (ஸல்) அவர்கள் (பேசாமல்) அவளைக் கடந்துச் சென்றார்கள். அப்போது ஒருவர் அவ்வழியே சென்றார். அவர், “இறைத்தூதர் (ஸல்) அவர்கள் உன்னிடம் என்ன சொன்னார்கள்?” என்று கேட்டார். அப்பெண், ‘எனக்கு அவர் யாரென்றும் தெரியாது’ எனக் கூறினாள். அம்மனிதர், ‘அவர்கள் தாம் இறைத் தூதர் (ஸல்) அவர்கள்’ என்று சொல்ல, அவள் நபி (ஸல்) அவர்களின் வீட்டு வாசலுக்குச் சென்றாள். அங்கு வாயில்காவலர் யாரையும் காணவில்லை. எனவே அவள், ‘இறைத்தூதர் அவர்களே! அல்லாஹ்வின் மீது ஆணையாக!

நீங்கள் யாரென்று நான் அறியவில்லை' என்று சொன்னாள். நபி (ஸல்) அவர்கள், "பொறுமை என்பது துன்பம் ஏற்பட்ட முதல் கட்டத்தில் கைக்கொள்வதேயாகும்" என்றார்கள். (நூல்: புகாரி 7154)

இந்த ஹதீஸிற்கும் விளக்கம் சொல்லும் போது, அவள் பல வருடங்களுக்குப் பின்னால் வந்ததாகவும் அவளை அடையாளம் கண்டு கொண்டதாகவும் ஹதீஸில் வந்திருப்பதாகக் கூறி, முகத்தைத் திறந்திருந்தால்தான் அவளை அடையாளம் கண்டுகொண்டார்கள் என்ற வாதத்தை முன்வைக்கின்றனர்.

## பதில்:

1. மேற்கூறப்பட்ட இந்த ஹதீஸில் அனஸ் (ரழி) அவர்கள், "இன்ன பெண்ணை தெரியுமா?" என்று தான் கேட்கிறார்கள். அது மட்டுமல்லாமல், அப்பெண் என்றுதான் தொடர்ந்து கூறுகிறாரே தவிர, நேரடியான எந்த வார்த்தையையும் பயன் படுத்தவில்லை. இதில் முகத்தைத் திறந்திருந்ததற்கு எந்த ஆதாரமுமில்லை.

2. அப்படியே ஒரு வாதத்திற்கு முகம் திறந்து வந்ததாக நாம் வைத்துக்கொண்டாலும், இது ஓர் அடிமைப் பெண்ணாகவோ, வயோதிகப் பெண்ணாகவோ இருந்திருக்கலாம் என்றுதான் நாம் அதை விளங்க வேண்டும்.

## ஐந்தாவது சந்தேகம்

அதாஉ இப்னு அபீ ரபாஹ் (ரஹ்) கூறினார்:

இப்னு அப்பாஸ் (ரழி) என்னிடம், சொர்க்கவாசியான ஒரு பெண்மணியை உங்களுக்குக் காட்டட்டுமா? என்று கேட்டார்கள். நான் ஆம் (காட்டுங்கள்) என்று சொன்னேன். அவர்கள், இந்தக் கறுப்பு நிறப் பெண்மணிதான். அவர் (ஒரு முறை) நபி (ஸல்) அவர்களிடம் வந்து, "நான் வலிப்பு நோயால் (அடிக்கடிப்) பாதிக்கப்படுகிறேன். அப்போது (என் உடலிலிருந்து ஆடை விலகி) உடல் திறந்து கொள்கிறது. எனவே எனக்காகப் பிரார்த்தியுங்கள்" என்றார். நபி (ஸல்) அவர்கள், "நீ நினைத்தால் பொறுமையாக இருக்கலாம். இதற்குப் பதிலாக உனக்கு சொர்க்கம் கிடைக்கும். நீ விரும்பினால் உனக்கு குணமளிக்கும்படி அல்லாஹ்விடம் நான்

பிரார்த்திக்கின்றேன்" என்று கூறினார்கள்." இந்தப் பெண்மணி, 'நான் பொறுமையாகவே இருந்துவிடுகிறேன். ஆனால், (வலிப்பு வரும்போது ஆடை விலகி) என் உடல் திறந்துகொள்கிறது. அப்படி திறந்து கொள்ளாமலிருக்க அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்" என்று கூறினார். அவ்வாறே நபி (ஸல்) அவர்கள் இப்பெண்ணுக்காகப் பிரார்த்தனை செய்தார்கள்.

அதாஉ இப்னு அபீ ரபாஹ் (ரஹ்) கூறினார்:

நான் உம்மு ஸுஃபரைப் பார்த்தேன். அவர்தாம் கஃபாவின் திரை மீது (சாய்ந்தபடி அமர்ந்து) உள்ள கறுப்பான உயரமான இப்பெண் ஆவார். (நூல் புகாரி – 5652)

இதில் முகத்தைத் திறக்கலாம் என்று சொல்லக் கூடியவர்கள் எடுக்கும் ஆதாரம், 'கறுப்புப் பெண்' என்ற வார்த்தைத்தான்.

## பதில்:

1. இந்த ஹதீஸில் முகம் திறந்திருந்ததாக குறிப்பிடப்படவில்லை. மாறாக, இந்தப் பெண்ணின் பெயர் உம்மு ஸுபர் என்றும் கருப்பான உயரமான பெண் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது நமது சமூகத்தில் நம்மோடு வாழும் பெண்களைப் பற்றி நாம், இவர் தரகர் வேலைப் பார்ப்பவர், இவர் வீடுகளில் வேலை செய்பவர் என்று ஒவ்வொருவரையும் அறிந்து வைத்திருப்பதைப் போன்றதாகும். அவர்களை நாம் முகம் மூடுவதற்கு முன்னர் கண்டிருந்தால் மூடியதன் பின்பும் பாதையில் செல்கின்ற போது நம்மால் அவரை அடையாளம் சொல்லக் கூடியதாகவும், அவர்களின் கணவன்மார்களுடன் சேர்ந்து பயணங்கள் போவதை வைத்தும் அவர்களை இது இன்னாரின் மனைவி உயர்ந்தவள், குட்டையானவள், மெலிந்தவள் என்று அடையாளங்கள் சொல்ல முடியும்.

2. ஒருவரின் பண்பைப் பற்றிக் குறிப்பிடும் போது அங்கு முகம் திறந்திருந்ததற்கு எந்த ஆதாரமும் கிடையாது. இன்னும் கூறப்போனால் மேற்கூறப்பட்ட இந்த ஹதீஸ் முகத்தைத் திறப்பதற்கு சற்றும் ஆதாரமற்றது என்று தான் கூறவேண்டும். காரணம், இதில் இந்தப் பெண் தனது நோய் பற்றி நபியவர்களிடத்தில் குறிப்பிடுகையில், வலிப்பு நோய் வரும்போது அவரது ஆடை வெளிப்படுவதாகக் கூறுகிறார். எனவே அவ்வாறு அவரது

ஆடை வெளிப்பட்ட சமயத்தில் கூட இவர் கறுத்தப் பெண் என்பதை மற்றவர்கள் கண்டு, அதை வைத்துக் கூறியிருக்கலாம். அல்லது சமயத்தில் சில பெண்களின் முகமூடிகள் விழுவதற்கும் வாய்ப்பிருக்கிறது. எனவே இப்படியான சந்தர்ப்பங்களில் கூட அவரைக் கண்டிருக்கலாம்.

3. அந்தப் பெண்மணி வயோதிகப் பெண்மணியாகவும் இருந்திருக்கலாம். அப்படியானவர்கள் முகம் மூடுவது அவசியமில்லை என்பதை ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளோம்.

## ஆறாவது சந்தேகம்

ஸஹ்ல் இப்னு ஸஃத் (ரழி) அறிவித்தார்:

ஒரு பெண்மணி நபி (ஸல்) அவர்களிடம் வந்து, “இறைத்தூதர் அவர்களே! என்னைத் தங்களுக்கு அன்பளிப்பாக வழங்கிட (மஹ்ரின்றி என்னைத் தாங்கள் மணந்துகொள்ள) வந்துள்ளேன்” என்று கூறினார். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அவரை நோக்கி பார்வையை உயர்த்திப் பார்த்துவிட்டு பார்வையைத் தாழ்த்திக் கொண்டார்கள். பிறகு தம் தலையைத் தொங்கவிட்டார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள், தம் விஷயத்தில் எந்த முடிவையும் செய்யவில்லை என்பதைக் கண்ட அந்தப் பெண் (அந்த இடத்திலேயே) அமர்ந்து கொண்டார்.

(நூல்: புகாரி – 5029, 5030, 5087, 5135)

மேற்கூறப்பட்ட இந்த ஹதீஸையும் ஆதாரமாக எடுத்துக்கொண்டு, அந்தப் பெண் வந்தபோது நபியவர்கள் பார்த்தார்கள். எனவே முகத்தைத் திறந்திருந்தால்தான் பார்க்கலாம் என்று சொல்கிறார்கள்.

## பதில்:

1. ஆம் உண்மைதான். ஆனால், திருமணம் பேசுவதாயின் கட்டாயம் முகத்தைப் பார்க்கத்தான் வேண்டும். இந்த ஹதீஸில் கூறப்படும் அந்தப் பெண் திருமணம் முடிக்கும் நோக்கத்திலேயே அங்கு வந்தார். எனவே இது ஆகுமான விஷயமாகும். அப்படியே இல்லையென்று வைத்துக் கொண்டாலும் நாம் முன்பு சொன்ன நான்கு அடிப்படைகளை வைத்துதான் இந்த செய்தியையும் நோக்க வேண்டும்.

2. அத்தோடு, இந்தப் பெண் அடிமையாகவும் இருக்கலாம். காரணம், திருமணம் முடிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டதும் நபி (ஸல்) அவர்கள் இந்தப் பெண்ணிடம், "உன்னுடைய வலியை கூட்டிக்கொண்டு வா" என்று சொல்லவில்லை. நபி (ஸல்) அவர்களே திருமணத்தை நடத்தி வைத்தார்கள். அடிமைப் பெண்களுக்குத்தான் தலைவர் திருமணம் செய்து வைப்பார். இந்தப் பெண் விஷயத்திலும் இப்படியே நடந்துள்ளது.

## ஏழாவது சந்தேகம்

சுபைஆ பின்த் அல்ஹாரிஸ் அவர்கள் 'பனூ ஆமிர் இப்னு லுஅய்' குலத்தைச் சேர்ந்த ஸஅத் இப்னு கவ்லா (ரலி) அவர்களுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தார். ஸஅத் (ரலி) பத்ருப்போரில் பங்கெடுத்தவராவார். இறுதி ஹஜ்ஜின் போது ஸஅத் (ரலி) இறந்துவிட்டார்கள். அப்போது 'சுபைஆ' கர்ப்பமுற்றிருந்தார். ஸஅத் அவர்கள் இறந்து நீண்ட நாட்கள் ஆகியிருக்கவில்லை; (அதற்குள்) சுபைஆ பிரசவித்துவிட்டார். (பிரசவத்திற்குப் பின் ஏற்படும்) உதிரப் போக்கிலிருந்து சுபைஆ அவர்கள் சுத்தமானபோது, பெண் பேச வருபவர்களுக்காகத் தன்னை அலங்கரித்துக் கொண்டார். அப்போது, பனூ அப்தித் தார் குலத்தில் ஒருவரான 'அபுஸ் ஸனாபில் இப்னு பஅக்கக் (ரலி)' சுபைஆ அவர்களிடம் வந்து, 'திருமணம் புரியும் ஆசையில் பெண் பேச வருபவர்களுக்காக உங்களை நீங்கள் அலங்கரித்திருப்பதை காண்கிறேன். அல்லாஹ்வின் மீதாணையாக! (கணவன் இறந்த ஒரு பெண் அவனுடைய இறப்புக்குப் பின் இருக்க வேண்டிய 'இத்தா' காலமாகிய) நான்கு மாதம் பத்து நாள்கள் முடியும் வரையில் நீங்கள் (மறு) மணம் புரிந்து கொள்ள முடியாது' என்று கூறினார்கள். சுபைஆ (ரலி) கூறினார்: இதை அபுஸ்ஸனாபில் என்னிடம் சொன்னதையடுத்து நான் மாலை நேரத்தில் என்னுடைய உடையை உடுத்திக் கொண்டு இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் சென்றேன். அப்போது நபி (ஸல்) அவர்களிடம் இது பற்றிக் கேட்டேன். அதற்கு, 'நீ பிரசவித்துவிட்டபோதே (மணந்து கொள்ள) அனுமதிக்கப்பட்டவளாக ஆகிவிட்டாய். நீ விரும்பினால் (மறு)மணம் செய்து கொள்' என்று நபி (ஸல்) அவர்கள் மார்க்கத் தீர்ப்பு வழங்கினார்கள். *(நூல்: புகாரி – 3991)*

மேற்கூறிய ஹதீஸில் அபுஸ் ஸனாபில் என்பவர், சுபைஆ என்ற

பெண்ணிடம் நீ எவ்வாறு உன்னைத் திருமணப் பேச்சுவார்த்தைக்காக அலங்கரித்துக்கொள்ளலாம் என வினவியுள்ளார். அப்பெண்ணின் முகத்தைப் பார்க்காமல் இதனைக் கூறமுடியாது என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது.

## பதில்:

1. இந்த சுபைஆ என்ற பெண் ஓர் அடிமையாவார். அடிமைப்பெண்கள் முகம் மூடுவது கட்டாயமல்ல என்பதை ஏற்கனவே பல முறை நாம் தெளிவுபடுத்தியுள்ளோம்.

இந்தப் பெண் அடிமை என்பதை பின்வரும் ஆதாரங்கள் உறுதிசெய்கின்றன.

முதலாவது: இவரது கணவரும் ஓர் அடிமை. சுதந்திரப் பெண்களை அடிமைகளுக்கு திருமணம் செய்ய முடியாது. இதனால் அடிமையின் மனைவியும் அடிமைதான். இதனை அறிஞர்களான இப்னு ஹிஷாம், வாகிதீ, இப்னு ஹிப்பான், இப்னு அப்துல்பர், இப்னுல் ஜவ்ஸி, இப்னுல் அஃதீர் ஆகியோர் கூறியுள்ளனர். (பார்க்க: சீறத்து இப்னி ஹிஷாம் - 1329, அஃத்ஃதிகாத் - 3151, அத்தம்ஹீத் - 8396, அஸ் ஸீரன் நபவிய்யாஃ - பாகம் 2 பக்கம் 8, 496)

இரண்டாவது: இந்தப் பெண் அடிமைதான் என்பதற்கு இன்னுமொரு ஆதாரம், நபி (ஸல்) அவர்கள், அந்தப் பெண்ணின் இத்தா முடிந்ததும் எனக்கு செய்தி தாருங்கள் என்பதாக சொன்னார்கள். அவருக்கு "வலீ இருந்தால் "வலீ"க்கு சொல்லுங்கள் எனச் சொல்லியிருப்பார்கள்.

இதை வலுப்படுத்துவதற்கு பின்வரும் ஹதீஸ் ஆதாரமாக அமைந்துள்ளது.

அபூ ஸலமா இப்னு அப்திர் ரஹ்மான் இப்ன் அவ்ஃப் (ரஹ்) அறிவித்தார்:

இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களிடம் ஒருவர் வந்தார். அப்போது அவர்களுக்கு அருகில் அபூஹுரைரா (ரழி) அவர்களும் அமர்ந்திருந்தார்கள். (அங்கு வந்த) அந்த மனிதர், "தன் கணவன் இறந்து நாற்பது நாட்களுக்குப் பின் பிரசவித்த ஒரு பெண்(ணின் 'இத்தா' பிரசவத்தோடு முடிந்து விடுமா என்பது) பற்றி எனக்குத் தீர்ப்பு வழங்குங்கள்" என்று கேட்டதற்கு, இப்னு அப்பாஸ் (ரழி), "இரண்டு தவணைகளில் பிந்தியது" என்று கூறினார்கள். உடனே

நான் (இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களிடம்,) “கர்ப்பிணிகளுக்கான இத்தா காலம் அவர்கள் குழந்தை பெற்றெடுக்கும் வரையிலாகும்” (என்று குர்ஆன் 65:4வது வசனம் கூறுகிறதே!) என்று கேட்டேன்.

அப்போது அபூ ஹுரைரா (ரழி), “நானும் என் சகோதரர் மகன் அபூ ஸலமா(வின் கருத்துடன்) உடன்(பட்டு) இருக்கிறேன்” என்று கூறினார்கள். அப்போது, இப்னு அப்பாஸ் (ரழி) தம் பணியாளர் “குரைப்” என்பவரை, (இது குறித்து) கேட்பதற்காக உம்மு ஸலமா(ரழி) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். அதற்கு உம்மு ஸலமா (ரழி) (பின்வருமாறு) பதிலளித்தார்கள்:

சுபைஆ (பின்த் அல்ஹாரிஸ்) அல் அஸ்லமிய்யா கர்ப்பிணியாக இருந்த சமயத்தில், அவரின் கணவர் (ஸஃத் இப்னு கவ்லா (ரழி) இறந்துவிட்டார். அவர் இறந்து நாற்பது நாள்களுக்குப் பின்னால், சுபைஆ குழந்தை பெற்றெடுத்தார். உடனே, அவரைப் பெண் பேசப்பட்டது. இறைத் தூதர் (ஸல்) அவர்கள், அவருக்குத் திருமணம் முடித்து வைத்தார்கள். அவரைப் பெண் கேட்டவர்களில் அபுஸ் ஸனாபில் இப்னு பஅக்கக் (ரழி) அவர்களும் ஒருவராவார். (எனவே, கர்ப்பிணிக்கு “இத்தா” பிரசவம் வரையில்தான்.) நூல்: புகாரி 4909

நபி (ஸல்) அவர்கள் இந்தப் பெண்மணிக்கு திருமணம் முடித்து வைத்தார்கள் என்பதற்கு மேற்கூறப்பட்ட இந்த ஹதீஸ் ஆதாரமாக அமைகிறது.

மேற்கூறப்பட்ட ஹதீஸில் அபுஸ்ஸனாபில் இப்னு பஅக்கக் (ரழி) என்ற இந்த சஹாபியும் இந்தப் பெண்ணை, பெண் கேட்டவர்களில் ஒருவராவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே திருமணம் பேசிவருபவருக்கு முகத்தைக் காட்டலாம் என்ற அனுமதியிருக்கின்ற காரணத்தினால் இச்சந்தர்ப்பத்தில் முகத்தைத் திறந்திருப்பது குற்றம் கிடையாது.

2. மேலும் மேற்கூறப்பட்ட ஹதீஸில் அபுஸ் ஸனாபில் இப்னு பஅக்கக் (ரழி) என்று சொல்லக்கூடிய இந்த சஹாபியும் இந்தப் பெண்ணை, பெண் கேட்டவர்களில் ஒருவராவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே திருமணம் பேசி வருபவருக்கு முகத்தைக் காட்டலாம் என்ற அனுமதியிருக்கின்ற காரணத்தினால் இச்சந்தர்ப்பத்தில் முகத்தைத் திறந்திருப்பது குற்றம் கிடையாது.

## எட்டாவது சந்தேகம்

அஸ்மா பின்த் அபீபக்ர் (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வருகின்ற போது அவர்களுடைய மேனியில் மெல்லிய ஆடை இருந்தது. இதை பார்த்த நபியவர்கள் தனது முகத்தைத் திருப்பிக் கொண்டவர்களாக, "அஸ்மாவே! ஒரு பெண் பருவ வயதை அடைந்தால் முகத்தையும், கைகளையும் தவிர ஏனைய பகுதிகள் அனைத்தையும் மறைக்க வேண்டும்" எனக் கூறினார்கள்.

இச்செய்தி அபூதாவூத் (4104) என்ற கிரந்தத்தில் இடம் பெற்றுள்ளது. இதில் தெளிவாக, 'முகத்தையும், கைகளையும்' என்று வந்திருக்கின்றதே! எனவே, முகத்தையும், கைகளையும் திறக்கலாம் என்பது அவர்களின் வாதமாகும்.

## பதில்:

இந்த ஹதீஸை நாம் ஆராய்ந்து பார்க்கும் போது அது இரு காரணங்களால் பலவீனமாகும்.

முதலாவது இந்த ஹதீஸை அறிவிக்கும் ஆயிஷா (ரழி) அவர்களிடமிருந்து அறிவிக்கும் ஃகாலித் பின் துரைக் என்று சொல்லக் கூடியவர் ஆயிஷா (ரழி) அவர்களை சந்தித்தவரல்ல. எனவே தொடர்பறுந்த செய்தியாகும். இவ்வாறான செய்தியை ஆதாரமாக எடுக்க முடியாது.

(பார்க்க: அல்இலல் லிப்னி அபி ஹாதம் - 1463]

இரண்டாவது அந்த ஹதீஸிலே சஈத் இப்னு பசீர் என்பவர் இடம்பெறுகிறார். அவர் பலவீனமானவர்.

மேற்கூறப்பட்ட இரண்டு காரணங்களின் அடிப்படையிலும் அந்த ஹதீஸை ஆதாரமாக எடுக்க முடியாது.

## ஒன்பதாவது சந்தேகம்

அபூ ஹுரைரா (ரழி) அறிவித்தார்:

ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் (விருந்தாளியாக) வந்தார். நபி (ஸல்) அவர்கள் (அவருக்கு உணவளிப்பதற்காகத்) தம் மனைவிமார்களிடம் சொல்லியனுப்பினார்கள். அப்போது அவர்கள், 'எங்களிடம் தண்ணீரைத் தவிர வேறெதுவும் இல்லை"

என்று பதிலளித்தார்கள். எனவே, இறைத்தூதர்(ஸல்) அவர்கள் (தம் தோழர்களை நோக்கி), இவரை (தம்முடன் உணவில்) சேர்த்துக்கொள்பவர் யார்? ‘அல்லது இவருக்கு விருந்தளிப்பவர் யார்?’ என்று கேட்டார்கள். அப்போது அன்சாரிகளில் ஒருவர், ‘நான் (விருந்தளிக்கிறேன்)’’ என்று சொல்லி அவரை அழைத்துக்கொண்டு தம் மனைவியிடம் சென்றார். (மனைவியிடம்) “இறைத்தூதர் (ஸல்) அவர்களின் விருந்தாளியைக் கண்ணியப்படுத்து’’ என்று கூறினார். அதற்கு அவரின் மனைவி, ‘நம்மிடம் நம் குழந்தைகளின் உணவைத் தவிர வேறெதுவுமில்லை’ என்று கூறினார். அதற்கு அந்த அன்சாரித் தோழர், “உன் (குடும்பத்திற்கான) உணவைத் தயாராக எடுத்து வைத்துவிட்டு, விளக்கை ஏற்றி (விடுவதைப் போல் பாவனை செய்து அணைத்து) விடு. உன் குழந்தைகள் உணவு உண்ண விரும்பினால் அவர்களைத் தூங்கச் செய்து விடு’’ என்று கூறினார். அவ்வாறே அவரின் மனைவியும் உணவைத் தயாராக எடுத்துவைத்து,

விளக்கை ஏற்றிவிட்டுத் தம் குழந்தைகளைத் தூங்கச் செய்து விட்டார். பிறகு விளக்கைச் சரி செய்வது போல் நின்று (பாவனை செய்து கொண்டே) விளக்கை அணைத்துவிட்டார். பிறகு அவரும் அவரின் மனைவியும் உண்பதுபோல் (விருந்தாளியான) அந்த மனிதருக்கு (பாவனை) காட்டலானார்கள். பிறகு இருவரும் (உணவு உண்ணாமல்) வயிறு ஒட்டியவர்களாக இரவைக் கழித்தனர். காலையானதும் அந்த அன்சாரி இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் சென்றார். நபி (ஸல்) அவர்கள், “நீங்கள் இருவரும் செய்ததைக்கண்டு அல்லாஹ் இன்றிரவு (மகிழ்ச்சியால்) சிரித்துக்கொண்டான் அல்லது வியப்படைந்தான்’’ என்று கூறினார்கள். அப்போது அல்லாஹ், தமக்கே தேவை இருந்தும் கூட, தம்மை விடப் பிறருக்கே அவர்கள் முன்னுரிமை வழங்குகிறார்கள். உண்மையில், தம் உள்ளத்தின் கருமித்தனத்திலிருந்து பாதுகாக்கப்பட்டவர்களே வெற்றியாளர்கள் என்னும் (திருக்குர்ஆன் 59:9ம்) வசனத்தை அருளினான். (நூல்: புகாரி – 3798)

மேற்கூறப்பட்ட ஹதீஸிற்கு சிலர் பின்வருமாறு விளக்கம் கூறுகின்றனர்:

நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இவ்வாறுதான் ஆண்கள், பெண்கள் எல்லோருமாக ஒன்றாகச் சேர்ந்து உட்காரும் பழக்கம் இருந்திருக்கிறது. விருந்து வழங்கும் போது அப்பெண்ணின் முகம்

திறந்தே இருந்திருக்க வேண்டும். முகம் திறப்பது குற்றமாக இருந்தால், அவர்களைப் பாராட்டி அல்லாஹ் குர்ஆன் வசனத்தை இறக்கியிருக்கமாட்டான்.

## பதில்:

1. இந்த ஹதீஸைத் தவிர வேறு எந்த ஹதீஸையும் சேர்ந்து உணவருந்தியதற்கு ஆதாரமாகக் காட்ட முடியாது. இதுகூட இரவு நேரத்தில் விளக்கையும் அணைத்துக் கொண்டு நடந்த ஒரு சம்பவம். நாம் இப்படியெல்லாம் சொன்னாலும்கூட இல்லை ஆண்கள், பெண்கள் சேர்ந்துதானே சாப்பிட்டுள்ளார்கள் என்றும் சொல்லலாம்.

ஆனால் இந்நிகழ்வு ஹிஜாபுடைய சட்டம் இறங்குவதற்கு முன்பு நடைபெற்றது. அதற்கான ஆதாரம், மேலுள்ள ஹதீஸில் இடம்பெற்றுள்ள வசனம் இடம்பெறும் அல் ஹஷ்ர் அத்தியாயம். இது பனூநளீர் எனும் குலத்தார் பற்றி அருளப்பட்ட அத்தியாயமாகும். அதனால்தான் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் இந்த அத்தியாயத்திற்கு பனூநளீர் எனப் பெயர் சூட்டினார்கள். (புகாரி: 4882, 4883)

அவர்கள் மதீனாவிலிருந்து வெளியேற்றப்பட்ட நிகழ்வு ஹிஜ்ரி 4-ம் ஆண்டு நடைபெற்றது. (பார்க்க: அல் காமில் ஃபித் தாரீஃக் - 2:60]

இதனையடுத்து அல் அஹ்ஸாப் யுத்தம் ஹிஜ்ரி 5-ம் ஆண்டு நடைபெற்றது.

(பார்க்க: அல் முன்தளம் ஃபீ தாரீஃகில் முழுக்கி – 3:227]

ஸயீத் இப்னு ஜுபைர் (ரஹ்) கூறினார்:

நான் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களிடம் “அத்தவ்பா” எனும் (9-வது) அத்தியாயம் தொடர்பாகக் கேட்டேன். அவர்கள், “அது (நயவஞ்சகர்களை) அம்பலப்படுத்தக்கூடிய அத்தியாயமாகும். “அவர்களில் இத்தகையோர் உள்ளனர் அவர்களில் இத்தகையோர் உள்ளனர்’ என (நயவஞ்சகர்களிலுள்ள எல்லாப் பிரிவினரையும் இனங்காட்டி) இவ்வத்தியாயம் இறங்கிக் கொண்டேயிருந்தது. எந்த அளவுக்கென்றால், தங்களில் ஒருவரைக்கூட விட்டு வைக்காமல் (அனைவரையும்) இது குறிப்பிட்டுவிட்டது என (நயவஞ்சகர்கள்) எண்ணினார்கள்” என்று கூறினார்கள்.

நான் அவர்களிடம், அல்அன்ஃபால் எனும் (8-வது) அத்தியாயம் குறித்துக் கேட்டேன். அவர்கள் பத்ருப்போர் குறித்து அது அருளப்பெற்றது என்று பதிலளித்தார்கள். நான் அல்ஹஷ்ர் எனும் (59-வது) அத்தியாயம் குறித்துக் கேட்டேன். அவர்கள், “பனூநளீர் குலத்தார் குறித்து அருளப்பெற்றது” என்று பதிலளித்தார்கள். *(நூல்: புகாரி – 4882, 4883)*

2. இது மட்டுமின்றி ஆண்கள், பெண்கள் சேர்ந்து வுழூ செய்தது, நபியவர்களின் கை ஒரு பெண்ணின் கையில் பட்டது போன்ற பல நிகழ்வுகள் ஹிஜாபுடைய வசனம் இறங்குவதற்கு முன்னால் நடைபெற்றுள்ளது. எனவே இதனை வைத்து முகம் திறப்பதற்கோ அல்லது ஆண்கள் பெண்கள் கலந்திருப்பதற்கோ ஆதாரமாக எடுக்க முடியாது.

## பத்தாவது சந்தேகம்

அஸ்மா பின்த் அபீபக்ர் (ரழி) அவர்கள் அறிவித்தார்கள்: என்னை சுபைர் இப்ன் அவ்வாம் (ரழி) மக்காவிலிருக்கும் போதே மணந்து கொண்டார். இந்தப் பூமியில் அவருக்கு தண்ணீர் இறைக்கும் ஓர் ஒட்டகத்தையும், ஒரு குதிரையையும் தவிர, எந்த சொத்துகளும் அடிமைகளும், உடைமைகளும் இருக்கவில்லை. அந்தக் குதிரைக்கு நான் தீனி போடுவேன், தண்ணீர் இறைப்பேன். அவரின் தோல் சுமலையைத் தைப்பேன், மாவு குழைப்பேன், ஆனால், எனக்கு நன்றாக ரொட்டி சுடத் தெரியாது. என் அண்டை வீட்டு அன்சாரிப் பெண்களே எனக்கு ரொட்டி சுட்டுத் தருவார்கள். அந்தப் பெண்கள் உண்மையாளர்களாக இருந்தனர். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் என் கணவருக்கு வருவாய் மானியமாய்த் தந்த நிலத்திலிருந்து நானே பேரீச்சங் (கொட்டைகளை)ப் பொறுக்கி என் தலை மீது வைத்து சுமந்து வருவேன். அந்த நிலம் இங்கிருந்து இரண்டு மைல் தொலைவிலிருந்தது.

(ஒரு நாள்) நான் என் தலை மீது பேரீச்சங்கொட்டைகளை சுமந்து வந்து கொண்டிருந்தேன். (வழியில்) நான் இறைத்தூதர் (ஸல்) அவர்களை, (அவர் தம் தோழர்களான) அன்சாரிகளில் சிலர் அவர்களுடன் இருக்கச் சந்தித்தேன். அப்போது இறைத் தூதர்(ஸல்) அவர்கள் என்னை அழைத்தார்கள். தமக்குப் பின்னால் என்னை அமர்த்திக் கொள்வதற்காக ‘இஃக், இஃக்’ என்று சொல்லி, தம்

ஒட்டகத்தை மண்டியிட வைத்தார்கள். (ஆனால்) நான் ஆண்களுடன் செல்ல வெட்கப்பட்டேன். மேலும், நான் (என் கணவர்) ஸுபைர் (ரழி) அவர்களையும், அவரின் ரோஷத்தையும் நினைத்துப் பார்த்தேன். அவர் மக்களில் மிகவும் ரோஷக்காரராக இருந்தார். நான் வெட்கப்படுவதைப் புரிந்துக் கொண்ட இறைத் தூதர் (ஸல்) அவர்கள் சென்றார்கள். (நூல்: புகாரி –5224.)

இந்த ஹதீஸில் நபியவர்கள் சுபைர் (ரழி) அவர்களின் மனைவியை பாதையில் சந்தித்து "அஸ்மா" என அழைத்தாக இடம்பெற்றுள்ளது. எனவே முகம் திறந்திருந்தால்தான் பெயர் கூறி அழைக்க முடியும் என வாதிடுகின்றனர்.

## பதில்:

1. குறித்த ஹதீஸை நன்கு கூர்ந்து கவனித்தால் அதில், அவ்வாறு 'அஸ்மா" என்று கூப்பிட்டதாக வரவில்லை. ஹதீஸில் இல்லாத ஒன்றை நுழைத்து தனது வாதத்தை நிறுவ முனைவது மிகப்பெரும் தவறாகும்.

2. அஸ்மா (ரழி) அவர்கள் முகத்தை மூடிக்கொண்டு வந்தாலும் அவர்களை நபி (ஸல்) அவர்களுக்கு அடையாளம் தெரிந்துக் கொள்ளலாம் என்பதற்கு இந்த ஹதீஸிலேயே ஆதாரம் இருக்கிறது. ஏனெனில், அவர்களுக்கு இந்த நிலத்தை மானியமாய் நபியவர்கள்தான் வழங்கிய இந்த இடத்திற்கு தொடர்ந்து போய் வரக்கூடியவர் ஸுபைரின் மனைவிதான் என்று முகத்தைத் திறக்காமலே சுலபமாக புரிந்து கொள்வார்கள். இவ்வாறு தெளிவாக ஹதீஸில் கூறப்பட்டிருந்தும் சகோதரர் அவர்கள் இந்த ஹதீஸ் பற்றி கூறும் போது, நபியவர்களுடன் அன்சாரி சஹாபாக்கள் பலர் இருந்தார்கள். அவர்களும் அஸ்மா (ரழி) அவர்களைப் பார்த்துத்தானே இருப்பார்கள் என்பதாகக் கூறுகிறார். ஆனால் மேற்கூறப்பட்ட இந்த ஹதீஸில் அவ்வாறு இடம்பெறவில்லை. எனவே முகத்தைத் திறப்பதற்கு இந்த ஹதீஸில் எந்த ஆதாரமும் கிடையாது.

## பதினோராவது சந்தேகம்

"ஒரு பெண் (நடந்து வந்தால்) ஷைத்தான் (தூண்டிவிடும்) கோலத்திலேயே முன்னோக்கி வருகிறாள்; ஷைத்தான் (தூண்டிவிடும்)

கோலத்திலேயே திரும்பிச் செல்கிறாள். எனவே, உங்களில் ஒருவரது பார்வை ஒரு பெண்ணின் மீது விழுந்து (இச்சையைக் கிளறி)விட்டால், உடனே அவர் தம் துணைவியிடம் செல்லட்டும். ஏனெனில், அது, அவரது மனத்தில் தோன்றும் (கெட்ட) எண்ணத்தை அகற்றிவிடும்" என்று கூறினார்கள்.

*அறிவிப்பவர்: ஜாபிர் (ரழி), நூல்: முஸ்லிம் - 1403.*

மேற்கூறப்பட்ட ஹதீஸை ஆதாரமாகக் காட்டி முகத்தை மறைத்துக் கொண்டு போனால் இது எவ்வாறு நடைபெறும்? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றனர்.

## பதில்:

பெண்கள் முகத்தைத் திறந்து கொண்டு போயிருப்பார்கள் என்று கூறுவது இரண்டு அடிப்படைகளில் தவறானது.

1. அதே ஹதீஸின் ஆரம்பத்தில், ஒரு பெண் ஷைத்தானின் வடிவத்தில் முன்னோக்கியும் வருவாள், பின்னோக்கியும் வருவாள். எனவே, உங்களில் ஒருவர் ஒரு பெண்ணைப் பார்த்து ஆசை ஏற்பட்டால் தன்னுடைய மனைவியிடம் சென்று உடலுறவு கொள்ளட்டும். அது அவனது உள்ளத்தில் ஏற்பட்ட உணர்வுகளை இல்லாமலாக்கிவிடும் என்று வருகிறது.

ஒரு பெண் ஷைத்தானுடைய வடிவத்தில் பின்னோக்கியும் வருவாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, பின்னோக்கி வருகின்ற போது, முகத்தை ஒரு போதும் காணமுடியாது. மேலும், பின்பக்கமாக பார்த்து ஆசை ஏற்பட்டாலும் தனது மனைவியிடம் செல்லுமாறுதான் நபியவர்கள் கூறியுள்ளார்கள். எனவே பெண் தன்னை திறந்திருந்தால் மட்டும்தான் ஆசை ஏற்படுமென்பது தவறான வாதமாகும்.

2. முஸ்லிமல்லாத பெண்கள், அடிமைப் பெண்கள் போன்றோர் முகத்தைத் திறந்துகொண்டுதான் வருவார்கள். எனவே அவர்களை பார்க்கின்ற போது ஆசை ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

## பன்னிரண்டாவது சந்தேகம்

ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் நபி (ஸல்) அவர்களுடன் பெருநாள் தொழுகைக்குச்

சென்றிருந்தேன். அவர்கள் பாங்கு, இகாமத் இன்றி ஃகுத்பாப் பேருரை நிகழ்த்துவற்கு முன் தொழுகையை ஆரம்பித்தார்கள். பின்பு பிலால் (ரழி) அவர்களைப் பிடித்துக் கொண்டு எழும்பி நின்று, அல்லாஹ்வை அஞ்சி நடக்கும்படியும், அவனுக்கு வழிபட்டு நடக்கும்படியும் மக்களுக்கு கட்டளையிட்டு பிரசங்கத்தை ஆரம்பித்தார்கள். அந்த உரையை முடித்து விட்டு, பெண்கள் பக்கமாக சென்று அவர்களுக்கும் உரை நிகழ்த்தினார்கள். அவ்வுரையில், 'பெண்களே! நீங்கள் தர்மம் செய்யுங்கள்! காரணம், உங்களில் அதிகமானவர்கள் நரகின் விறகுகளாவீர்கள்'' எனக் கூறினார்கள். அவ்வாறு உபதேசம் செய்து கொண்டிருக்கும் போது கன்னம் இரண்டும் கறுத்த ஒரு பெண்மணி எழுந்து, 'ஏன் அதிகமான பெண்கள் நரகின் விறகுகளாக ஆகின்றார்கள்?'' எனக் கேள்வி கேட்டாள். அதற்கு நபியவர்கள், 'நீங்கள் அதிகமாக சபிக்கிறீர்கள். மேலும், கணவனுக்கு மாறு செய்கிறீர்கள்'' எனக் கூறினார்கள். அப்போது பெண்கள், பிலால் (ரழி) அவர்கள் விரித்திருந்த ஆடையில் தங்களது ஆபரணங்களை (நகைகளை) கழற்றிப் போட்டார்கள். *(முஸ்லிம் 885)*

இதில் இவர்கள் ஆதாரமாக வைக்கக் கூடிய பகுதியைப் பார்ப்போம். நபி (ஸல்) அவர்கள் பெருநாள் தினத்தில் தொழுகையை முடித்துவிட்டு, பெண்களின் பக்கமாகச் சென்று, அவர்களுக்கு உபதேசம் செய்கிறார்கள். அவ்வாறு உபதேசம் செய்து கொண்டிருக்கும் போது, ஒரு பெண்மணி எழுந்து கேள்வி கேட்டாள். இதில் "கன்னம் இரண்டும் கறுத்த'' என்று வரக்கூடிய வார்த்தையை வைத்துக்கொண்டு இதுவே முகத்தைத் திறப்பதற்கு ஆதாரமாகும். ஏனெனில், முகத்தைத் திறந்திருந்ததினால்தான் கன்னம் இரண்டும் கறுத்த பெண் என்று காண முடிந்தது எனக் கூறுகிறார்கள்.

## பதில்:

1. முகம் திறப்பதற்கு இதனையும் ஆதாரமாகக்கொள்ள முடியாது. ஏனெனில் இந்த ஹதீஸை ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (ரழி) அவர்களைத் தவிர்த்து இன்னும் ஐந்து சஹாபிகள் அறிவிக்கின்றார்கள். இவர்கள் யாரும் அந்தப் பெண்ணைப் பற்றிய வர்ணனையை சொல்லவில்லை. ஜாபிர் (ரழி) அவர்கள் மட்டும் மேலதிகமாக

சொன்ன ஒரு கருத்து இது. ஏனைய ஐவரும் இந்த கருத்தை சொல்லவில்லை. அப்பெண் முகம் திறந்திருந்தால் அனைவரும் அதனைக் குறிப்பிட்டிருப்பார்கள். இதன் மூலம் ஜாபிர் (ரழி) அவர்கள் மாத்திரம் எதிர்பாராத விதமாக அவளது முகத்திரை அகழும் போது கண்டிருக்கலாம் என்ற முடிவுக்கும் வரமுடியும்.

2. கன்னம் கறுத்தப் பெண் என்று சொல்வதிலிருந்து அந்தப் பெண் வயோதிபப் பெண்ணாகவும் இருந்திருக்கலாம். அப்படி வயோதிகப் பெண்ணாக இருந்தால், முகத்தைத் திறப்பதில் குற்றம் கிடையாது.

3. இந்த ஹதீஸை சொல்கின்றபோது இது ஹிஜாபுடைய சட்டம் இறங்குவதற்கு முன் வந்ததா அல்லது பின் வந்ததா என்று தெளிவாகச் சொல்லப்படவில்லை. எனவே குர்ஆன், ஹதீஸை விளங்கக்கூடிய ஒருவர் இந்த ஹதீஸின் விளக்கத்தை, இது ஹிஜாப் சட்டத்திற்கு முன்பு இறக்கப்பட்ட செய்தியாக இருந்திருக்கலாம் அல்லது அடிமைப் பெண்ணாகவோ வயோதிகப் பெண்ணாகவோ இருந்திருக்கலாம் என்றுதான் இதனை விளங்க வேண்டும்.

4. இந்த “கன்னம் கறுத்தப் பெண்” என்று வரும் செய்தியைப் பற்றி அறிஞர்கள் கூறுகையில், இந்தப் பெண் அடிமைப் பெண்ணாக இருந்திருக்கலாம் எனக் கூறுகிறார்கள். காரணம், அவர்கள்தான் அடிக்கடி வெளியில் செல்வார்கள். அதனால், அவ்வாறு ஏற்பட வாய்ப்பிருக்கிறது. இதே மாதிரி வயோதிகப் பெண்களுக்கும் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

உம்மு ஸலமா (ரழி) அவர்களின் செய்தி இக்கருத்தை வலுப்படுத்துகிறது.

உம்மு ஸலமா (ரழி) கூறினார்: நபி(ஸல்) அவர்கள் என் வீட்டில் ஓர் அடிமைப் பெண்ணை பார்த்தார்கள். அவளுடைய முகத்தில் கருஞ் சிவப்பான படர்தாமரை ஒன்று இருந்தது. நபி (ஸல்) அவர்கள், இவளுக்கு ஓதிப் பாருங்கள். ஏனெனில், இவள் மீது கண்ணேறு பட்டிருக்கிறது என்று கூறினார்கள்.

(புகாரி – 5739)

குறிப்பு: எந்த ஹதீஸிலும் இவ்வாறான கருத்துக்களைப் போன்று மறைமுகமான சில செய்திகள் கூறப்பட்டிருக்கின்றதே தவிர, நேரடியாக முகத்தைத் திறந்து சென்றதாக இடம் பெறவில்லை என்பதை நாம் விளங்க வேண்டும்.

## பதிமூன்றாவது சந்தேகம்

உங்களில் ஒருவர் திருமணம் முடிப்பதற்காக ஓர் பெண்ணை பார்க்க நாடினால் அவளையறியாமலே பார்ப்பது குற்றமில்லை.

(நூல்: அஹ்மத் 23602)

மேற்கூறப்பட்ட ஹதீஸை ஆதாரமாகக் காட்டி பெண்கள் இயற்கையிலேயே முகம் திறந்திருந்தால்தான் அவர்களை அறியாமலேயே பார்க்க முடியும் என்று கூறுகிறார்கள்.

## பதில்:

1. பெண்கள் அடிப்படையிலேயே அந்நிய ஆடவர்களை விட்டும் தங்களை முழுமையாக மறைத்துள்ளார்கள் என்பதை இந்த ஹதீஸ் தெளிவு படுத்துகிறது. காரணம் ஜாபிர் (ரழி), முஹம்மத் இப்னு மஸ்லமா (ரழி) ஆகியோர்கள் தாம் திருமணம் முடிக்க விரும்பிய பெண்களை நேரடியாகப் பார்ப்பது சிரமமாக இருந்த காரணத்தினால் ஒளிந்து பார்த்திருக்கிறார்கள். பெண்கள் முகம் திறந்திருந்தால் ஏன் சஹாபாக்கள் நேரடியாகப் பார்க்காமல், சிரமப்பட்டு மறைந்திருந்து பார்த்தார்கள்?

2. திருமணப் பேச்சு வார்த்தையின் போது ஒரு பெண்ணைப் பார்ப்பது குற்றமில்லை என்ற சட்டம் ஏனைய நிலைகளில் அவளைப் பார்ப்பது குற்றம் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. மூடியிருப்பதால்தான் பார்க்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. திறந்திருந்தால் விசேஷமாக பார்க்க வேண்டிய அவசியமில்லை.

## பதினான்காவது சந்தேகம்

கணவனுக்கு செலவு செய்வது பற்றி நபியவர்களிடம் கேள்வி கேட்பதற்கு ஸைனப் (ரழி) அவர்கள் சென்றிருந்தார்கள். அதே போன்றொரு சந்தேகத்தைக் கேட்பதற்கு இன்னுமொரு அன்சாரிப் பெண்மணியும் வந்திருந்தார். அவ்வேளை பிலால் (ரழி) அவர்கள், அவர்களுக்கு அருகில் செல்லும் போது, அப்பெண்களில் ஒருவர் பிலால் (ரழி) அவர்களிடம், “ஒரு பெண் தனது கணவனுக்கும், அனாதைப் பிள்ளைகளுக்கும் செலவு செய்து கொண்டிருக்கிறாள்.

அப்படியிருக்க தனது தர்மத்தையும் கணவனுக்கு செலவு செய்யலாமா?" எனக் கேட்டு வரும்படி சொன்னார்கள். அப்பொழுது நபியவர்களிடம் பிலால் (ரழி) அவர்கள் அந்தக் கேள்வியைக் கேட்ட போது, "அதைக் கேட்டவர் யார்?" என நபியவர்கள் வினவினார்கள். பிலால் (ரழி) அவர்கள் "ஸைனப் (ரழி)" எனக் கூறினார்கள். அதற்கு நபியவர்கள் "எந்த ஸைனப்?" என்று கேட்டதற்கு, அவர் "அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களின் மனைவி" என்று கூறினார்கள்.

(புஹாரி 1466, முஸ்லிம் 1000)

ஸைனப் (ரழி) அவர்கள் முகத்தை மூடிக்கொண்டு வந்திருந்தால், எவ்வாறு அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களின் மனைவி என்று பிலால் (ரழி) அவர்கள் கூற முடியும்? என்று கேட்கிறார்கள்.

## ✔ பதில்:

அதே ஹதீஸிலேயே அதற்கான பதில் இருப்பதை நாம் கவனிக்கலாம்.

1. ஸைனப் (ரழி) அவர்கள், "நான் எனது கணவருக்கும், அனாதைப் பிள்ளைகளுக்கும் செலவு செய்கிறேன்" என்ற அந்த வாசகத்திலிருந்தே அவர்கள் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களின் மனைவி என்பதை எடுத்துக் காட்டுகிறது.

உதாரணத்திற்கு, முகம் மூடக்கூடிய ஒரு பெண் அனாதைகளைப் பராமரிக்கிறாள் என்று வைத்துக் கொண்டால், அந்தப் பெண்ணை ஊரில் இருப்பவர்கள் அனைவரும் பெயரளவிலே தெரிந்து வைத்திருப்பார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இன்னாருடைய மனைவிதான் அனாதையில்லம் நடத்துகிறாள் என்று எல்லோரும் பார்க்காமலேயே சொல்லி விடுவார்கள். மேலும், அவருடைய உருவ அமைப்பை வைத்தும் அறிந்துக கொள்ளலாம்.

2. சமுதாயத் தொடர்புள்ள பெண்களை அவர்களின் பேச்சை வைத்து, அவர் யாருடைய மனைவி என மதிப்பிடலாம்.

3. இச்சம்பவம் ஹிஜ்ரி 5 - இற்கு முன்பு நடந்த செய்தியாகவும் இருக்கலாம்.

4. ஸைனப் (ரழி) அவர்கள் திருமணத்தில் ஆசை வைக்கப்படாத வயோதிகப் பெண்ணாக இருக்கலாம்.

## பதினைந்தாவது சந்தேகம்

இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஆண்கள், பெண்கள் அனைவரும் ஒன்றாக வுழூச் செய்யக் கூடியவர்களாக இருந்தோம். (நூல்: அஸ் ஸுனனுல் குப்ரா - நஸாஈ - 72)

இதே ஹதீஸ் அபூதாவூதில் ஓர் அறிவிப்பில் ஒரே பாத்திரத்தில் எமது கைகளைப் போட்டு நாம் வுழூச் செய்வோம் என்று இடம் பெற்றிருக்கிறது. (அபூ தாவூத் - 80)

இந்த ஹதீஸை வைத்து ஆண்கள், பெண்கள் இரண்டறக் கலந்து வுழூச் செய்ததன் மூலம் பெண்கள் முகத்தைத் திறந்திருந்ததாகக் கூறுகிறார்கள்.

## பதில்:

1. இந்த ஹதீஸுக்கு இவ்வாறான விளக்கம் கூறுவதற்குக் காரணம், ஆண்களும் பெண்களும் ஒரே நேரத்தில் வுழூ செய்தார்கள் எனப் புரிந்ததாகும். ஆனால், அவ்வாறு புரிவது பின்வரும் காரணங்களால் தவறானதாகும்.

### முதலாவது:

தொழுகையின் ஸஃப்புகளைப் பற்றி நபியவர்கள் கூறுகின்ற போது, ‘ஆண்களின் வரிசைகளில் மிகவும் சிறந்தது முதல் வரிசையாகும். அவற்றில் தீயது கடைசி வரிசையாகும். பெண்களின் வரிசையில் மிகவும் சிறந்தது கடைசி வரிசையாகும். அவற்றில் தீயது முதல் வரிசையாகும்.

(அறிவிப்பவர்: அபூ ஹுரைரா(ரழி), நூல்: முஸ்லிம் - 749)

ஆச்சரியம் என்னவெனில், தொழுகைக்கு முன்னால் ஒன்று சேர்ந்தவர்கள் தொழுகையில் எவ்வாறு இரண்டறக் கலக்கவில்லை?

எனவே, ஒரே நேரத்தில் என்ற கருத்தை நாம் இங்கு எடுக்க முடியாது. மேலும் இந்த ஹதீஸுக்கு விளக்கம் எழுதிய அறிஞர்கள் யாரும் இவ்வாறான விளக்கத்தைக் கூறவில்லை. மாறாக பெண்கள் கை போட்டு வுழூச் செய்த பாத்திரத்தில் எஞ்சியிருக்கும் நீரில்

ஆண்கள் வுழூச் செய்யலாமா? என்ற சட்டத்தை பேசி அது கூடும் என்ற தீர்ப்பை வழங்கியுள்ளார்கள்.

இரண்டாவது:

எமது பள்ளியில் ஆண்கள், பெண்கள் அனைவரும் ஒன்றாக தராவீஹ் தொழுதோம் என்று நாம் கூறினால், இரண்டறக் கலந்து என்ற விளக்கத்தை எடுக்க மாட்டோமோ அதே போன்றுதான் இதனையும் விளங்க வேண்டும். இதே ஹதீஸின் இன்னுமொரு அறிவிப்பில் ஒரே பாத்திரத்தில் வுழூச் செய்தோம் என இடம்பெற்றிருப்பது இக்கருத்துக்கு மேலும் வலு சேர்க்கிறது.

2. அல்லது இந்நிகழ்வு ஹிஜாபுடைய வசனம் இறங்குவதற்கு முன்பு நடைபெற்றிருக்கலாம். இல்லை, ஹிஜாபுக்கு பிறகுதான் என்று யாராவது வாதிட்டால், அவர் அதற்கான ஆதாரத்தை முன் வைக்க வேண்டும்.

இரு விதமான கருத்துகள் உள்ளவற்றில் குறிப்பிட்டதொரு கருத்தை மட்டும் ஆதாரமின்றி திணிப்பது தவறாகும்.

## பதினாறாவது சந்தேகம்

இவர்கள் எழுப்பக்கூடிய சந்தேகங்களில் ஒன்றுதான், முகத்தை மூடிக்கொண்டு கள்வர்கள் வரலாமென்பது.

## பதில்:

இப்படியொரு சந்தேகத்தை அல்லாஹ்வோ, அல்லது தூதர் (ஸல்) அவர்களோ, சஹாபாக்களோ சொல்லவில்லை. மார்க்கத்தை அறியாத ஒரு காபிர் அல்லது குர்ஆன், ஹதீஸில் நம்பிக்கை இல்லலாத ஒரு முஸ்லிம்தான் இவ்வாதத்தை முன்வைக்கமுடியும்,

அப்படியே, அவர்களின் வாதப்பிரகாரம் முகத்தை மூடிக்கொண்டு திருடர்கள் வருவார்களென்று நாம் வைத்துக்கொண்டாலும் கூட, முகம்மூடி வந்து களவாடும் கள்வர்களுக்கு இஸ்லாத்தில் தண்டனை இல்லையென்று சொல்லப்படவில்லை. இவ்வாறு செய்தாலும்கூட ஒரே தண்டனைதான். அடுத்த விசயம் முகத்தை மூடக்கூடாது என்று தடை விதிப்பதின் மூலம் கள்வர்களைக் கட்டுப்படுத்த முடியுமா என்றால் அதுவும் நடைபெற முடியாது.

அடுத்ததாக முகத்தை மூடிக்கொண்டு களவெடுத்தவர்களின் விகிதாசாரத்தையும் முகத்தைத் திறந்துகொண்டு களவெடுத்தவர்களின் விகிதாசாரத்தையும் கணக்கிடுகின்றபோது, முகத்தை திறந்து எடுத்தவர்களின் கணக்கெடுப்பே 99 சதவிகிதமாக இருக்கிறது. அதே மாதிரி பரவலாகப் பேசப்படுகின்ற, பத்திரிகைகளில் வாசிக்கின்ற இன்னுமொரு செய்தியை எடுத்து நோக்கினாலும், முகத்தை திறந்து ஓடிப்போவோர்களின் எண்ணிக்கையின் கணக்கெடுப்பும் நூற்றுக்கு 99 சதவிகிதமாகவே இருக்கின்றது.

எனவே, இந்தக் காரணங்களுக்கும் இஸ்லாத்திற்கும் எந்த சம்பந்தமுமில்லை. அது மட்டுமல்ல, இது அல்லாஹ்வும் அவனது தூதர் (ஸல்) அவர்களும் சொன்ன சட்டதிட்டத்தை இடித்தொழிப்பதற்கான சதித்திட்டமே தவிர வேறெதுவுமில்லை. உண்மையான ஒரு விசுவாசிக்கு இப்படியான சந்தேகங்கள் வரக்கூடாது.

இவ்வாறான விஷயங்களை மறுப்பவர்கள் அதிகமாக மாற்று மதத்தவர்களுக்கு மார்க்கம் சொல்லக் கூடியவர்களாகவே இருப்பார்கள். அவர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு சிலவேளை பதில் சொல்வது சிரமமாக இருக்கும். அல்லாஹ் நம்மை பரிசீலனை செய்வதற்காக பகுத்தறிவைத் தாண்டி சில சட்டங்களை சொல்லியிருக்கின்றான். அவைகளில் நமது புத்தியை, சிந்தனையை முற்படுத்தக் கூடாது. அவ்வாறு நடக்கின்றபோது இஸ்லாத்தை விட்டும் வெளியேறும் கட்டம் வந்துவிடும். (அல்லாஹ் நம் அனைவரையும் பாதுகாப்பானாக!)

## பதினேழாவது சந்தேகம்

அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

ஃபழ்ல் (ரழி) நபி (ஸல்) அவர்களுக்குப் பின் (ஒட்டகத்தில்) அமர்ந்து கொண்டிருந்த போது “கஸ்அம்” எனும் கோத்திரத்தை சார்ந்த ஒரு பெண் வந்தார். உடனே ஃபழ்ல் அப்பெண்ணைப் பார்க்க, அப்பெண்ணும் இவரைப் பார்த்தார். (இதைக் கவனித்த நபி (ஸல்) அவர்கள்) ஃபழ்லின் முகத்தை வேறு திசையில் திருப்பினார்கள். பிறகு அப்பெண் நபி (ஸல்) அவர்களை நோக்கி, “நபியவர்களே! நிச்சயமாக அல்லாஹ் தன் அடியார்களின் மீது ஹஜ்ஜைக் கடமையாக்கியுள்ளான். ஆனால் என்னுடைய வயது

முதிர்ந்த தந்தையால் பயணிக்கமுடியாது. எனவே, நான் அவருக்குப் பகரமாக ஹஜ் செய்யலாமா?'' எனக் கேட்டார். நபி (ஸல்) அவர்கள், "ஆம்!'' என்றார்கள். இது இறுதி ஹஜ்ஜில் நிகழ்ந்தது.

(நூல்: புகாரி 1513, 1855)

இந்த ஹதீஸில் நபியவர்களிடம் ஒரு பெண்மணி முகத்தை திறந்துகொண்டு வந்ததைத் தடைசெய்யாமல் நபியவர்கள் அங்கீகரித்துள்ளார்கள். முகம் திறக்கக்கூடாது என்றிருந்தால் நிச்சயம் தடைசெய்திருப்பார்கள். எனவே முகம் மூடுவது அவசியமில்லை என்பதற்கு இந்த ஹதீஸ் தெளிவான ஆதாரமாகும். இறுதி ஹஜ்ஜில் இது நிகழ்ந்திருப்பதால் ஹிஜாபுடைய சட்டம் இறங்குவதற்கு முன் நடந்த சம்பவம் எனவும் கூறமுடியாது. குறித்த பெண்ணின் மூலம் ஒரு நபித்தோழர் ஈர்க்கப்பட்டதனால் அவள் ஒரு வயோதிகப் பெண் என்று வாதிடவும் முடியாது எனக் கூறுகின்றனர்.

## பதில்:

இந்த ஹதீஸ் பல்வேறு அறிவிப்புக்களில் இடம்பெற்றுள்ளது. அவை எவற்றிலுமே குறித்த பெண் முகத்தைத் திறந்துகொண்டு வந்ததாக இல்லை. மாறாக அழகான வாலிபப் பெண் என்பதாக மாத்திரமே இடம்பெற்றுள்ளது. இவ்வாறு அழகான பெண் என்ற வார்த்தைப் பிரயோகத்தை வைத்து மாத்திரம் அந்தப் பெண் முகம் திறந்து இருந்ததாக முடிவு செய்யமுடியாது. ஏனெனில் ஒரு பெண்ணுடைய அழகை, அவளுடைய உடல் அமைப்பு ஆடையமைப்பு போன்ற பலவிதங்களில் அறியலாம். இதனால்தான் ஒரு பெண்ணின் முகத்தைக் காணாவிட்டாலும் அந்தப் பெண்ணை சிலர் உற்றுநோக்குவதை நாம் கவனிக்கலாம். அல்லது குறித்த பெண்ணின் முகத்திரை எதிர்பாராத விதத்தில் விலகியதை வைத்தும் அந்த ஸஹாபி அப்பெண்ணின் அழகை அறிந்திருக்கலாம்.

இவ்வாறான பல இடம்பாடுகள் இருப்பதால் இந்த ஹதீஸ் முகம் திறந்துதான் இருந்தார்கள் என்பதற்கு ஆதாரமாக அமைய முடியாது. ஏனெனில் ஒரு ஆதாரத்தில் பல இடம்பாடுகள் இருக்கும் போது அவற்றில் ஒரு விடயத்துக்கு மாத்திரம் அதனை ஆதாரமாகக்கொள்வது தவறாகும் என்பது இஸ்லாமிய சட்டக்கலை விதிகளில் ஒன்றாகும்.

# ஹிஜாப் எனும் சட்டம் நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்களுக்கு மாத்திரமா?

இப்போது நாம் முகத்தை மறைக்கத் தேவையில்லை என்று கூறுபவர்களின் சந்தேகங்களுக்கான பதில்களைப் பார்த்தோம். அடுத்ததாக அவர்கள் இன்னுமொரு சந்தேகத்தை முன்வைப்பார்கள். இது நபியவர்களின் மனைவிமார்களுக்கு உரிய சட்டம்; ஏனைய பெண்களுக்கு இச்சட்டம் கிடையாது என்ற கருத்தை சொல்கிறார்கள். இதற்கு அவர்கள் சான்றாக வைக்கக்கூடிய ஆதாரம், அல்லாஹ் தனது திருமறையில் கூறுகின்றான்:

'நம்பிக்கை கொண்டோரே! உணவுக்காக உங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டாலேயன்றி நீங்கள் நபியின் வீடுகளில் நுழைய வேண்டாம். அது தயாராவதை எதிர்பார்த்தவராக இருக்க வேண்டாம். எனினும் நீங்கள் அழைக்கப்பட்டால் அப்போது நுழையுங்கள். நீங்கள் உணவு உட்கொண்டால் கலைந்து செல்லுங்கள். பேச்சில் ஈடுபட்டுக் கொண்டிருக்காதீர்கள். நிச்சயமாக இது நபிக்கு தொல்லை தரும். இதனை அவர் உங்களிடம் (கூற) வெட்கப்படுவார். அல்லாஹ் சத்தியத்தைக் கூற வெட்கப்படமாட்டான் (நபியின் மனைவியர்களான) அவர்களிடம் ஏதேனும் ஒரு பொருளை நீங்கள் கேட்பதாயின், திரைக்கு அப்பால் இருந்தே அவர்களிடம் கேளுங்கள். இதுதான் உங்கள் உள்ளங்களுக்கும் அவர்களின் உள்ளங்களுக்கும் மிகத் தூய்மையானதாகும். நீங்கள் அல்லாஹ்வின் தூதருக்கு தொல்லை கொடுப்பதோ, அவருக்குப் பின் அவரது மனைவியர்களை நீங்கள் மணம் முடிப்பதோ உங்களுக்கு ஒருபோதும் தகுமானதல்ல. நிச்சயமாக இது அல்லாஹ்விடம் (பாவத்தால்) கடுமையானதாக இருக்கின்றது''.(அல்அஹ்ஸாப் - 53)

இவ்வசனத்தில் அல்லாஹ் நபியவர்களையும், அவர்களின் மனைவியரையும் பற்றித்தான் பேசுகின்றான். எனவே இது ஏனைய பெண்களுக்குக் கிடையாது என்கிறார்கள்.

## பதில்

நபியவர்களின் மனைவிகள் மட்டும் முகத்திரை அணிய வேண்டும் என்பது பின்வரும் பல காரணங்களால் தவறாகும்.

### முதலாவது

அல்குர்ஆன் அனைத்து மக்களுக்கும் பொதுவான ஒன்றாகும். அல்லாஹ் திருமறையில் கூறுகின்றான்:

“…இந்தக் குர்ஆனைக் கொண்டு உங்களையும், இது யாரைச் சென்றடைகிறதோ அவர்களையும் நான் எச்சரிப்பதற்காக எனக்கு இது வஹியாக அறிவிக்கப்பட்டுள்ளது.”

(அல்அன்ஆம் - 19)

எனவே யாருக்கெல்லாம் குர்ஆனிலிருந்து ஒரு செய்தி கிடைக்கிறதோ அவர் அதனை ஏற்று அமல் செய்வது கடமையாகும். சில வசனங்கள் நபிமார்களைப் பார்த்து பேசினாலும் அவை நபியல்லாதவர்களையும் உள்ளடக்கும். அதே போன்றுதான் நபிமார்களின் மனைவிமார்களைப் பார்த்து சில வசனங்கள் பேசினாலும் அது அனைத்துப் பெண்களையும் உள்ளடக்கும்.

உதாரணமாக, அல்லாஹ் கூறுகிறான்:

“(நபியே) நீர் இணை வைத்தாலும் நிச்சயமாக உமது செயல்கள் அழிந்துவிடும். மேலும், நீர் நட்டவாளர்களில் ஆகிவிடுவீர்…”

(அஸ்ஸுமர் – 65)

இவ்வசனத்தில் நபியைப் பார்த்து கூறப்பட்டிருந்தாலும் நபிக்கு மட்டுமே சொந்தமானது எனக் கூறமாட்டோம்.

### இரண்டாவது

ஒரு சட்டம் ஒருவருக்கு மட்டும் சொந்தமானது என்று கூறுவதாக இருந்தால், மேலதிக ஆதாரம் வேண்டும்.

உதாரணமாக நபி (ஸல்) அவர்களுக்கு மட்டும் சொந்தமான ஒரு சட்டம்தான் மஹரின்றி விவாகம் செய்வதற்கு நபியவர்களுக்கு ஒரு பெண் தன்னை அன்பளிப்பாக வழங்கினால் அவளைத் திருமணம் செய்யலாம் என்பதாகும். அதனை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

'இறைநம்பிக்கை கொண்ட பெண் தன்னைத் தானே நபிக்காக அன்பளிப்பாய் வழங்கி, நபியும் அவளைத் திருமணம் செய்திட விரும்பும் பட்சத்தில் உமக்கு அது ஆகுமானதாகும். இந்தச் சலுகை உமக்கு மட்டுமே உரியதாகும்; பிற நம்பிக்கையாளர்களுக்கு இல்லை! *அல் அஹ்ஸாப் - 50.*

நபியவர்களுக்கு மாத்திரம் ஒரு சட்டம் விதிக்கப்படும் போது, மேலுள்ள வசனத்தில் இடம்பெற்றது போன்று அது தெளிவாகக் கூறப்படும். அவ்வாறு கூறப்படாத பட்சத்தில் அது பொதுச் சட்டம் என்பதே இஸ்லாமிய அடிப்படையாகும். எனவே இது போன்ற எவ்வித ஆதாரமும் முகம் மூடும் விடயத்தில் இடம்பெறாததனால் அதனைப் பிரத்யேக சட்டமாகக் கருதுவது மாபெரும் தவறாகும்.

உமர் (ரழி) அவர்கள் நபியவர்களின் மனைவிமாருக்கு மாத்திரம்தானே முகம் மூடும் சட்டம் விதிக்கப்படவேண்டும் என வேண்டிக்கொண்டார்கள். எனவே இது அவர்களுக்கு மாத்திரம் உரிய சட்டமே என வாதிடுவதும் தவறாகும்.

ஏனெனில் பிக்ஹ் கலையின் அடிப்படை விதிகளில் ஒன்றுதான், வார்த்தையின் பொதுமையே கவனத்தில் கொள்ளப்படவேண்டுமே தவிர இறங்கிய பிரத்யேக காரணமல்ல என்பதாகும். குறித்த சட்டம் அதன் வசனத்தின் பின்னனியாக நிகழக்கூடிய சம்பவத்திற்கு மாத்திரம் உரியதல்ல என்பதே இதன் விளக்கமாகும்.

அது போன்றே இங்கு நபியவர்களின் மனைவிமாரின் விடயத்தில் குறித்த வசனம் அருளப்பட்டிருந்தாலும் இச்சட்டம் அனைத்துப் பெண்களுக்கும் பொதுவானது என்பதே பிக்ஹ் கலையின் அடிப்படைக்கு நெருக்கமானதாகும்.

இதனால்தான் இவ்வசனத்திற்கு விரிவுரை வழங்கிய பல அறிஞர்கள் இது அனைத்துப் பெண்களுக்கும் பொதுவானதே எனக் கூறியுள்ளனர்.

1. இமாம் தபரீ
   *(தஃப்ஸீருத் தபரீ - பாகம் 2, பக்கம் 313)*
2. அபூபக்ர் இப்னுல் அரபீ
   *(அஹ்காமுல் குர்ஆன் - பாகம் 3, பக்கம் 616)*
3. குர்துபீ
   *(தஃப்ஸீருல் குர்துபீ - பாகம் 14, பக்கம் 227)*

4. அல் ஜஸ்ஸாஸ்
(அஹ்காமுல் குர்ஆன் - பாகம் 5, பக்கம் 242)

5. ஷன்கீதி
(அள்வாஉல் பயான் - பாகம் 6, பக்கம் 242)

## மூன்றாவது

அல்லாஹுத்தஆலா இந்த வசனத்தை ஆரம்பிக்கின்றபோது, "விசுவாசிகளே! உங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டாலே தவிர, நபியுடைய வீட்டில் நுழைய வேண்டாம்" என்று கூறுகின்றான். இது நேரடியாக நபி (ஸல்) அவர்களைப் பார்த்து சொல்லப்படுகின்றது. எனவே இந்த வசனத்தை வைத்து, நாம் நபிக்கு மட்டும் சொந்தமானது என்று எடுத்துக்கொண்டால், நபியின் வீடு அல்லாத ஏனைய வீடுகளில் அனுமதியின்றி நாம் நுழையலாம் என்று கூற வேண்டிவரும். இவ்வாறு சொல்வது தவறாகும்.

## நான்காவது

அதே வசனத்தில் தொடர்ந்து அல்லாஹ் கூறுகையில், "அவர்களிடம் (நபியின் மனைவியரிடத்தில்) ஏதாவதொன்றை நீங்கள் கேட்டால் திரைக்கு பின்னாலிருந்தே கேளுங்கள்". இது நேரடியாக நபியின் மனைவிமார்களைப் பார்த்துத்தான் சொல்லப்படுகின்றது. இவ்விடத்தில் சட்டத்தைவிட சட்டத்தை விவரிக்கும் காரணம் தான் முக்கியமானது. இதைத்தான் அல்லாஹுத் தஆலா குறிப்பிடுகிறான்: "அதுவே உங்கள் உள்ளங்களுக்கும் அவர்களின் உள்ளங்களுக்கும் மிகத்தூய்மையானதாகும்".

நபியின் மனைவிமார்களின் உள்ளங்களும், சஹாபாக்களின் உள்ளங்களும் இந்த முகத்திரை மூலம் தூய்மையாகுவதாக இருந்தால், இவர்களல்லாத எம்மைப் போன்ற மற்ற ஆண், பெண்களின் உள்ளம் தூய்மையாகுவதற்கு முகத்தை மறைத்து ஹிஜாபை பேணுவது பெண்களுக்கு மிக அவசியமாகும்.

முகம் மூடுவது நபியின் மனைவிமார்களுக்கு மட்டும் என்றிருந்தால், காரணத்தைக் குறிப்பிட்டு கூறிய அல்லாஹ், உங்களது உள்ளங்களுக்கும் என்று ஏன் சஹாபாக்களை நோக்கிக் கூறவேண்டும்?

இதன் மூலம் பெண்கள் மறைக்காமல் இருக்கும் போது இன்னுமொரு பகுதியினர் பாதிக்கப்படுகின்றார்கள் என்பது தெளிவாகிறது. நபியவர்களின் மனைவியருக்கு மட்டும் என்று சொன்னால் ஏனைய பெண்களும், ஆண்களும் நபியின் மனைவியர்களை விட, சஹாபாக்களை விட உள்ளத்தால் மிகத் தூய்மையானவர்கள் என்ற மிகத் தவறான ஒரு கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும், நபியவர்களின் மனைவியர்கள் எங்களுக்கு தாய்மார்களைப் போன்றவர்கள். தாய்மார்களைப் பார்ப்பதுதான் பிரச்சினையற்றதாக இருக்க வேண்டும். அப்படியிருந்தும் அவர்களையே பார்க்கக் கூடாதென்றிருக்கும் போது, ஏனைய சாதாரண பெண்களை எவ்வாறு பார்ப்பது? எனவே, இக்கருத்து தவறானது மட்டுமின்றி, குர்ஆனில் சொல்லப்பட்ட நோக்கத்தை, சட்டத்தை தகர்த்தெறிகிறது.

சஹாபாக்கள் நபி (ஸல்) அவர்களின் சூழலில், முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். அவர்களுக்கே இச்சட்டம் சொல்லப்பட்டிருந்தால், எங்களைப் போன்றவர்களுக்கு இதைவிட கடுமையாகத்தான் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் இச்சட்டம் நமக்கில்லை என்று குர்ஆன், ஹதீஸைக் கற்றவர்கள் சொல்வது ஆச்சரியமான ஒன்றுதான். புனித அல்குர்ஆனை நபியவர்களிடமிருந்து எங்களுக்கு கொண்டுவந்து சேர்த்தவர்களே சஹாபாக்கள். அப்படியிருக்கும் போது, அவர்கள் கூட இந்த வசனங்களைத் தெளிவாக விளங்கி, தனது வாழ்வில் நடைமுறைப்படுத்தினார்கள். அப்படியாயின் சஹாபாக்களுக்கோ, தாபியீன்களுக்கோ, அதைத் தொடர்ந்து வந்த சமுதாயங்களுக்கோ இந்த வசனங்களை விளங்க முடியாமல் போய்விட்டது மட்டுமின்றி எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பின் வாழ்கின்ற சிலருக்குத்தான் இந்த வசனங்கள் தெளிவாகப் புரிகின்றனவா? எனவே, இவ்வாறு சொல்பவர்கள் அவர்களுடைய நிலையைப் பற்றி சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

## ஐந்தாவது

அல்லாஹுத்தஆலா அதே சூராவில் தொடர்ந்து குறிப்பிடுகையில், யார் யாருக்கு தனது முகத்தைக் காட்டலாம் என்று கூறுகிறான்:

“(நபியின் மனைவியர்களான) அவர்கள் தமது தந்தையர்கள், தமது ஆண்மக்கள், தமது சகோதரர்கள், தமது சகோதரர்களின் ஆண்மக்கள், தமது சகோதரிகளின் ஆண்மக்கள், தமது பெண்கள்,

தமது அடிமைகள் ஆகியோரிடம் (திரையின்றி இருப்பதில்) குற்றமில்லை. நீங்கள் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் கண்காணிப்பவனாக இருக்கின்றான்" *(அல் அஹ்ஸாப் - 55)*

இவ்வசனத்தில் மஹ்ரமானவர்களாகக் குறிப்பிடப்படுவோரே ஏனைய பெண்களுக்கும் மஹ்ரமானவர்களாவார்கள். எனவே யாரும் இது நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்களுக்கு மாத்திரமுரிய சட்டம், ஏனைய பெண்களுக்குரிய சட்டமல்ல என்று கூறமாட்டோம்.

## ஆறாவது

*அல்லாஹுத்தஆலா இதே சூராவின் தொடரில் கூறுகிறான்:*

*"நபியே! உமது மனைவியருக்கும், உமது புதல்வியருக்கும், நம்பிக்கையாளர்களின் பெண்களுக்கும், அவர்கள் தமது முந்தானைகளைத் தங்கள் மீது தொங்க விடுமாறு கூறுவீராக! அவர்கள் அறியப்படுவதற்கும், நோவினைப்படுத்தப்படாமல் இருப்பதற்கும் இதுவே மிக நெருக்கமானதாகும். மேலும் அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாகவும், நிகரற்ற அன்புடையவனாகவும் இருக்கின்றான்".*

*(அல் அஹ்ஸாப் - 59)*

இவ்வசனத்தில் நம்பிக்கையாளர்களின் பெண்களுக்கும் என தெளிவாக சொல்லப்பட்டிருப்பதால், இது மறுப்புத் தெரிவிப்பவர்களின் ஆதாரங்களை உடைத்தெறியக் கூடியதாக இருக்கின்றது. மேலும் இந்த வசனத்திற்கு அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் விளக்கம் சொல்கின்ற போது, "தங்கள் தலை முந்தானைகளை தாழ்த்திக் கொள்ளுமாறு கூறுவீராக" என்ற வார்த்தைக்கு முகத்தை மூடிக்கொள்ளுங்கள் எனத் தெளிவாக கூறுகின்றார்கள். நபியவர்களின் காலத்தில் வாழ்ந்து வந்த அந்த சூழலைப் பார்த்த இந்த சஹாபிதான், இவ்வாறான விளக்கத்தைக் கூறுகிறார். அதுமட்டுமன்றி வேறு எந்த சஹாபியும் முகத்தை மூடுவது கூடாது, தேவையில்லை என்பது போன்ற விளக்கங்களை கூறவில்லை. ஏனெனில் அவர்கள் நபியவர்களின் சூழலில் வாழ்ந்து, நபியவர்கள் சொன்னதை அப்படியே நடைமுறைப்படுத்தியவர்கள்.

இந்த வசனத்திற்கு விளக்கம் பார்க்கின்ற போது, 53-ஆவது வசனத்திற்கும் 59-ஆவது வசனத்திற்கும் கருத்து முரண்படுவது போல் தெரிகின்றது. காரணம் மறுப்பு தெரிவிப்பவர்கள் இந்த 59-ஆவது வசனத்தில் வரக்கூடிய “ஜலாபீப்” என்ற வார்த்தைக்கு இது முகத்திலிருந்து ஓரமாகத் தொங்க விடப்படுவது என்ற விளக்கத்தைக் கூறுகிறார்கள். அப்படியாயின், அவர்கள் இவ்விளக்கப் பிரகாரம் நபியவர்களின் மனைவிமார்களும் அவ்வாறுதான் முகத்தை திறந்து அணியவேண்டுமென்று சொல்ல வேண்டும். 53-ஆவது வசனத்தை நபியவர்களின் மனைவிமார்களுக்கு மட்டுமே என்று சொன்னால் இந்த வசனம் அவர்களின் விளக்கத்தின் பிரகாரம் அதற்கு முரண்படுகிறது.

எனவே 59-ஆவது வசனத்தில் நபியவர்களின் மனைவிமார்கள் உட்பட ஏனைய பெண்களும் முகத்தை மூட வேண்டுமென்ற சட்டம் தெள்ளத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதிலும் ஆதாரமில்லை என்று கூறினால், நபியவர்களின் மனைவிமார்களுக்கும் முகத்தை மூடத் தேவையில்லை என்ற சட்டம் வரும். அதுமட்டுமின்றி அல்குர்ஆன் வசனங்களை முன்பின்னாக மாற்றியமைக்க வேண்டுமென்று கூற வேண்டிவரும். அப்படியொரு சட்டத்தைக் கொண்டு வந்தாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. அல்லது ஆரம்பத்தில் முகம் மூடுமாறு கட்டளையிட்டுவிட்டு பின்பு முகம் திறப்பதாக கட்டளையிட்டதாக கருதவேண்டிய நிலை ஏற்படும். இது எவருமே கூறாத புதுக்கருத்தாகும்.

அல்லாஹ் நம் அனைவரையும் பாதுகாப்பானாக!

## ஏழாவது

ஸூரா அஹ்ஸாபில் ஹிஜாபுடைய கட்டளையுடன் சேர்த்து இன்னும் பல கட்டளைகள் கூறப்பட்டிருக்கின்றன. அதில் ஒன்று,

“உங்கள் வீடுகளில் ஓதப்படும் அல்லாஹ்வின் வசனங்களையும், (சுன்னா எனும்) ஞானத்தையும் நினைவு கூறுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நுட்பமானவனாகவும், நன்கறிந்தவனாகவும் இருக்கின்றான்” (அஹ்ஸாப் - 34)

இவ்வசனத்தை வைத்து நபியவர்களின் மனைவிமார்கள் அல்லாத ஏனையவர்களின் வீடுகளில் குர்ஆன், ஹதீஸை படிப்பது கூடாது

எனக் கூற முடியுமா? ஹிஜாபுடைய வசனத்தைவிட இந்த வசனம் மிகத் தெளிவாக "உங்களுடைய வீடுகள்" என நபிமார்களின் மனைனவிமார்களின் வீடுகளைக் குறிப்பிட்டுக் கூறுகிறது. எனவே, மற்றவர்களின் வீடுகளில் குர்ஆன், ஹதீஸ் படிக்கக் கூடாது என ஒரு முஸ்லிம் எவ்வாறு கூற முடியாதோ அதே போல் நபியவர்களின் மனைவிமார்களுக்கு மட்டுமே ஹிஜாப் கடமை என்றும் கூறமுடியாது.

## எட்டாவது

பின்வரும் வசனமும் நபியவர்களின் மனைவிமார்களைப் பற்றித் தான் பேசுகிறது.

"நீங்கள் இவ்வுலக வாழ்க்கையையும் அதன் அலங்காரத்தையும் விரும்புபவர்களாக இருந்தால், வாருங்கள்! உங்களுக்கு நான் வாழ்க்கை வசதிகளை வழங்கி அழகான முறையில் உங்களை விடுவித்தும் விடுகின்றேன் என்று நபியே நீர் உமது மனைவியரிடம் கூறுவீராக!". அன்றி நீங்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும், மறுமை வாழ்க்கையையும் விரும்புவீர்களாயின், நிச்சயமாக அல்லாஹ் உங்களிலுள்ள இத்தகைய நன்மையைக் கருதுபவர்களுக்கு மகத்தான (நற்)கூலியை தயார்படுத்தி வைத்திருக்கின்றான். (அஹ்ஸாப் – 28,29)

இவர்களின் கருத்துப்படி அல்லாஹ்வையும் அவனது தூதர் (ஸல்) அவர்களையும் நேசிக்கும் பெண்கள் மகத்துவமிக்க கூலியை பெற்றுக்கொள்ள முடியாதா?

## ஒன்பதாவது

நபியுடைய மனைவிகளே! உங்களில் எவரேனும் பகிரங்கமான யாதொரு மானக்கேடான காரியத்தைச் செய்வாராயின், அதற்குரிய தண்டனை அவர்களுக்கு இரு மடங்காக அதிகரிக்கப் படும். இது அல்லாஹ்விற்கு மிக்க சுலபமானதாகவே இருக்கின்றது! உங்களில் எவரேனும் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கட்டுப்பட்டு நற்செயல்களைச் செய்தால், அதற்குரிய கூலியை அவருக்கு நாம் இரு மடங்காகத் தருவோம். அன்றி, மிக்க கண்ணியமான வாழ்க்கையையும் அவருக்கு நாம் தயார்படுத்தி வைத்திருக்கின்றோம். (அஹ்ஸாப் : 30, 31)

மேற்கூறிய வசனங்களின் அடிப்படையில், நபி(ஸல்) அவர்களின் மனைவிமார்கள் ஒரு குற்றம் செய்தால், அவர்களுக்கு இரண்டு விதமான தண்டனைகள். அவர்கள் ஒரு நற்செயலை செய்தால் இரண்டு தடவைகள் நன்மைகள் வழங்கப்படும்.

எனவே, ஏனைய சாதாரண பெண்கள் அவர்களைப்பின்பற்றி செய்கின்ற ஒரு நல்ல செயலுக்கு ஒரு நன்மை கிடைக்கும். நபியவர்களின் மனைவிமார்கள் ஏனைய பெண்களுக்கு முன்மாதிரியானவர்கள். எனவே, அவர்களைப் பின்பற்றி, முகத்தை மறைப்பது இஸ்லாமிய சட்டதிட்டங்களில் உள்ள ஒரு செயல் என அறிந்துகொள்வோம்.

சஹாபிப் பெண்கள் நபியவர்களின் மனைவிமார்களை அணுவணுவாகப் பின்பற்றுபவர்களாக இருந்ததுடன், அவர்கள் செய்ததைத் தங்களுக்கும் மார்க்கமாக எடுத்து நடந்தார்கள் என்பதற்கு கீழ்வரும் ஹதீஸ் ஆதாரமாக அமைகிறது.

இப்னு அப்பாஸ் (ரழி) அறிவித்தார்:

உமர்(ரழி) அவர்கள் கூறுகிறார்கள், (ஒரு நாள்) நான் என் மனைவி (ஸைனப் பின்த் மழ்வூன்) இடம் (கோபத்துடன்) இரைந்து பேசினேன். உடனே என் மனைவியும் என்னை எதிர்த்துப் பேசினார். அவர் என்னை எதிர்த்துப் பேசியது (எனக்குப் பிடிக்க வில்லை அ)தை நான் வெறுத்தேன். அதற்கு அவர், “நான் உங்களை எதிர்த்துப் பேசியதற்காக நீங்கள் ஏன் (என்னை) வெறுக்கிறீர்கள்? அல்லாஹ்வின் மீதாணையாக! நபி (ஸல்) அவர்களின் துணைவியர் கூட (அன்னாரின் பேச்சுக்கு) மறு பேச்சு பேசத்தான் செய்கிறார்கள். அவர்களில் சிலர் நபியவர்களிடம் பகலில் இருந்து இரவு வரை பேசுவதில்லை” என்று கூறினார். (புகாரி- 2468, 5191

(இது நீண்ட ஹதீஸிலிருந்து ஒரு பகுதி)

## பத்தாவது

*அதே அத்தியாயம் 32வது வசனத்தில் நபியவர்களின் மனைவிமாரைப் பார்த்து ''ஆண்களுடன் நீங்கள் குழைந்து பேச வேண்டாம்'' எனக் கூறுகின்றது. இவர்களின் வாதப்படி நபியவர்களின் மனைவிமாரை விழித்து வந்துள்ள வசனங்கள் அவர்களுக்கு மாத்திரம் உரியது என்றால் ஏனைய பெண்கள் குழைந்து பேசலாம் என்ற விபரீத கருத்து வந்துவிடும்.*

# தவறாக புரியப்பட்ட சூரா அஹ்ஸாபின் 59-ம் வசனமும் அதற்கான தெளிவும்

*அல்லாஹ் கூறுகிறான்:*

நபியே! நீங்கள் உங்களுடைய மனைவிகளுக்கும், உங்களுடைய பெண் மக்களுக்கும், நம்பிக்கையாளர்களின் பெண்களுக்கும், அவர்கள் தங்கள் தலை முந்தானைகளை (தங்களின் மீது இறக்கிக் கொள்ளும்படி நீங்கள் கூறுங்கள். அதனால், அவர்கள் அறியப்பட்டு, எவருடைய துன்பத்திற்கும் உள்ளாகாதிருப்பதற்கு இது சுலபமான வழியாகும். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் கிருபை செய்பவனாகவும் இருக்கின்றான். (அல்குர்ஆன் 33:59)

இவ்வசனத்திற்கு வழங்கப்படும் தவறான விளக்கம்:

பெண்கள் முகம் மூடுவதை எதிர்ப்போர் கூறியிருக்கும் இன்னுமொரு அற்புதமான விளக்கம் என்னவெனில், அஹ்ஸாப் 59 - ஆவது வசனத்தில், “அவர்கள் அறியப்பட்டு நோவினை செய்யப்படாமலிருக்க...” என்பதன் கருத்து முகம் திறக்கவேண்டும் என்பதாகும். ஏனெனில், அப்போதுதான் அந்தப்பெண் யார் என்று அடையாளம் காணமுடியும் - என்பதே அந்த தவறான விளக்கமாகும்.

## பதில்:

இந்த வசனம் நபியின் மனைவிமார்கள், அவரின் பெண் மக்கள், விசுவாசம் கொண்டவர்களின் பெண்கள் ஆகிய அனைவரையுமே இந்த வசனம் குறிக்கின்றது. எனவே இவர்களின் விளக்கப்படி நபியின் மனைவியரும் முகத்தை திறக்கவேண்டும் என்று சொல்லவேண்டும். ஆனால் அது தவறாகும்.

அப்படியே அவர்களின் கருத்துப் பிரகாரம் பெண்களை அறியப்படுவதற்காக என்று வைத்துக் கொண்டால் எல்லாப் பெண்களையும், அவர்கள் வந்து செல்கின்ற போது யார் யார் என்று பார்ப்பது அனுமதிக்கப்பட்டதா? அப்படியாயின், எல்லோரையும்

உற்றுப் பார்க்க வேண்டுமென்ற பிழையான ஒரு சட்டத்தை நாமாகவே உருவாக்குகின்றோம். “இது பார்வையை தாழ்த்திக்கொள்ளுங்கள்” என்ற வசனத்திற்கு முரணானதாகும்.

வீட்டிலுள்ள, நமது குடும்பத்திலுள்ள பெண்களை நமக்கு அடையாளம் புரிந்து கொள்ளலாம். அதல்லாமல் புதிதாக வருகின்ற பெண்களை அறிந்து கொள்வதற்காக என்று பார்ப்பது சரியாகுமா? அதுமட்டுமின்றி நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்களும் முகத்தைத் திறக்க வேண்டு மென்பதை அவர்களாகவே சொல்கிறார்கள். முன்பு நபியவர்களின் மனைவிமார்களுக்கு மட்டுமே மூட வேண்டும் என்று சொன்னவர்கள், இப்போது இந்த வசனத்திற்கு வேறு விளக்கம் கொடுக்கப் போய், அவர்களும் திறக்க வேண்டும் என்று சொல்ல வருகிறார்கள். இது ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறது. இந்த விளக்கத்தை தஃப்ஸீருடைய உலமாக்கள் யாருமே சொல்லவில்லை.

இந்த வசனத்திற்கு அருமை சஹாபாக்கள் விளக்கம் கொடுக்கின்ற போது, நான் முன்பு பெண்கள் இரண்டு வகை என்று குறிப்பிட்டது போல், இவர்கள் அடிமைப் பெண்களா? அல்லது சுதந்திரப் பெண்களா? என்று அறியப்படுவதற்காக என்று கூறுகிறார்கள். அப்படியாயின், அடிமைப் பெண்களுக்கு முகத்தை மூடுவது கடமை கிடையாது. ஏனைய பெண்கள் மூடவேண்டும். இதற்கு பின்வரும் ஹதீஸ்கள் ஆதாரமாக அமைகிறது.

நபி (ஸல்) அவர்கள் கைபருக்கும் மதீனாவுக்கும் இடையில் (உள்ள ‘சத்துஸ் ஸஹ்பா” என்னுமிடத்தில் ஸஃபிய்யா பின்த் ஹுயைய் அவர்களை மணமுடித்து) மூன்று நாட்கள் தங்கினார்கள். அங்கு ஸஃபிய்யா அவர்களுடன் வீடு கூடினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்களின் வலீமா மண விருந்துக்கு முஸ்லிம்களை அழைத்தேன். அந்த விருந்தில் ரொட்டியோ, இறைச்சியோ இருக்க வில்லை. நபி (ஸல்) அவர்கள் பிலால் (ரழி) அவர்களிடம் தோல் விரிப்பைக் கொண்டு வருமாறு உத்தரவிட, அவ்வாறே அது கொண்டுவந்து விரிக்கப்பட்டது. பிறகு அதில் பேரீச்சம் பழம், பாலாடைக் கட்டி, நெய் போன்றவற்றை இட்டார்கள். (‘ஹைஸ்’ எனும் எளிமையான உணவு தயாரானது. அதை அங்கிருந்த முஸ்லிம்கள் உண்டனர்.) அப்போது முஸ்லிம்கள் “ஸஃபிய்யா அவர்கள் இறைநம்பிக்கையாளர்களின் அன்னை (நபியவர்களின் துணைவி)யரில் ஒருவரா? அல்லது

நபி(ஸல்) அவர்களின் அடிமைப் பெண்ணா?" என்று பேசிக் கொண்டனர். "ஸஃபிய்யா அவர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் ஹிஜாப் - திரையிட்(டுக் கொள்ளும்படி கட்டளையிட்)டால், அவர் இறைநம்பிக்கையாளர்களின் அன்னையரில் (நபியவர்களின் துணைவி யரில்) ஒருவர். அப்படி அவர்களுக்கு திரையி(ட்டுக் கொள்ளும்படி கட்டளை)யிடாவிட்டால், அவர் அடிமைப் பெண்களில் ஒருவர்" என்று (மக்களில் சிலர்)கூறினர். நபி (ஸல்) அவர்கள் தங்களது வாகனத்தில் புறப்பட்ட போது ஸஃபிய்யா (ரழி) அவர்களுக்காக இருக்கையமைத்து இடம்கொடுத்து (அவர்கள் அமர்ந்த பிறகு) திரையை இழுத்து (மூடி) விட்டார்கள். *(அறிவிப்பவர்: அனஸ் (ரழி), நூல்: புகாரி – 4213, 5085, 5159)*

மேற்கூறப்பட்ட ஹதீஸ் மூன்று இடங்களில் இடம்பெற்றுள்ளது. இதில் யுத்தத்தில் சிறைக்கைதியாகப் பிடிக்கப்பட்ட அடிமைப் பெண் ஸஃபிய்யா (ரழி) அவர்களை, நபியவர்கள் மணமுடித்த சம்பவத்தையே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஹதீஸில் இடம்பெற்றுள்ள, "ஸஃபிய்யா அவர்கள் நபியவர்களின் துணைவியரில் ஒருவரா? அல்லது நபி (ஸல்) அவர்களின் அடிமைப் பெண்ணா?" என்று பேசிக் கொண்டனர்.

"ஸஃபிய்யா அவர்களை, நபி (ஸல்) அவர்கள் திரையிட்டு மறைத்தால், நபியவர்களின் துணைவியரில் ஒருவர். அப்படி அவர்களுக்கு திரையிடாவிட்டால், அவர் அடிமைப் பெண்களில் ஒருவர்" என்ற வாசகத்திலிருந்து, நபியவர்களின் மனைவிமார்களாக இருந்தாலும், ஏனைய பெண்களாக இருந்தாலும் முகத்தை மறைக்க வேண்டும். மாறாக அடிமைப் பெண்ணாக இருந்தால் மட்டுமே மறைக்கத் தேவையில்லை என்ற செய்தியை நமக்கு தெளிவாக விளங்க முடிகிறது.

எனவே, குர்ஆனில் கூறப்பட்ட "அறியப்படுவதற்கு" என்ற பதத்தின் விளக்கம் அவர்கள் சுதந்திரப் பெண்ணா அல்லது அடிமைப் பெண்ணா என்று அறிந்து கொள்வதே நோக்கமாகும்.

காரணம் அந்தக் காலத்தில் இறைமறுப்பாளர்கள் அடிமை பெண்களுக்குத் தொல்லை கொடுக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். ஏனைய பெண்களும் அவர்களைப் போன்றே முகம் திறந்து சென்றதனால் அவர்களும் அடிமைப் பெண்களே என நினைத்து தொல்லை கொடுத்தனர் வழிகேடர்கள். எனவேதான்,

அடிமைகளுக்கும் சுதந்திரப் பெண்களுக்குமிடையே வித்தியாசத்தை ஏற்படுத்துவதற்காக அல்லாஹுத்தஆலா இச்சட்டத்தை விதித்தான்.

ஹதீஸில் ஒரு பெண் முகத்தைத் திறந்த நிலையில் வந்தார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தால் (அது ஹிஜாபுடைய சட்டம் இறங்கிய பின் என்றிருக்குமானால்) அடிமைப் பெண் என்றோ வயோதிகப் பெண் என்றோதான் புரிய வேண்டும்.

மேற்கூறப்பட்ட சூரத்துல் அஹ்ஸாபின் 59-ஆவது வசனம் ஒன்றே முகத்தை மறைப்பதற்கு பலமான ஆதாரமாகும். குர்ஆன் வசனங்கள் எப்போதுமே ஒன்றுக்கொன்று முரண்படமாட்டாது.

53-ஆவது வசனத்திற்கு பின்புதான் 59-ஆவது வசனம் இறங்கப்பெற்றது என்பதையும் அவர்கள் மறுப்பின்றி ஏற்றுக் கொண்டுள்ளார்கள். எனவே, முன்பு ஒரு சட்டம் குறிப்பிட்டுக் கூறப்பட்டு, பின்பு அச் சட்டம் பொதுவாகக் கூறப்பட்டால், பின்பு கூறப்பட்ட பொதுச்சட்டம் அமல் செய்யப்படும் என்ற விதிமுறை தெரியாது தவறான வழியில் தங்களை இட்டுச் செல்வதை நாம் பார்க்கின்றோம். எனவே, அவர்களின் வாதப் பிரகாரம் 53-ஆவது வசனம் நபிமார்களின் மனைவிமார்களைப் பற்றிக் கூறப்பட்டிருப்பினும் 59-ஆவது வசனம் நபியின் மனைவிமார்கள் உள்பட ஏனைய பெண்களையும் குறிப்பிடுகிறது.

உதாரணத்திற்கு, ஒரு வகுப்பில் 30 மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்களை ஆசிரியர் மூன்று பிரிவுகளாகப் பிரித்து முதல் பிரிவினருக்கு மாத்திரம், நீங்கள் வீட்டு வேலைகளைச் செய்யுங்கள், என்று கூறிவிட்டு, அனைவரும் வெளியில் செல்வது தடை, ஒருவரின் பொருளை மற்றவர் பயன்படுத்துவது கூடாது, எனக் கட்டளையிட்டார் என்று வைத்துக்கொள்வோம். சில நாட்களுக்குப் பின் ஆசிரியர், முதல் பிரிவினரும் மேலும் இரண்டாம், மூன்றாம் பிரிவினரும் வீட்டு வேலைகளை செய்ய வேண்டுமென்று சொல்கிறார். இப்பொழுது இரண்டாம் மூன்றாம் பிரிவினர், இல்லை நாம் செய்யத் தேவையில்லை, முன்பு சொன்ன உங்களது கட்டளை முதல் பிரிவினருக்கு மட்டும் விதித்த சட்டம். எனவே, நாம் வீட்டு வேலையைச் செய்யமாட்டோம் என்று சொன்னால் எவ்வாறு அது பெரிய தவறோ, அறியாமையோ அது போன்ற ஒரு தவறைத்தான் இவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த 59 - ஆவது வசனத்திற்கு இவர்கள் கூறும் விளக்கத்தை, சஹாபாக்களோ, தஃப்ஸீர் கலை அறிஞர்களோ கூறவில்லை. இதற்கு முன்பு வந்தவர்கள் எல்லோரையும் விடவும் அரபுக் கலையிலும் மார்க்க விளக்கத்திலும் இவர்கள்தான் பாண்டித்தியம் பெற்றவர்கள் போன்ற ஒரு தோற்றத்தை வெளிப்படுத்துவதை நாம் பார்க்கலாம்.

இப்படிச் சொன்னவுடன் ஒரு வாதத்தை எடுத்து வைப்பார்கள்.

அதாவது, அல்குர்ஆன் வசனங்கள் இரண்டு வகைப்படும்.

- முன்னோர்கள் விளங்க முடியுமானது.
- முன்னோர்கள் விளங்க முடியாதது.

அவர்கள் கூறிய இவ்விரண்டில் முதல் வகை சரியானது. இரண்டாவது வகை பிழையானது. காரணம் சஹாபாக்கள் அறவே விளங்க முடியாது என்று நாம் நினைக்கக்கூடிய செய்திகளை எம்மை விட அவர்கள் மிகத் தெளிவாக விளங்கிக் கொண்டார்கள்.

அதில் ஒன்றுதான், நபி (ஸல்) அவர்களின் விண்வெளிப் பயணம். இதை சஹாபாக்களில் எவறும் மறுக்கவில்லை. (உள்ளத்தில் நோயுள்ள காஃபிர்களே அதை மறுத்தார்கள்). எனவே, அத்தோழர்களின் வழிமுறை அல்லாஹ்வும், அவனது தூதர்(ஸல்) அவர்களும் ஒரு செய்தியைச் சொன்னால், அது தனது பகுத்தறிவுடன் உடன்படுகிறதா? எனப்பார்க்காமல், ‘‘கேட்டோம், வழிப்பட்டோம்’’ என முழுமையாக ஏற்றுக்கொள்வார்கள். மாறாக நிராகரிப்பாளர்களாக இருந்தால், ‘‘செவிமடுத்தோம், மாறுசெய்தோம்" என்று கூறுவார்கள்.

இப்படி சொன்னவுடன், அல்லாஹுத்தஆலா சிந்திக்கும்படி அல்குர்ஆனில் பல இடங்களில் கூறியுள்ளானே அதற்கு என்ன விளக்கம்? என்ற கேள்விகளை முன் வைப்பார்கள்.

அந்தக் கேள்விக்கு பதில் சொல்லும் முன் நாம் ஒரு விஷயத்தைத் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். மார்க்க விஷயங்களில் புதிதாகக் கண்டுபிடிப்பதற்கு ஒன்றுமில்லை. அப்படி இருக்கிறது என்று சொன்னால், அல்லாஹுத்தஆலா மார்க்கத்தைப் முழுமைப்படுத்தவில்லை என்றாவதுடன், நபி (ஸல்) அவர்களும் தனது தூதுத்துவத்தில் மோசடி செய்துள்ளார்கள் என்றாகிவிடும். அக்கருத்தை எந்தவொரு முஸ்லிமும் ஏற்றுக்கொள்ளமாட்டான்.

எனவே, ஹிஜாப் என்ற இபாதத்தை நபி (ஸல்) அவர்கள் காட்டித் தந்தார்களா? இல்லையா? சஹாபாக்கள் அந்த வசனத்தை அமுல்படுத்தினார்களா? இல்லையா? சூரத்துல் அஹ்ஸாபின் 59-வது வசனத்திற்கு யாராவது ஒரு சஹாபி இவர்களின் விளக்கத்தைக் கூறியதாக ஒர் ஆதாரத்தைக் காட்ட முடியுமா? இல்லை. இதை இப்படியும் விளங்கலாம் என்றால், நபி (ஸல்) அவர்களின் காலத்தில் அவர்களுடன் ஒட்டி உறவாடிய அருமைத் தோழர்கள் இதை விளங்கத் தெரியாதவர்கள் என்று கூற வருகிறார்களா?

அல்லாஹ் அல்குர்ஆனில் சிந்திக்கும்படி குறிப்பிட்டிருக்கும் அவ்வசனத்தின் விளக்கம், உலக அத்தாட்சிகளைப் பார்த்து அல்லாஹ்வின் வல்லமையைப் புறிந்துகொள்வதும், மார்க்க ஆதாரங்களை சிந்தித்து சரியான முடிவைப் பெறுவதையும் குறிக்குமே தவிர இது வரைக்கும் எவருமே கூறாத நவீன கருத்துக்களை மார்க்கமாகச் சித்தரிப்பதையல்ல.

## “ஜில்பாப்” சம்பந்தமாக வரும் அஹ்ஸாப் 59-வது வசனத்தின் அடிப்படையில் முகத்தை மூடவேண்டும் எனக்கூறியவர்கள்

1. இல்கியா அல் ஹர்ராஸி
   (அஹ்காமுல் குர்ஆன் - பாகம் 4 பக்கம், 312, 350)

2. அஸ்ஸமக்ஸரி
   (தஃப்ஸீருல் அஸ்ஸமஃஸரிய் - பாகம் 3, பக்கம் 321, 560)

3. அல் பஃகவி
   (தஃப்ஸீருல் பஃகவி - பாகம் 3. பக்கம் 663)

4. அல் பைழாவி
   (தஃப்ஸீருல் பைழாவி - பாகம் 3, பக்கம் 104,238)

5. அந் நசஃபீ
   (தஃப்ஸீருன் நசபிய் - பாகம் 2, பக்கம் 500;
   பாகம் 3, பக்கம் 45)

6, இப்னு ஜுஸய்
   (தஃப்ஸீர் இப்னு ஜுஸய் பாகம் 2, பக்கம் 67,159)

7. இப்னு தைமிய்யா
   (மஜ்மூஉல் ஃபதாவா - பாகம் 22. பக்கம் 110)

8. அபூ ஹய்யான்
(அல் பஹ்ருல் முஹீத் - பாகம் 8, பக்கம் 503)

9. அபூ சுஊத்
(இர்ஷாதுல் அக்லிஸ்ஸலீம் - பாகம் 6, பக்கம் 170; பாகம் 7 பக்கம் 115)

10. ஸுயூத்தி
(அல் இக்லீல் - பக்கம் 192)

11. அல்ஆலூசி
(ஃபத்ஹுல் கதீர் - பாகம் 14, பக்கம் 349)

12. ஷவ்கானி
(ஃபத்ஹுல் கதீர் - பாகம் 14, பக்கம் 349)

13. காஸிமி
(பாகம் 8, பக்கம் 113)

14. அல்பிகாயீ
(நள்முத்துரர் - பாகம் 13 பக்கம் 259;
பாகம் 15, பக்கம் 441)

15. அஸ் ஸமர்கன்தீ
(பஹ்ருல் உலூம் - பாகம் 2, பக்கம் 508;
பாகம் 3 பக்கம் 69)

16. இப்னு அபீஸமனைன்
(தஃப்ஸீர் இப்னி அபீ ஸமனீன் - பாகம் 3, பக்கம் 230, 231)

17. அஃத் ஃதஃலபி

(தஃப்ஸீருத் ஃதஃலபி - பாகம் 7, பக்கம் 87)



# முகத்தை மூடுவது ஹராம் என முதலில் கூறியவர்கள்

முகத்தை மூடுவது ஹராம் என்ற கொள்கை உடையவர்கள் யார்? இதை முதன் முதலில் சொன்னவர்கள் யார்? அவர்களின் தகைமைகள் என்ன என்பதைப்பற்றி பார்ப்போம்.

இக்கருத்தைக் கூறியவர்கள் சஹாபாக்களோ அதைத் தொடர்ந்து வாழ்ந்த தாபிஈன்களோ அல்லர். மாறாக எகிப்து நாட்டைச் சேர்ந்த இஸ்மாஈல் இப்னு மன்சூர் என்பவர்.

இவரின் தகைமை என்னவெனில், இவர் ஒரு மிருக வைத்தியராவார். 1988-ல் “அந்நூர்” என்ற பத்திரிகையில், “பெண்கள் முகத்தை மறைப்பது ஹராம். முகத்தை மறைக்கும் பெண்களை விட முகத்தை திறந்திருக்கும் பெண்கள் சிறந்தவர்கள்” என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். இவரது இக்கருத்து பிழை என்று இதற்கு எதிராக அங்கிருக்கும் பல அறிஞர்கள் “ஃபத்வா” மார்க்கத் தீர்ப்பு வழங்கி, இவருக்கு கடுமையான முறையில் பதில் கொடுத்திருக்கிறார்கள்.

சமீப காலமாக எகிப்தைச் சார்ந்த முஹம்மத் அப்துல்லாஹ் நஸ்ர் மீஸ" என்பவரும் இவ்வாறு கூறியிருக்கிறார். இந்த மீஸ" என்பவரின் கொள்கைகள் மிக ஆபத்தானவையும் இஸ்லாத்திற்கு எதிரானவையுமாகும். அவைகளாவன:

1. முஸ்லிம் அல்லாத பெண்களை முஸ்லிம்கள் திருமணம் முடிக்கலாம். (வேதக்காரப் பெண்களையல்ல. வேதக்காரப் பெண்களை திருமணம் முடிக்க அனுமதியுண்டு).
2. முகமூடி அணிவது ஹராம்.
3. ஒரு பெண்ணும், ஆணும் தாராளமாகச் சேர்ந்து பழகலாம், உறவும் கொள்ளலாம். ஆனால், அது விபச்சாரம் கிடையாது.

(அல்லாஹ் தன் திருமறையில் தெளிவாக விபச்சாரம் என்று குறிப்பிட்டதற்கு மாற்றமாக இவர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.)

4. கப்ருடைய வேதனை கிடையாது. இவை அனைத்தும் பொய்யானவை.

5. குர்ஆனுக்கு அடுத்ததாக இருக்கும் ஹதீஸ் கிரந்தமான புகாரி கிரந்தத்தை இவர் மிகக் குறை உள்ளதாக காணுகிறார்.

6. "சலபுஸ்ஸாலிஹீன்களின்" பட்டியலில் முதன்மை யானவர்களான சஹாபாக்களை மோசமாகவும், கேவலமாகவும் பேசியுள்ளார்.

அவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றபோது,

"அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொண்டான். அவர்களும் அல்லாஹ்வைப் பொருந்திக் கொண்டார்கள்..."

(அல் பய்யினா - 8)

மேற்கூறப்பட்ட செய்திகளின் மூலம் இவரின் நச்சுக் கருத்துக்களையும் அவருக்கும் இஸ்லாத்திற்கும் உள்ள தூரத்தையும் அறிந்துகொள்ள முடிகிறது. எனவே, இவரது இந்தக் கொள்கையைப் பின்பற்றினால் சுவர்க்கத்திற்குச் செல்லலாமா அல்லது நரகத்திற்குச் செல்லலாமா என்று அனைவரும் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். இவ்வாறான நச்சுக் கருத்துக்களை நேர்வழியில் வாழ்ந்த எந்த மார்க்க அறிஞர்களும் கூறவில்லை. அல்லாஹ் நம் அனைவருக்கும் நேரான வழியைக் காட்டுவானாக!

# முகம் மூடுவதின் சட்டம்

இப்போது நாம், முகத்தை மறைப்பது வணக்கமா அல்லது குற்றமா என்ற முடிவுக்கு வருவோம்.

இந்த விஷயத்தில் குர்ஆன், ஹதீஸை ஆய்வு செய்த மார்க்க அறிஞர்கள் முகம்மூடுவது பற்றி இரண்டு கருத்துக்களைக் கூறியுள்ளார்கள்.

1. முகத்தை மறைப்பது கடமை.
2. முகத்தை மறைப்பது சுன்னத்து.

அல்லாஹ் நபிக்கு ஒரு கட்டளையை பிறப்பித்தால் அக்கட்டளை வாஜிபாக அல்லது சுன்னத்தாகத்தான் இருக்கும். முகத்தைத் திறந்து வந்ததாக கூறப்படும் ஹதீஸ்களுக்கு கூறப்பட்ட விளக்கங்களை ஏற்றுக் கொண்டவர்கள் அந்த வணக்கத்தை வாஜிப் என்று கூறுவார்கள். யாரெல்லாம் முகத்தைத் திறந்து வந்ததாகக் கூறப்படும் ஹதீஸ்களுக்குரிய விளக்கங்களை ஏற்றுக் கொள்ளவில்லையோ அவர்களின் பார்வையில் அந்த வணக்கம் சுன்னத்தாக அமையும். காரணம் கட்டாயம் என்ற நிலமையிலிருந்து சுன்னத்து என்ற நிலமைக்கு மாறிவிட்டது.

முகத்தை மறைப்பதின் சட்டம் ஒன்று வாஜிப் அல்லது சுன்னத்.

சிலர் சொல்வதன் பிரகாரம் ஹிஜாப் கடமையாக்கப்பட்ட பின்னால் சில கட்டங்களில் முகத்தைத் திறந்த நிலமை இருந்ததென்று வைத்துக் கொண்டாலும் கூட, வாஜிப் என்ற அந்த சட்டத்திலிருந்து சுன்னத் என்ற நிலைக்கு மாறிவிடும். எனவே இதை சுன்னத் என்ற இறுதி நிலையிலாவது வைத்து பின்பற்றுவது வணக்கமாகும்.

அதுமட்டுமின்றி முகத்தைத் திறந்திருந்ததாக சொல்லப்படும் கட்டங்களுக்கு நாம் வயோதிகப் பெண்களோ, அடிமைப் பெண்களோ, மாற்று மதப் பெண்களாகவோ இருந்திருக்கலாம்

என்றுதான் விளங்க வேண்டும். அவர்கள் முகம் திறக்க அனுமதி வழங்கப்பட்டவர்கள்.

இப்படிப்பட்ட காரணங்களுக்காக முகம் திறக்கப்பட்டிருந்தால், அதற்கு இஸ்லாத்தில் அனுமதியுண்டு. இதுவல்லாமல் வற்புறுத்தலுக்காக, நிர்ப்பந்தமாக, பாதுகாப்புப்படையினர் சோதனைக்காக, நோய் பரிசோதனைக்காக வைத்தியர் திறக்கச் சொல்லும் போது, திறப்பது இஸ்லாத்தில் ஆகுமான காரியமே. இது குற்றம் கிடையாது.

நாம் இப்படியான சலுகைகளை வைத்துக் கொண்டு சட்டமாக மாற்றக் கூடாது. எனவே முகத்தை மறைப்பது இபாதத் என்பதில் எந்த விதமான மாற்றுக் கருத்தும் கிடையாது. இதன் சட்டம் வாஜிபாக அல்லது சுன்னத்தாக இருக்கும். இதனைப் பின்பற்றி செயல்படுத்துபவர்களுக்கு நன்மையே தவிர தண்டனை கிடையாது என்பதை நாம் தெளிவாக விளங்க வேண்டும்.

ஆனால், இதற்கு மாற்றமாக சமீப காலத்தில் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் தனது உரையில், “முகத்தை மறைப்பது ஹராம். அவ்வாறு யாராவது மறைத்தால் அவர் நரகம் செல்வார்” எனக் கூறியுள்ளார். இது மிகப்பெரும் பாரதூரமான ஒரு கருத்தாகும்.

காரணம் ஆடை என்பது இயற்கையிலேயே ஆகுமாக்கப்பட்ட ஒன்றாகும். இதில் அல்லாஹ்வும் அவனது தூதர் (ஸல்) அவர்களும் தடை விதித்திருந்தால் நாம் அதனை ஹராம் என்று சொல்ல வேண்டும்.

எனவே, அவ்வாறு சொன்னவர் கட்டாயம் அல்லாஹ்விடத்தில் பாவமன்னிப்புக் கோர வேண்டுமென ஒரு சகோதரர் என்ற அடிப்படையில் நாம் அவருக்குச் சொல்கிறோம். அல்லாஹ் தான் அவரை மன்னிக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் இந்த கொள்கையுடையவர்கள் அனைவரும் இதனை விளங்கி அல்லாஹ் வுக்கு அஞ்சி தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

# முகம் மூடும் கலாச்சாரம் சவூதி அரேபிய இறக்குமதியா?

இஸ்லாமிய வரலாறு நெடுகிலும் பெண்கள் முகங்களை திறந்து கொண்டோ கண்ணங்களை காட்டிக்கொண்டோ வெளியிடங்களுக்குச் செல்பவர்களாக இருக்கவில்லை.

இக்குறிப்பை பல்வேறு காலங்களிலும் பிரதேசங்களிலும் வாழ்ந்த பல அறிஞர்கள் தெரிவித்திருப்பதுடன், உறுதியும் செய்துள்ளனர்.

அவர்களுள் 5ம் நூற்றாண்டு காலப்பகுதியில் வாழ்ந்த இமாம் கஸாலி (ரஹ்) அவர்களும் ஒருவராவார். இது குறித்து இமாம் அவர்கள் இஹ்யாஉ உலூமித்தீன் (1/729) என்ற அவரது நூலில்,

“கால நெடுகிலும் ஆண்கள் தங்களது முகங்களை திறந்த நிலையிலும் பெண்கள் தங்களது முகங்களை மறைத்த நிலையிலுமே வெளி இடங்களுக்குச் செல்வோராக இருந்தனர்.”என்று கூறியுள்ளார்.

இது தொடர்பாக 7–ம் நூற்றாண்டு காலப்பகுதியில் வாழ்ந்த இமாம் நவவி (ரஹ்) அவர்கள் இமாமுல் ஹரமைன் அல் ஜுவைனி (ரஹ்) அவர்களின் கூற்றை ரவ்ழதுத் தாலிபீன் (5/336) என்ற அவரது நூலில் குறிப்பிட்ட வாசகம் இதோ;

“பெண்கள் முகங்களை திறந்தவாறு வெளியில் செல்வது தடை என்பதில் முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றுபட்டு இருந்தனர்.”

8–ம் நூற்றாண்டு காலப்பகுதியில் வாழ்ந்த, ஸ்பெய்னைச் சேர்ந்த தப்ஸீர் துறை அறிஞர் இமாம் இப்னு ஹையான் (ரஹ்) அவர்கள் அல் பஹ்ருல் முஹீத்(7/250). என்ற அவரது நூலில்,

“பெண்ணின் ஓர் கண்ணைத் தவிர வேறு எந்த பகுதியும் தென்படாமல் இருப்பதே ஸ்பெய்ன் நாட்டின் வழமையாகும்” என்று கூறியுள்ளார்.

அதே போன்று இமாம் இப்னு ரஸ்லான் (ரஹ்) அவர்கள்

“முஸ்லிம்கள் அனைவரும் பெண்கள் முகங்களை திறந்த வன்னம் வெளியில் செல்வது தடை என்பதில் ஒன்றுபட்டு இருந்தனர்” என்று கூறியுள்ளார்.

நூல்: நைலுல் அவ்தார் (6/114)

9–ம் நூற்றாண்டு காலப்பகுதியில் வாழ்ந்த இமாம் இப்னு ஹஜர் அல் அஸ்கலானி (ரஹ்) அவர்கள் பத்ஹுல் பாரி (9/337) என்ற அவரது நூலில்,

“தங்களை ஆண்கள் பார்க்காமல் இருப்பதற்காக பெண்கள் முகங்களை மறைத்த நிலையில் மஸ்ஜிதுகள் மற்றும் கடைத்தெருக்களுக்குச் செல்லவும், பிரயாணம் மேற்கொள்ளவும் அனுமதிக்கப்பட்ட விடயம் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வந்தது” என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஹிஜாபுக்கு எதிரான கோஷம் எப்போது, எங்கே ஆரம்பமானது?

எகிப்தில் ஜனாதிபதியாக இருந்த முஹம்மது அலி பாஷா என்பவர் தனது நாட்டு மக்களில் சிலரை பிரான்ஸ் நாட்டுக்கு புலமைப்பரிசில் வழங்கி தொழிற்கல்வி படிப்பதற்காக அனுப்பிவைத்தார். ஆனால் அங்கு சென்று கல்வியை முடித்த பலர் திரும்பி வருகின்றபோது பல சிந்தனைத் தாக்கங்களுடன் திரும்பும் நிலை ஏற்பட்டது. அவர்களில் ஒருவர் ரிஃபாஅது ராபிஃ அத்தஃதாவி. இவர் பாரிசில் 1826 தொடக்கம் 1831 வரை மொத்தமாக 5 வருடங்கள் அங்கு வாழ்ந்தார். இவர் எகிப்திலிருந்து சென்ற குழுவிற்கு தலைவராகவும், போதனையாளராகவும் திகழ்ந்தார்.

அவர் அங்கிருந்து திரும்பி வந்து எகிப்து முஸ்லிம்களுக்கிடையே இஸ்லாத்திற்கு எதிரான பல சிந்தனைகளை விதைத்தார். அவர் எழுதிய புத்தகங்களில் ஒன்று தான் “தஹ்லீஸ் அல் இப்ரீஸ் ஃபீ தல்ஹீஸ் பாரீஸ்”. அதில் கூறப்பட்ட முக்கியமான விடயங்களில் சிலதை இங்கே பதிவிடுகிறேன்.

1. பெண்கள் முகத்தைத் திறப்பதும், ஆண்களும் பெண்களும் கலப்படமாக இருப்பதும் குழப்பங்களை உண்டு பண்ணமாட்டாது.
2. தியேட்டர்களும், நடன மேடைகளும் திறப்பது பாவமான காரியங்களல்ல. மாறாக அவை அழகையும், புத்துணர்ச்சியையும் ஏற்படுத்தும்.
3. பெண்கள் படித்து ஆண்கள் போன்று வேலை வாய்ப்புக்களில் ஈடுபட வேண்டும்.
4. முகத்திரை (ஹிஜாப்) என்பது நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்களுக்கு மாத்திரம் சொந்தமானது.

பெண்களின் சுதந்திரம் என்ற பெயரில் இந்நச்சுக் கருத்துக்களை முதலில் கட்டவிழ்த்தவர் இவராவார்.



# நான்கு மத்ஹப்களின் கருத்துக்கள்

சிலர் பெரும்பான்மையான அறிஞர்கள் மற்றும் மத்கப்கள் முகம் திறப்பதையே வலுவான கருத்தாகக் கருதுகின்றனர் என்பதாகப் பிரச்சாரம் செய்கின்றனர்.

ஆனால் இது உண்மைக்குப் புறம்பான தகவலாகும். அதனை நிரூபிக்கும் மத்கப் அறிஞர்களின் கருத்துக்களைச் சுருக்கமாகக் கீழே தந்துள்ளோம்.

**பெண்கள் முகங்களை மறைப்பது பற்றி ஹனபி மத்ஹபைச் சார்ந்த உலமாக்களின் கருத்துக்கள்:**

1. அபூபக்கர் அல் ஜஸ்ஸாஸ் (ரஹ்)

   ஒரு வாலிபப் பெண் தன்னுடைய முகத்தை அந்நிய ஆண்களிடம் மறைக்குமாறு ஏவப்பட்டிருக்கிறாள்.

   (அஹ்காமுல் குர்ஆன் (3/458))

2. இமாம் சரக்ஸி (ரஹ்)

   குழப்பம் ஏற்படும் என்ற அச்சமுள்ள சந்தர்ப்பத்தில் முகத்தை பார்ப்பது ஹராம். ஆனால் பிரச்சனை ஏற்படுவதே முகத்தை பார்ப்பதில் தான் என்பதே யதார்த்தமாகும். ஒரு பெண்ணின் பெரும்பாலான அழகு ஏனைய பகுதிகளை விட முகத்தில் தான் காணப்படுகிறது.

   (அல் மப்சூத் ; 10/153)

3. அலாஉத்தீன் (ரஹ்)

   அந்நிய ஆண்கள் மத்தியில் தன்னுடைய முகத்தை காட்டுவதை விட்டும் ஒரு பெண் தடுக்கப்படுகிறாள்.

   கணவன் தன்னுடைய மனைவி மஹ்ரம் அல்லாத ஆண்களிடம்

அவளது முகத்தை வெளிப்படுத்துவதைக் கண்டிக்க வேண்டும்.

(ஹாஷியது இப்னி ஆபிதீன் : 3/262)

ஒரு பெண் இஹ்ராமில் இருக்கும் நிலையிலும் அந்நிய ஆண்களின் முன்னிலையில் தன்னுடைய முகத்தை மறைப்பது கட்டாயமாகும் என்ற கருத்தையும் ஹனபீ மத்ஹப் உலமாக்களில் சிலர் கூறியுள்ளனர்.

(ஹாஷியது இப்னி ஆபிதீன் : 2/528)

### மாலிகி மத்ஹபைச் சார்ந்த உலமாக்களின் கருத்துக்கள்:

1. இமாம் அபூபக்கர் இப்னு அரபி மற்றும் இமாம் குர்துபீ (ரஹ்) ஆகிய இருவரும் கூறுகையில்,

   பெண் முழுமையாக மறைக்கப்படவேண்டியவள். அவளது உடல், அவளது குரல் அனைத்தும் மறைக்கப்படவேண்டியவையே, இக்கட்டான ஒரு சந்தர்ப்பம் அல்லது ஒரு முக்கியமான தேவை போன்ற சந்தர்ப்பங்களைத் தவிர.

   உதாரணம்:- சாட்சி சொல்லும் சந்தர்ப்பம், சிகிச்சைக்காக, அவளிடம் ஏதேனும் ஒரு விஷயத்தை கேட்கும் போது. (அஹ்காமுல் குர்ஆன் 3/1578, அல்ஜாமிஃ லிஅஹ்காமில் குர்ஆன் 14/277)

2. இப்னு மர்ஸூக் அவர்கள் தெளிவாக கூறியிருக்கிறார்:

   மத்ஹபின் பிரபல்யமான கருத்து: அவள் மீது ஒரு அந்நிய ஆணின் பார்வை விழுவதால் குழப்பம் ஏற்படும் என்ற பட்சத்தில் முகம் மற்றும் கைகளையும் மறைப்பதென்பது வாஜிப் ஆகும். (ஜவாஹிருல் இக்லீல் 1/41)

### ஷாபிஈ மத்ஹபைச் சார்ந்த உலமாக்களின் கருத்துக்கள்:

1. இமாம் நவவி (ரஹ்):

   ஒரு முஸ்லிமான பெண், முகத்தையோ அல்லது அவளது உடலின் பிற பகுதிகளையோ யூத, கிறிஸ்தவ அல்லது காஃபிரான எந்த ஒரு பெண்ணுக்கும் வெளிப்படுத்தக்கூடாது. காபிரான அந்தப் பெண் தனது அடிமைப்பெண்ணாக இருந்தாலே தவிர. இது தான் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களது மத்ஹபில் சரியான கருத்தாகும். (அல் பதாவா 192)

2. *இமாம்முஹம்மத் இப்னு அலி அல் மவ்ஸிஈ (ரஹ்):*

அன்றும் இன்றும் உள்ள நடைமுறை யாதெனில், ஒரு வயோதிகப் பெண்ணுக்கு முகத்தை திறக்க அனுமதியளிப்பார்கள், அதே சமயம் வாலிபப் பெண்ணுக்கு அதனை அனுமதிக்கமாட்டார்கள். ஒரு பெண் தன்னை முழுமையாக மறைத்திருக்க வேண்டுமென்று அவர்கள் நினைத்ததோடு மட்டுமல்லாமல் முகத்தை திறப்பதை ஒரு கெட்ட செயலாக கருதினார்கள்.

(ஸலபுகளும்) முன் சென்ற உலமாக்களும், இமாம் மாலிக், ஷாபிஈ, அபூ ஹனீஃபா (ரஹ்) போன்றவர்களும், மற்ற பிற உலமாக்களும் தொழுகையில் ஒரு பெண்ணின் ஆடை எப்படி இருக்க வேண்டும் என்பதைத்தான் விளக்கியுள்ளார்கள்.

இமாம் ஷாபிஈ மற்றும் இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் கூறுகையில், தொழுகையில் முகம் மற்றும் மணிக்கட்டுகள் தவிர என்று கூறுகிறார்கள். இமாம் அபூஹனீபா (ரஹ்) சற்றே அதிகமாக இரண்டு பாதத்தையும் தவிர என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

எவ்விதத் தேவையுமில்லாமல் ஒரு பெண் தன்னுடைய முகத்தைக் காட்டுவதற்கு அவர்களில் ஒருவரும் அனுமதி அளித்ததாக நான் கருதவில்லை.

வாலிபர்களும் தேவையின்றி பெண்களின் முகத்தை பார்ப்பதற்கு அனுமதியளித்திருப்பதாக நான் கருதவில்லை.

*(தய்சீருல் பயான் லிஅஹ்காமில் குர்ஆன் 2/1001)*

## ஹன்பலி மத்ஹபைச் சார்ந்த உலமாக்களின் கருத்துக்கள்:

1. *இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்):*

ஒரு பெண்ணுடைய நகம் கூட மறைக்கப்படவேண்டியதே. அவள் வீட்டை விட்டு வெளியேறினால், அவளது காலுறை உள்பட, அவளின் உடம்பில் எந்த ஒன்றும் வெளிப்படக்கூடாது, ஏனெனில் அவளது காலுறை அவளது பாதத்தை விவரிக்கக்கூடியதாக இருக்கும்.

*(அல் புரூஃ 1/601)*

2. இமாம் இப்னு தைமிய்யஹ் (ரஹ்):

ஹிஜாபுடைய வசனம் இறங்குவதற்கு முன்னர் ஜில்பாப் (மேலாடை) இல்லாமல் அவர்கள் வெளியே சென்றார்கள். ஆண்கள் அவர்களுடைய கையையும் முகத்தையும் பார்க்கும் வகையில் அவர்களது ஆடை இருந்தது. ஒரு பெண்ணுக்கு முகத்தையும் மணிக்கட்டு வரையுள்ள கைப்பகுதியைக் காட்டுவதற்கு அனுமதி இருந்தது. ஹிஜாபின் வசனத்தை அல்லாஹ் இறக்கிய போது அந்நிய ஆண்களை விட்டும் பெண்கள் முழுமையாக மறைக்கப்பட்டார்கள். அந்நிய ஆண்கள் பார்க்கும் வகையில் பெண்கள் முகங்களை காட்டுவது அனுமதியளிக்கப்படவில்லை.

(மஜ்மூஹ் அல் பத்தவா 111-109/22)

3. இப்னுல் கய்யிம் ஜவ்ஸிய்யா (ரஹ்):

அல்லாஹ் அந்நிய ஆண்களை விட்டும் சுதந்திரமான பெண்கள் தங்களை மறைப்பதற்குரிய சட்டத்தை இறக்கினான். அடிமைப் பெண்களுக்கு அது விதிக்கப்படவில்லை.

மறைக்கப்பட வேண்டிய பகுதிகளை (அவ்ரத்) இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. தொழுகையில் மறைக்க வேண்டிய பகுதி
2. பார்வையை விட்டும் மறைக்க வேண்டிய பகுதி

ஒரு சுதந்திரமான பெண்ணுக்கு தொழும் நேரம் முகத்தையும் கைகளையும் காட்டியவாறு தொழலாம். மக்கள் ஒன்று கூடும் இடங்களுக்கு அதே போன்று செல்வது அனுமதிக்கப்படவில்லை.

(இஃலாமுல் முவக்கிஈன் 2/47)

இவ்வாறு தெளிவாக அனைத்து மத்ஹப்களிலும் உள்ள முக்கியமான அறிஞர்கள் அந்நிய ஆண்களுக்கு முன்னால் முகம் மூட வேண்டும் என்று கூறியிருந்தாலும் சிலர் இன்னும் சில மத்ஹப் நூற்களில் முகம் அவ்ரத் இல்லை என்பதாகவும் அதனை கொடுக்கல் வாங்களின் போது திறக்கலாம் என்றும் இடம்பெற்றுள்ளதே என்ற வாதங்களை முன்வைக்கின்றனர்.

இன்னும் சிலர் ஸூரா நூரின், ‘‘வெளியாகும் அலங்காரத்தைத் தவிர’’ என்ற வார்த்தைக்கு அறிஞர்கள், முகம், கை என்ற கருத்துக்களை வழங்கியுள்ளனர் எனக் கூறிவருகின்றனர்.

ஆனால் இவைகள் அந்நிய ஆண்களுக்கு முன்னால் ஒரு பெண் சர்வ சாதாரணமாகத் திறந்துகொண்டு செல்லலாம் என்பதற்காகக் கூறப்பட்டவைகளல்ல.

முகமும் கையும் அவ்ரத் அல்ல என்ற வாதம் முகம் திறக்கலாம் என்பதற்கு ஆதாரமாக அமையாது. ஏனெனில் முகம் அவ்ரத் என்பதனால் மாத்திரம்தான் அதனை மூட வேண்டும் என்று அறிஞர்கள் கூறவில்லை. மாறாக அதன் மூலம் குழப்பம் ஏற்படும் என்பதும் முகம் மூட வேண்டும் என்பதற்கான காரணமாகும். எனவேதான் நாம் மேலே குறிப்பிட்ட சில அறிஞர்களின் கூற்றுக்களில் தொழுகையின் அவ்ரத் வேறு, பார்வையின் அவ்ரத் வேறு என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்து ஸூரா அந்நூரில் இடம்பெறும் வசனம் சலுகையைப் பற்றி மாத்திரமே பேசுகிறதே தவிர விதியைப் பேசவில்லை. எனவேதான் குறித்த வார்த்தைக்கு முகமும் கையும் என விளக்கம் கூறிய இமாம் தபரி உற்பட பல அறிஞர்கள் கூட, ஸூரா அஹ்ஸாபின் 59-வது வசனத்திற்கு விளக்கமளிக்கும் போது அவ்வசனம் முகம் மூடுவதையே குறிக்கின்றது என விரிவுரை செய்துள்ளனர்.



# முக்கியக் குறிப்புகள்

**1.** நபி (ஸல்) அவர்கள் நபித்துவம் கிடைத்த பின்பு 23 வருடங்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அதில் சுமார் 18 வருடங்கள் ஹிஜாபிற்கு முன்புள்ள வாழ்க்கையாகும். காரணம் ஹிஜாப் ஹிஜ்ரி 5-ம் ஆண்டு கடமையாக்கப்பட்டு அதன் பின்பு நபியவர்கள் 5-வருடங்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அந்த 18 வருட காலங்களில் முகத்தைத் திறந்தவர்களாகவும் ஆண், பெண்கள் கலப்படமாகவும் வாழ்ந்திருப்பார்கள். எனவே, அந்தக் காலங்களில் நடைபெற்ற நிகழ்வுகளை நாம் ஹிஜாபுடைய சட்டம் கூறப்பட்டதன் பின்பு முகம் திறப்பதற்கோ, கலப்படமாக இருப்பதற்கோ ஆதாரமாக எடுக்க முடியாது. இது போன்ற தகவல்கள் ஏராளமாக உள்ளன.

**2.** பெண்கள் முகத்தை மறைக்க வேண்டுமென்ற சட்டத்தை அந்நியர்கள், முழு நேரமும் ஒரு பெண் தன்னை மறைத்துக்கொண்டிருப்பது போல் விளங்கி வைத்துள்ளார்கள். அது தவறாகும். வெளியில் செல்லும் நேரத்திலும், அந்நிய ஆடவர்களுக்கு முன்னிலையிலும் தவிர ஏனைய நேரங்களில் அவள் விரும்பிய பிரகாரம், முகத்தைத் திறந்து, சாதாரண ஆடையுடன் நடமாடுவதற்கு இஸ்லாம் அனுமதி வழங்கியுள்ளது. இதனால்தான் வெளியில் முகம் மூடிய நிலையில் கருப்பு ஆடையில் செல்லும் முஸ்லிம் பெண்கள் தமது வீடுகளில் அல்லது பெண்கள் மாத்திரம் இருக்கும் இடங்களில் தமக்கு விருப்பமான அழகிய ஆடைகளை அணிந்துகொள்கின்றனர்.

**3.** ஒரு பெண் வற்புறுத்தலுக்காக, நிர்ப்பந்தமாக, பாதுகாப்புப்படையினர் சோதனைக்காக, வைத்தியரிடம் நோய் பரிசோதனைக்காக திறப்பது இஸ்லாத்தில் ஆகுமான காரியமே. இவை தவறாகக் கருதப்படமாட்டாது.

இவைகள் சலுகைகளே தவிர சட்டம் கிடையாது. எனவே முகத்தை மறைப்பது இபாதத் என்பதில் எந்த விதமான மாற்றுக் கருத்தும் கிடையாது. இதன் சட்டம் வாஜிபாக அல்லது சுன்னத்தாக இருக்கும்.

இதனைப் பின்பற்றி செயல்படுத்துபவர்களுக்கு நன்மையே தவிர தண்டனை கிடையாது என்பதை நாம் தெளிவாக விளங்க வேண்டும்.

4. முகம் மூடுவது வாஜிப் அல்லது சுன்னத் என்ற சட்டம் கியாமநாள் வரைக்கும் மாறமாட்டாது. முஸ்லிம் அல்லாத நாடுகளில் இதனால் பிரச்சினை ஏற்பட்டால் விதிவிலக்கின் அடிப்படையில் தவிர்ந்துகொள்ளலாம். அதனால் குறித்த சட்டத்தையே மாற்றியமைக்க முற்படக்கூடாது.

# முடிவுரை

அல்லாஹ்வின் பேருதவியால் முகம் மூடுவது வணக்கமா அல்லது வழக்கமா? என்ற இந்த நூலை எழுதிமுடிக்க வாய்ப்பளித்த வல்ல அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

இந்நூலின் இறுதியாக பின்வரும் முக்கியமான விஷயங்களை நாம் கவனத்தில் கொள்வது மிக பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

1. முழுமையாக மறைத்துக்கொள்வதன் மூலம் நோயுள்ளம் படைத்தவர்களின் தீங்கிலிருந்து பெண்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம். அவர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள் என்பதனால்தான் இச்சட்டம் விதியாக்கப்பட்டுள்ளது.

2. ஹிஜாப் பற்றி தவறாகப் புரியப்பட்ட பல கருத்துக்களுக்கும் மேலும் தவறாகப் புரியப்பட்ட பல ஆதாரங்களுக்கும் இதில் மறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

3. இவ்விடயத்தில் விதிவிலக்குப் பெற்றவர்கள் சிலர் இருக்கின்றார்கள். அவர்கள் முகத்தை மறைக்கத் தேவையில்லை. ஆனால் அதை பொதுவிதியாக்குவது தவறாகும்.

4. இவ்விடயத்தில் கருத்து வேற்றுமையுள்ளது என்று கூறி நாம் விரும்பிய கருத்துக்களை நுழைப்பது தவறாகும். இக்கருத்து வேற்றுமையென்பது கடமையா, சுன்னத்தா என்ற இரண்டு கருத்துக்கள் மட்டுமே. மூன்றாவது கருத்துக்கு இடமில்லை.

5. மேற்கத்திய பெண்களில் எங்களுக்கு முன்மாதிரி கிடையாது. அவர்கள் இவ்வுலகை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு வாழ்பவர்கள். ஆனால் முஸ்லிம் பெண்கள் மறுமையை இலக்காகக் கொண்டு வாழ்பவர்கள். இஸ்லாத்தை நேசிக்கும் பெண்கள் இச்சட்டத்தை வாழ்க்கையில் கடைபிடிப்பார்கள்.

6. ஒரு சாராருக்குக் கடமை இன்னொரு சாராருக்கு ஹராம்

என்ற எந்தவொரு விடயமும் இஸ்லாமிய சட்டவியலில் கிடையாது என்பதைப் புரிந்துகொள்வதே முகம் மூடுவது ஹராம் என்ற கருத்து எவ்வளவு பாரதூரமானது என்பதைப் புரிந்துகொள்வதற்குப் போதுமானதாகும்.

7. முகம் திறப்பது ஹராம் என்பதற்கு எவ்வித ஆதாரமும் குர்ஆன் ஹதீஸிலும் கிடையாது. எந்தவொரு அறிஞரும் அவ்வாறு இஸ்லாமிய வரலாற்றில் கூறியது கிடையாது. ஆனால் முகம் மூட வேண்டும் என்பதற்கு பல ஆதாரங்கள் இருந்தாலும், எல்லோரும் ஏற்றுக்கொண்ட நபியவர்களின் மனைவிமார் முகம் மூட வேண்டும் என்ற ஆதாரம் உள்ளது. ஒரு சட்டம் பொதுவானது என்ற விதியின் அடிப்படையில் அனைவரும் முகம் மூட வேண்டும் அல்ல நன்மைக்குரிய காரியம் என்பதே பலமான கருத்தாகும். அச்சட்டம் பிரத்யேக சட்டம் என்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை.

இந்நூலில் உள்ள சரியான கருத்துக்கள் அனைத்தும் அல்லாஹ்வின் உதவியினால் கிடைத்தவையாகும். தவறுகள் இருப்பின் அவைகள் என் மூலமாக ஏற்பட்டவையாகும்.

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். நபி (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார்கள், நபித்தோழர்கள், நல்லடியார்கள் எல்லோர் மீதும் அல்லாஹ்வின் ஸலாத்தும் ஸலாமும் உண்டாகட்டும்.

# உதவிய நூல்கள்

1. அல் குர்ஆனுல் கரீம்
2. ஸஹீஹுல் புகாரி
3. ஸஹீஹ் முஸ்லிம்
4. சுனன் அபீ தாவூத்
5. சுனனுத் திர்மிதீ
6. சுனனுன் நசாஈ
7. சுனன் இப்னி மாஜாஃ
8. சுனன் அஹ்மத்
9. சுனன் ஃகுஸைமா
10. முஸ்தத்ரகுல் ஹாகிம்
11. அஃத் ஃதிகாது - இப்னு ஹிப்பான்
12. ஸீரதுப்னி ஹிஷாம்
13. அஸ்ஸீரதுன் நபவிய்யா - இப்னு கஸீர்
14. அத்தம்ஹீது - இப்னு அப்தில் பர்
15. அல் ஹிஜாபு ஃபிஸ் ஸர்இ வல் ஃபித்ரா
16. ஹிராசதுல் பழீலா - பக்ர் அபூ ஸைத்
17. அல் கஸ்ஸாஃபு - ஸமஃக்ஸரீ
18. இர்ஷாதுல் அக்லிஸ் ஸலீம் - அபூ சுஊத்
19. அல் இக்லீலு - சுயூதி
20. அன்வாருத் தன்ஸீல் வ அஸ்ராருத் தஃவீல் - பய்ளாவி
21. அல்கஷ்பு வல் பயான் - ஃதஃலபீ

22. பஹ்ருல் உலூம் - சமர்கன்தி
23. நழ்முத் துரர் - புர்ஹானுத்தீன் அல் பகாயி
24. தஃப்ஸீருல் இஸ் பின் அப்துஸ்ஸலாம்
25. மதாரிகுத் தன்ஸீல் வஹகாஇகுத் தஃவீல் - நசபி
26. அத்தஸ்ஹீலு லிஉலூமித் தன்ஸீல்- இப்னு ஜுஸைய்
27. தப்ஸீரு அப்திர்ரஸ்ஸாக்
28. ஜாமிஉல் பயான் பீ தஃவீலில் குர்ஆன்- இப்னு ஜரீர் அத்தபரீ
29. அஹ்காமுல் குர்ஆன்- குர்துபி
30. தப்சீருல் குர்ஆனில் அளீம் - இப்னு அபீ ஹாதிம்
31. அஹ்காமுல் குர்ஆன் - இப்னுல் அரபி
32. அஹ்காமுல் குர்ஆன் - அல் ஜஸ்ஸாஸ்
33. அல்வாஉல் பயான் - ஷின்கீதி
34. பத்ஹுல் பாரீ - இப்னு ஹஜர்
35. அவ்ததுல் ஹிஜாப் - முஹம்மத் இஸ்மாஈல் முகத்தம்
36. அத்தலலலதுல் முஹ்கமா- லுத்புல்லா ஹுஜா
37. இல்ஹாருல் ஹக்கி வஸ்சவாபி பீ ஹுக்மில் ஹிஜாப் - சஃத் அல் கஹ்தானி
38. அல் காமில் பித்தாரீஹ்- இப்னு கஸீர்
39. அல முன்தலம் பீ தாரீஹில் முலூக்கி வல் உமமி- இப்னுல் ஜவ்ஸி
40. மீஸானுல் இஃதிதால் - அத்தஹபி
41. அல்இத்கானு பில் உலூமில் குர்ஆன் - சுயூதி
42. அல் உஜாப் பில் பயானில் அஸ்பாப் - இப்னு ஹஜர் அஸ்கலானி

IslamHouse.com

IslamHouse-Tamil @IslamHouseTa IslamHouseTa https://islamhouse.com/ta

For more details visit
www.GuideToIslam.com

GUIDE TO ISLAM

contact us :Books@guidetoislam.com

GuidetoIslam.org Guidetoislam1 Guidetoislam www.Guidetoislam.com

المكتب التعاوني للدعوة وتوعية الجاليات بالربوة
هاتف : ٩٦٦١١٤٤٥٤٩٠٠+ فاكس : ٩٦٦١١٤٩٧٠١٢٦+ ص ب : ٢٩٤٦٥ الرياض : ١١٤٥٧
ISLAMIC PROPAGATION OFFICE IN RABWAH
P.O.BOX 29465 RIYADH 11457 TEL: +966 11 4454900 FAX: +966 11 4970126

# பெண்கள் முகம் மறைப்பது வணக்கமா? வழக்கமா?

## ஐயங்களும் தெளிவுகளும்

இந்நூலானது பெண்கள் முகம் மூடுவது தொடர்பாக வழிதவறிச் சென்று, அது ஹராமெனவும், நபி (ஸல்) அவர்களது மனைவியருக்கு மத்திரம்தான் இந்தச் சட்டமென்பதாகவும் கூறிக்கொண்டிரிப்போருக்கு மறுப்பாக எழுதப்பட்டுள்ளது. அவர்கள் முன்வைக்கும் சந்தேகங்களை நூலாசிரியர் விரிவாகக்கூறி, அதற்கான பதில்களை அல்குர்ஆன், ஸுன்னா ஆதாரங்களுடன், ஸலபுகளின் கூற்றையும் பயன்படுத்தி தெளிவாக விளக்கியுள்ளார்.




IslamHouse.com
Osoul Center
www.osoulcenter.com
Rabwah